YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
ஜன 07 - 13
ஓசை : 01 நாதம் : 10 வெள்ளிக்கிழமை 07.01.2011 வார இதழ் விலை : ரூபா 15.00

# யாழ்.தற்போதைய நிலைமையை வைத்து சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தி ஏற்படுத்த சதி



பொம்மைவெளி பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லிம் மக்கள் பாழடைந்த கட்டங்களிலேயே காலத்தை கழித்து வருகின்றனர். அங்கு அடிப்படை வசதிகளற்ற நிலையில் பெண் ஒருவர் சமையலில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

## உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்கிறார் கெஹெலிய

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமையை வைத்து சர்வதேசமட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும் இலங்கையை அசௌகரியத்துக்கு உள்ளாக்கவும் திட்டமிடப்பட்ட சதி முயற்சி ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பை அரசாங்கம் முழுமையாக ஏற்பதோடு நாட்டுக்கு எதிராக சதி முயற்சியில் ஈடுபடுகின்ற தரப்புக்கள் தொடர்பிலும் அரசாங்கம் ஆராயும் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது, யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் (6 ஆம் பக்கம் பார்க்க)

# மாதகல் கடற்பரப்பினுள் அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவப் படகுகள்

## உள்ளூர் மீனவரின் தொழில் பாதிப்பு

யாழ்.குடா நாட்டின் வலி. மேற்குப் பகுதியிலுள்ள மாதகல் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் பாரிய மீன்பிடி படகுகள் அத்துமீறி உள்நுழைந்து மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதால் உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பதிக்கப்படுவதாக மாதகல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பீற்றர் அமலதாஸ் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நேற்று முன்தினம் இரவு மாதகல் கடற்பரப்புக்குள் உள்நுழைந்த இந்திய மீனவர்களின் 5 றோலர் படகுகள் நீண்ட நேரமாக கடலில் நின்று மீன் பிடித்தன. இப் பாரிய படகுகளின் வருகையினால் உள்ளூர் மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டு சேதமாகியுள்ளதுடன் இவர்களின் தொழிலுக்கு (6ஆம் பக்கம் பார்க்க)


# குட்டை பாவடைக்கு ஓகே.

இலங்கையில் குட்டை பாவாடைகள் அணிவதை அரசாங்கம் தடுக்கப்போவதாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எவ்விதமான உண்மையும் இல்லை. வளர்ச்சியடைந்து வரும் சுற்றுலாத்துறையை முடக்கும் நோக்கில் இவ்வாறு பொய்யான பிரசாரங்கள் (6ஆம் பக்கம் பார்க்க)

# திரைப்பட பாணியில் தமிழக முதல்வர் கருணாநிதியின் குடும்பச் சண்டை

## 'வில்லன் பாத்திரத்தில் அழகிரி'

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் குடும்பச் சண்டை தற்போது திரைப்பட பாணியில் ஆரம்பித்துள்ளது. இதில் சகோதரிக்கு எதிராக வில்லன் பாத்திரம் ஏற்றுள்ளார் மு.க. அழகிரி. ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக தி.மு.க.வில் பூகம்பம் வெடித்துள்ளது. ராஜா, கனிமொழி ஆகியோருக்கு எதிராக பகிரங்கமாக போர்க்கொடி உயர்த்தியுள்ளார் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி. மேலும் தனது ராஜினாமா கடிதத்தையும் அவர் (6 ஆம் பக்கம் பார்க்க)



புதுவருடத்தில் புதுப்பொலிவுடன்....

JEYECHANDRANS

No.433, Galle Road, Colombo-06 Tel:011-4528438/0114528435

www.jeyechandrans.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டிலாவது எமது பிள்ளைகளை பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## அரசியல் கைதிகளின் பெற்றோர் பாதுகாப்பு செயலருக்கு கடிதம்

(நமது நிருபர்)

பிறந்திருக்கும் புத்தாண்டிலாவது எமது பிள்ளைகளை பிணையிலாவது விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரி தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் போதும் அதன் பிற்பாடும் பல்வேறு காரணங்களுக்காக பயங்கரவாதம் மற்றும் அவசரகால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் எமது பிள்ளைகள் மிக நீண்ட காலமாக துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிறந்திருக்கும் புதிய புத்தாண்டிலாவது அவர்களைப் பிணையிலோ அல்லது பொது மன்னிப்பிலோ விடுதலை செய்து எமது வாழ்வில் வசந்தம் மலர வையுங்கள்.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தில் நாம் பாதிக்கப்பட்டு நாம் அனைத்தையும் இழந்து போய் உள்ள நிலையிலும் கூட எமக்கு நல்ல எதிர்காலம் உதயமாகும் என்று தங்களின் நல்லெண்ண நடவடிக்கை ஊடாக எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம்.

நாங்கள் உங்களில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றோம். யுத்தம் முடிந்து விட்டது. நிம்மதியாய் இருப்போம் என்று நினைக்கும் போது எமது பிள்ளைகள் சிறையில் நீண்ட காலமாய் எவ்வித முடிவுமின்றி ஒன்று தொடக்கம் பதினெட்டு வருடங்களாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை நினைக்கும் போது நாம் இனி உயிர் வாழ்வது ஏன்? என்ற விரக்தியுடனும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் எண்ணியெண்ணி உயிர் வாழ்கின்றோம்.

நாளாந்தம் கண்ணீரும் கம்பலையுமே எமக்கு சொந்தமாகி விட்டன. உடைமைகளை இழந்த நாம் எமது உறவுகளையும் இழந்து விடுவோமா? என எண்ணத் தோன்றுகின்றது.

பிள்ளைகளைக் காணாது பெற்றோரும் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் கணவனைக் காணாது மனைவியும் யாருடைய அரவணைப்புமின்றி அநாதை போல் அன்றாட செலவுகளையே சமாளிக்க முடியாமல் உழைத்துத் தர யாரும் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையிலேயே குடும்பம் நடத்துகின்றோம். சிறையில் வாடும் தாய் தந்தையரின் அரவணைப்பின்றி அவர்களின் பாசத்துக்காக ஏங்கும் எம் குழந்தைகளின் ஏக்கங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.

சிறு வயதில் ஒரு குழந்தைக்குத் தாய் தந்தையரின் அன்பும் அரவணைப்பும் எவ்வளவு முக்கியம் என்பது தங்களுக்கும் புரியும். வயதான பெற்றோரும் அவர்களின் கடைசிக் காலத்தின் ஆறுதலுக்கும் அவர்களைப் பராமரிக்கக் கூட யாருமில்லாமல் மன அழுத்தங்களுடன் எம் இடத்தில் வாழ்கின்றனர்.

எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் எமது பிள்ளைகளின் கையில் தங்கியிருக்கையில் எம் பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் என்னவாவது? எங்கள் நிலைமையை எண்ணிப் பாருங்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ்க் கைதிகளில் குற்றமற்றவர்களை உடன் விடுதலை செய்யவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டியவர்களை பிணையில் விடுவிக்கவும் நடவடிக்கை சட்டமா அதிபர் தெரிவிப்பு என செய்தி வெளியாகி இருந்தது.

ஆனால் தற்போது தேர்தல் முடிந்து ஒரு வருடமாகின்றது. யுத்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் எமது பிள்ளைகளுக்கு விடுதலை எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு பிணையும் கிடைக்கவில்லை.

எனவே கைதிகளின் பெற்றோர்களாகிய நாம் மிகுந்த வருத்தத்துடனும் வேதனையுடனும் விரக்தியான மன நிலையிலேயே இந்தக் கடிதத்தை தங்களுக்கு அனுப்புகின்றோம். தாங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற ரீதியில் தங்களுக்குள்ள சிறப்பு உரிமையைப் பயன்படுத்தி எங்கள் பிள்ளைகளை விடுதலை செய்ய ஆவன செய்யுங்கள் அல்லது பிணையிலாவது விடுதலைசெய்ய நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## இலங்கை தமிழ் மாணவர்களுக்கு உதவ ஒப்பந்தம்

சென்னை,

"இலங்கை தமிழ் மாணவர்களுக்கான கல்விக்கு உதவுவதற்காக சென்னை பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்" என சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் திருவாசகம் தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழக இதழியல் மற்றும் தொடர்பியல் துறை சார்பில், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இதழியல் மாணவர்களுக்கான 'தமிழ் இதழியல்' புத்தாக்கப் பயிற்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்நிகழ்வை ஆரம்பித்த வைத்து பேசிய சென்னை பல்கலை துணைவேந்தர் திருவாசகம்,

பல்கலைக்கழகங்கள் உலகளாவிய கல்விக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். சென்னை பல்கலையில் 140க்கும் மேற்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் படிக்கின்றனர். அதில், 20க்கும் மேற்பட்டோர் இலங்கை தமிழ் மாணவர்கள். இலங்கை மாணவர்களுக்கு, இந்திய மாணவர்களுக்கு இணையாக கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. சென்னை பல்கலைக்கழகத்திற்கும், 'பிரான்ஸின் ஏங்கர்ஸ்' பல்கலைக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகவுள்ளது. இதன்படி, 'ஏங்கர்ஸ்' பல்கலையின் எம்.பி.ஏ. மாணவர்கள் ஐந்து பேர், இந்திய வரலாற்று மாணவர்கள் ஐந்து பேர் சென்னை பல்கலையில் படிக்க வேண்டிய வசதிகளை சென்னை பல்கலை செய்யும்.

சென்னை பல்கலையின் மேலாண்மைத் துறை மாணவர்கள் ஐந்து பேர், இசைத்துறை மாணவர்கள் ஐந்து பேர் 'ஏங்கர்ஸ்' பல்கலையில் படிக்கத் தேவையான வசதிகளை 'ஏங்கர்ஸ்' பல்கலை செய்யும். இதில், கட்டண சலுகையுடன் மாணவரின் விமானச் செலவும், தங்கும் இடம் உணவு ஆகியவையும் இடம் பெறும்.

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருந்த இந்தியா கல்வியால் தான் தலை நிமிர்ந்துள்ளது. இலங்கை தமிழ் மாணவர்களுக்கான கல்விக்கு உதவுவதற்காக சென்னை பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும். அவர்களது பாடத்திட்டத்தில் தேவையான மாற்றங்கள் செய்து தரப்படும். அம்மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கவும், சென்னை பல்கலை கட்டட வசதிகளை பயன்படுத்தவும், ஆண்டிற்கு இரண்டு முறை தொடர்பு வகுப்புகளில் பங்கேற்கவும் தேவையான வசதிகள் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

## தனிப்பட்ட விசாரணை மேற்கொள்ளும் நோக்கில் இலங்கை வருவதற்கு ஐ.நா. குழுவுக்கு விசா இல்லை

### அமைச்சரவை பேச்சாளர் உறுதியாக தெரிவிப்பு

இலங்கை தொடர்பில் ஆலோசனை பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழு தனிப்பட்ட விசாரணை மேற்கொள்ளும் நோக்கில் இலங்கைக்கு வருவதற்கு ஒருபோதும் விசா வழங்கப்படமாட்டாது.

மாறாக கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் நோக்கில் வருவதற்கு விசா வழங்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அதில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது,

இலங்கை தொடர்பில் ஆலோசனை பெற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர்குழு தொடர்பிலும் அதன் இலங்கை விஜயம் தொடர்பிலும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

அதாவது, கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் நோக்கில் ஐ.நா. குழு இலங்கை வருவதற்கு விசா வழங்கப்படும். அது தொடர்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளை கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னெடுக்கும். நல்லிணக்க ஆணைக்குழு என்பது ஒரு சுயாதீன அமைப்பு. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்தினால் அந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழு தனிப்பட்ட விசாரணை மேற்கொள்ளும் நோக்கில் இலங்கைக்கு வருவதற்கு ஒருபோதும் விசா வழங்கப்படமாட்டாது. இதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

அவ்வாறான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை. புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் புலம் பெயர் தமிழ் மக்கள் கூட கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையில் வந்து சாட்சியமளிக்கலாம்.

## மீளக்குடியமர்த்தப்படாத நிலையில் கிளி. மத்திய கல்லூரியில் 36 குடும்பங்கள்

கிளிநொச்சி,

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இயங்கும் இடைத்தங்கல் நிலையத்தில் மீளக் குடியேற்றம் செய்யப்படாத நிலையில் 36 குடும்பங்கள் வரை தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தங்களை தமது சொந்த ஊருக்குச் சென்று வசிக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளோரில் கிளிநொச்சி நகர் பிரிவைச் சேர்ந்த 20 குடும்பங்களும் மலையாளபுரத்தைச் சேர்ந்த 9 குடும்பத்தினரும் மருதநகரைச் சேர்ந்த 7 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து தங்கவைக்கப்பட்டிருந்த பரவிப் பாஞ்சான் மற்றும் மலையாளபுரம் , மருதநகர் உட்பட்ட பல கிராமங்களைச் சேர்ந்த 500 க்கும் அதிகமான குடும்பங்கள் இந்த இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த போதும் இவர்களில் கூடுதலான குடும்பங்கள் சொந்தக் கிராமங்களில் மீளக்குடியேற்றப்பட்டதுடன் பலர் மீளக்குடியமர முடியாத நிலையில் இடைத்தங்கல் நிலையத்தில் இருந்தும் விடுபட்டு உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் தற்போது கிளிநொச்சி மத்திய கல்லூரியிலுள்ள இடைத்தங்கல் முகாமில் 36 குடும்பங்கள் வரை தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடீஸ்வரனான பிச்சைக்காரன்



கோடிஸ்வரரான பின்பு

டெட் வில்லியம்ஸ் என்பவர் கொலம்பஸ், ஓஹியோ பகுதிகளில் கையில் சிறிதும் காசின்றி தெருக்களில் பிச்சை எடு த்து வாழ்ந்து வருபவர். மதுப் பழக்கத்திற்கும் அடிமையானவர். ஆனால் இவரி டம் உள்ள விலை மதிக்கமுடியாத சொத்து இவரின் குரல். முன்பு வானொலி அறிவிப்பாளராகப் பணியாற்றிய இவர் பிச்சையெடுத்து வாழக் கூடாது எனக் கருதி திடீரென புதிய யுக்தி ஒன்றை கையாண்டுள்ளார். தான் வானொலி அறிவிப்பாளராக பணியாற்றியுள்ளதையும் கடவுள் கொடுத்த மிகச்சிறந்த சொத்தான குரல் தன்னிடம் இருப்பதையும் ஒரு சிறிய அட்டையில் எழுதி வைத்து மக்கள் கூடும் பகுதிகளுக்கு தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளார் வில்லியம்ஸ்.


கோடிஸ்வரனாகும் முன்பு

தனக்கு வேலைகொடுத்து உதவுபவர்களுக்கு கடமைப்பட்டிருப்பதாகவும் அதில் தெரிவித்துள்ளார். இதைக் கண்ட நாளிதழ் ஒன்று அவரிடம் பேட்டி எடுத்து அதனையும் வெளியிட்டுள்ளது. பேட்டியில் வில்லியம்ஸ் தொகுத்து வழங்கிய சில நிகழ்ச்சிகளும் வெளியிடப்பட்ட பின் பல நிறுவனங்கள் அவருக்கு போட்டிபோட்டுக் கொண்டு வாய்ப்பளிக்க முன் வந்துள்ளன.

தற்போது மதுபானம் அருந்துவதை குறைத்துக் கொண்டு சிறப்பாக பணியாற்றி கோடிகளை குவித்து வருகிறார் வில்லியம்ஸ். பல முன்னணி தொலைக்காட்சி நிறுவனங்களும் தற்போது தங்கள் நிறுவனத்தில் பணியாற்றுமாறு வில்லியம்ஸிடம் கேட்டு வருகின்றன.

# வீடு கொள்ளை போகும் அச்சத்தால் பலரும் வெளியேற மறுப்பு



அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள ராக்ஹேம்ப் டன் நகரில், இன்னும் இரண்டு நாட்க ளில் வெள்ளம் மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. ஆயினும், இந்த நிலைமையிலும் கூட மக்கள் தங்கள் வீட்டை விட்டு வெளியேற மறுத்து வரு கின்றனர்.

ராக்ஹேம்ப்டன் நகர் அருகில் ஓடும் பிட்ஜ்ரோய் ஆற்றின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 9.2 மீற்றர் வரை (30 அடி) இருந்தது. இன்னும் இரண்டு நாட்களில் கனமழை மற்றும் சூறாவளி ஏற்பட வாய்ப்பிருப்பதால், இந்த நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் என்றும், நகரின் தென் பகுதியில் உள்ள புனித ஜோர்ஜ் பகுதியின் 80 சதவீதம் இன்னும் ஒரு வாரத்தில் வெள்ளத்தில் மூழ்கும் என் றும் வானிலை அதிகாரிகள் எச்சரித்து ள்ளனர். இதுவரை அங்கு ஆயிரத்து 200 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ள நிவாரணப் பணியில் ஈடுபடுவ தற்காக, சிறப்புப் படை ஒன்று அமைக் கப்பட்டுள்ளது.

இது குறித்து, செய்தியாளர்களிடம் பேசிய குயின்ஸ்லாந்து மாகாண முதல் அளவிற்கு பேரழிவு நிகழ்ந் திருக்கிறது. அதனால் மீட்பு மற்றும் மறுசீரமைப்பும் மிகப் பெரிய அளவில் முன்னெடுக் கப்பட வேண்டும். அது மிக வும் சிக்கலும் கூட. ஒரு மர தன் ஓட்டத்துக்கு சமமான முயற்சி என்றார்.

பல வரலாற்று சிறப்பு மிக்க கட்டடங்களைச் சுற்றிலும், மணல் மூட்டைகள் அடுக்கப் பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் மக்கள் பாம்புகளும், முதலைகளும் வெள்ளத்தில் நீந்தி வருவதை நேரில் பார்த்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வெள்ளம் மேலும் உய ரும் என்று எச்சரித்த பின்பும், மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற மறுப்பதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ராக்ஹேம்ப்டன் நக ரில் உள்ள வீடுகள் மரத்தாலானவை. தரை மட்டத்தில் இருந்து பல அடி உய ரத்தில் அமைந்தவை.

அதனால், வெள் ளம் பெருகினாலும் வீட்டின் அடிப்பகு தியில் செல்லுமே தவிர வீட்டுக்குள் பெருமளவில் புகாது. அதனால் வீட்டின் வாசல்களில் அமர்ந்த படி தேநீர் அருந்திக் கொண்டு, நாளிதழ் படித்தபடி தங்கள் பொழுதைக் கழிக் கின்றனர். கொள்ளைக் கும்பல்கள், காலி யான வீடுகளுக்குள் புகுந்து அனைத் தையும் சுருட்டிக்கொண்டு போய்விடு கின்றனர். பொலிஸாரும் இச்செய்தி உண்மைதான் என்று உறுதிப்படுத்தி யுள்ளனர். இதனாலும் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற மறுக்

# நவநாகரிகமாக இருந்ததற்காக மகளைக் கொன்ற ஈராக்கிய தந்தை

தனது 20 வயது மகள் நவநாகரிகமாக இருப்பதாகக் குற்றம் சாட்டி அவளை கொலைசெய்துள்ளார் ஈராக்கில் இருந்து அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த தந்தை ஒருவர்.

ஈராக்கில் இருந்து வந்து பீனிக்ஸில் குடியேறியவர் பாலே ஹசன் அல்மலேகி (50). இவரது மகள் நூர் அல்மலேகி (20). ஹசன் தனது மகள் மேற்கத்திய மோகம் கொண்டிருப்பதாகக் குற்றம்சாட்டி அவள் மீது ஜீப்பை ஏற்றிவிட்டார்.


இச் சம்பவம் கடந்த 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்தது.

ஜீப் ஏறியதால் படுகாயம் அடைந்த நூர் 2 வார காலமாக கோமாவில் இருந் தார். பின்னர் சிகிச்சை பலனின்றி பரி தாப மாக உயிர் இழந்தார்.

இந்த கௌரவக் கொலை குறித்து நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த சம்பவத்தில் இன்னொரு பெண்ணும் காயம் அடைந்தார்.

இந்த வழக்கில் குற்றவாளி என்று தீர்ப் பளிக்கப்பட்டால் ஹசனுக்கு ஆயுள் தண் டனை கிடைக்கும். இவ்வழக்கு விசா ரணை எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்ப மாகிறது.

# இறக்கையை ஆயுதமாக பயன்படுத்திய பறவை



வரலாற்று காலத்துக்கு முன்பு இருந்த ஒரு பறவை தனது இறக்கையை சண் டையின் போது ஆயுதமாக பயன்படுத்தி யதாக பறவை வல்லுநர்கள் கண்டுபிடித் துள்ளனர். இபிஸ் குடும்பத்தைச் சேர்ந்த ஜெனிசிபிஸ் என்ற இந்த பறவை, ஜமை க்காவில் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வசித்ததாக யேல் பல்கலை க்கழ கம் மற்றும் ஸ்மித்சோனியன் நிறுவன ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டுபிடித் துள்ளது. இந்த பறவைக்கு கை போன்ற சிறப்பான இறக்கை இருந்துள்ளது. எதிரி கள் யாராவது தாக்க முற்பட்டால் இந்த இறக்கையைப் பயன்படுத்தி விரட்டி வந் துள்ளது. வேறு எந்த பறவைக்கும் இது போன்ற இறக்கை இருந்ததாக தெரிய வில்லை என ஆராய்ச்சிக்கு தலைமை வகித்த யேல் பல்கலைக்கழக நிபுணர் நிக்கோலஸ் லாங்ரிச் தெரிவித்தார்.

# இரு சிங்கங்களுடன் ஒரு கூண்டில் வசிக்கும் அதிசய மனிதர்



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத் தைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒரு மாத காலத்துக்கு சிங்கங்கள் இரண்டு அடை க்கப்பட்டு இருக்கும் கூண்டு ஒன்றில் வசிக்க உள்ளார். இவர் வன விலங்குகள் காப்பகம் ஒன்றை நடத்துகின்றார்.

இதை நடத்த பணம் தேவைப் படுவதனாலேயே இப்படி ஒரு துணிகரச் செயலில் இறங்குகின் றார். இவர் கடந்த சனிக் கிழமை சிங்கங்கள் அடைக்கப்பட் டிருக்கும் கூண்டுக்குள் பிரவே சித் தார். இரு சிங்கங்களுக்கும் அருகில் படுத்து உறங்குவார் என்றும் அவை சாப்பிடும் போது சாப்பிடுவார் என்றும் அறிவித்து உள்ளார்.



பலஸ்தீனத்தின் காஸா பகுதிக்கு வருகை தந்த முன்னாள் அமெரி க்க அட்டார்னி ஜென ரல் ராம்சே கிளா ர்க் (இடது), ஹமாஸ் அமைப் பின் பிரதமர் இஸ் மாயில் ஹெனியா க்கை அவரது அலு வலகத்தில் சந்தி த்து பேசுவதை பட த்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaal Osai
யாழ் ஓசை
2011 ஜனவரி 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# யாழ். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது யார்?

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு மாத காலமாக அதிகரித்துள்ள கொலை, கொள்ளை மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்களால் மக்கள் பீதியின் உச்சத்திற்கே சென்றிருக்கிறார்கள். வீடுகளில் நிம்மதியாகத் தூங்கவோ, தேவைகளின் நிமித்தம் வெளியில் இறங்கி நடமாடவோ முடியாத நிலைக்கு யாழ். மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இயல்பு வாழ்வு திரும்பிக் கொண்டிருக்கின்ற இச் சூழ்நிலையில் மீண்டும் வன்முறைகள் தலைதூக்குவதானது யாழ்ப்பாணத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தொடராக இடம்பெற்றுவரும் இச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத நிலையில் இது தொடர்பில் நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது.

கடந்த இரு மாத காலங்களில் இடம்பெற்ற சகல வன்முறைச் சம்பவங்களையும் பட்டியலிட்டு கவனயீர்ப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்த கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, இச் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தார்.

அத்துடன் படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ்ப்பாணத்தில் படையினருக்குத் தெரியாமல் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதன் மர்மம் என்ன எனவும் அவர் கேள்வியெழுப்பியிருந்தார்.

இருந்தபோதிலும் கூட்டமைப்பின் கவனயீர்ப்புப் பிரேரணைக்கு அரசாங்கம் உடனடியாகப் பதிலளித்திருக்கவில்லை. இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கால அவகாசம் தருமாறும் அதன் பின்னரே பதிலளிக்க முடியும் எனவும் சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி, யாழ். வன்முறைச் சம்பவங்கள் மீண்டும் வடக்கில் பயங்கரவாதம் தலை தூக்கவே வழிவகுக்கும் எனவும் சர்வதேச நாடுகள் இலங்கை மீது மீண்டும் அழுத்தங்களைப் பிரயோகிக்க இச் சம்பவங்கள் வழிவகுத்துவிடும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந் நிலையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த படையினர் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனும் குற்றச்சாட்டுக்களும் மேலெழுந்துள்ளன. இருப்பினும் இக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க, பொலிசாரின் உதவியுடன் இராணுவத்தினர் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பெரும்பாலான வன்முறைச் சம்பவங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்பத் தகராறுகளின் விளைவாகவே இடம்பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

எது எப்படியிருப்பினும் யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் மோசமடைந்து செல்லும் பாதுகாப்பற்ற சூழ்நிலையை மாற்றியமைத்து மக்கள் மீண்டும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான பட்டியலை ஆராய்ந்து அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதும் இதன் பின்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதுமே இன்று அரசாங்கத்தின் முன்னுள்ள தலையாய பணியாகும்.

எனவே இது தொடர்பில் அரசாங்கமும் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளும் படையினரும் ஒன்றிணைந்து வன்முறைகளை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

# சீன - இலங்கை உறவு பொற்காலத்தில் இந்திய - இலங்கை உறவு சமரசத்தில்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இத்தகைய நிலையை மேலை நாடுகளின் இலங்கை மீதான கொள்கை ஊடாக புரிந்து கொள்வது இலகுவாக இருக்கும். மேலை நாடுகள் என்று குறிப்பிடும் போது குறிப்பாக அமெரிக்க இராஜதந்திரிகள் இலங்கை தெற்காசியாவின் வடகொரியாவாக மாற்றம் பெற அனுமதிக்க கூடாது என்பதில் திடமாக இருக்கிறனர்.

போருக்கு பின்னான இலங்கை மீதான அமெரிக்க சூழ்ச்சி மீளமைப்பு அறிக்கையிலும், அமெரிக்க வெளிவிவகாரக் குழு விடுத்திருக்க கூடிய அறிக்கையிலும் விடுதலைப் புலிகளுடன் போர் முடிவுற்ற நிலையில் அரசியல் சமூக முரண்பாடுகள் களைவதற்கான அவசர கையாள்கைகள் முன்நகர்த்தப்பட வேண்டும் என்றும், அந்நாடு தளர்ந்து விடாதபடி அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள் கைகொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இலங்கை அமெரிக்காவின் ஒரு ஜனநாயக தேழனாக 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து இருந்து வருகிறது. மேலும் 1787 ஆம் ஆண்டிலிருந்தான வர்த்தகத் தொடர்பு இந்த தீவுடன் அமெரிக்காவுக்கு உள்ளது.

ஐரோப்பாவையும் மத்திய கிழக்கையும், சீனாவுடன் கடல் வழி வர்த்தக பாதையூடாக இணைக்கும் உலகின் பாதிக்கு மேற்பட்ட கொள்கலன் கப்பல்கள் பயணிக்கும் 'பழைய உலகின்' மையத்தில் இலங்கை உள்ளது.

இலங்கையுடன் தாராள கனதியான கையாடலில் ஈடுபடவேண்டும். குறுகியகால மனித உரிமை பிரச்சினைகளில் மட்டும் கவனம் கொள்ளாது பல்வகைப்பட்ட ஒருங்கிணைவான சூழ்சிகளை கையாளவேண்டும். எனப் பல்வேறு திட்டங்களையும் வலியுறுத்தியுள்ளது அவ்வறிக்கை.

இங்கே யுத்தநிறுத்த மீறல்கள் குறித்து கரிசனை கொண்டிருந்தாலும் 'இன அழிப்பு' என்றவிதத்தில் அது பார்க்கப்படவில்லை என்பது முக்கியமானதாகும்.

ஐரேப்பிய நாடுகள் கூட யுத்த மீறல்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றனவே தவிர இன அழிப்பு குறித்து கவலை கொண்டதாக தெரியவில்லை.

ஆக, இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பா என மேற்கு கொள்கையை சார்ந்திருக்கும் பகுதி இலங்கையை மென்மையாக கையாளும் போக்கை கையாளும் அதே வேளை, இலங்கை அரசு தன்னை தக்க வைத்துகொள்ள பொருளாதார முதலீடுகள் தாரளமாக பெற்றுகொள்ளகூடிய வகையிலும் ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டே அதிகாரம் பெற்ற சீனாவின் முக்கியத்துவம் உணர்ந்து அதனுடன் சார்ந்திருக்கின்றது.

இதனாலேயே தற்போது சீனாவுடன் இலங்கை பொற்காலத்தில் திளைகிறது.

ஆக, இந்து சமுத்திர மையத்தில் மையப்பொருளாக பார்க்கப்படும் இலங்கை தனது அமைவிடத்தின் பயன்பாட்டையும் செல்வாக்கையும் அதியுச்சமாக தற்போது பயன்படுத்தி தாராளமான ஆதாயங்களை பெற்று வருகிறது.

ஆனால், மேற்குலக ஆய்வாளர்களின் கணிப்புகளின்படி மிகவிரைவில் வல்லரசுகளின் பாரிய கடல் நகர்வுகள் தெற்காசிய நாடுகளுக்கிடையில் இடம்பெற சாத்தியங்கள் தென்படுவதாக கணிப்பிட்டுள்ளனர்.

அனைத்துலகமென்பதும் சட்டமென்பதும் முதலாளித்துவ சனநாயக முறைகளை கொண்ட நாடுகளின் சொத்தாகவே பார்க்கபடும் அதேவேளை, சர்ச்சைகள் பல கொண்ட கடல் சம்பந்தமான அனைத்துலக சட்டதிட்டங்களிலும் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்படலாம்.

கோடான கோடி பணவிரயத்தில் கட்டப்படும் கடல் சம்பந்தமான கட்டுமானங்கள் எதுவாயினும் பாரிய கைமாற்றங்களுக்கும் உள்ளாகலாம் என்று அழைக்ககூடிய எந்த நாட்டு கப்பல்களும் நினைத்த மாத்திரத்தில் பயன்படுத்த கூடிய நிலைக்கு உள்ள வாய்புகள் குறித்தும் ஆராயப்படுகிறது.

அமெரிக்க தலைவர் ஒபாமாவின் அண்மைய ஆசிய பயணம் கூட நண்பர்களின் கூட்டை நிர்ணயித்து கொள்வதன் முதற் கட்டமாகவே பார்க்கப்படுகிறது. இங்கே சிங்கப்பூரும் இந்தோனேசியாவும் கடற்சட்ட கொள்கைகளில் இணைந்தால் சீன கப்பற் போக்குவரத்து சங்கட நிலை அடையும் என்பது மேலோட்டமான கருத்தாகும்.

2009 மே மாத பாரிய அழிவின் பிற்பாடு இது போன்ற நிலை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு பகுதிகளில்

**லோகன் பரமசாமி**

இலங்கை அரச செயற்பாடுகளால் திசை திருப்பட்டு வருவதாகவே மேலை நாட்டு ஆய்வாளர்கள் உணர்கின்றனர்.

இதனால் தெற்காசியாவில் பாகிஸ்தான் சிறு சிறு தேசங்களாக பிரிந்து போகக் கூடிய நிலை இலங்கையிலும் பார்க்க தற்போது அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை அண்மைய காலங்களில் இடம் பெற்ற யுத்தங்களால் மிகவும் மனவலிவு குன்றிகாணப்பட்ட தமிழ் சமுதாயம் கவனமாகவும் திடமாகவும் முன்னேறி வருவது குறித்தும் சீனா குறித்த தமிழர்களின் பார்வை மாறிவருவதையும் ஒருசில ஆய்வாளர்கள் கவனிக்கத் தவறவில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக காங்கிரஸார் குறித்து சோனியாவிடம் புகார் கேள்விக் குறியாகும் தி.மு.க.வுடனான உறவு



**புதுடில்லி,**

தி.மு.க.வுக்கு எதிராக உள்ள தமிழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில தலைவர்களின் செயற் பாடுகள் குறித்து அகில இந்திய காங்கிரஸ் கட் சித் தலைவி சோனியா காந்தியிடம் தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு புகார் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில், சோனியாவின் நடவடிக்கை களைப் பொறுத்து அடுத்த மாதம் நடைபெறவுள்ள தி. மு.க. பொதுக்குழுவில் முக் கிய முடிவு எடுக்கப்படும் என அந்தக் கட்சி வட்டா ரங்கள் தெரிவித்தன.

தமிழக முதல்வரின் புத்தாண்டு வாழ்த் துகளை காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியிடம் தெரிவிப்பதற்காக மரியாதை நிமித்தமாகவே அவரைச் சந்தித்தேன் என்று பாலு கூறினார்.

அதேநேரத்தில், கூட்டணி உள்ளிட்ட சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து பேசுவதற்காகவே டி.ஆர். பாலு டில்லி அனுப்பி வைக்கப்பட்டார் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் நெருங்கி வரும் வேளையில் தி.மு.க. - காங்கிரஸ் உறவில் ஏற்பட்டு ள்ள விரிசல் குறித்தும் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் சிலர் தி.மு.க.வுக்கு எதிராக பேசி வருவது குறித்தும் சோனியாவிடம் டி.ஆர். பாலு முறையிட்டதாகக் கூறப்படு கிறது.

குறிப்பாக முன்னாள் அமைச்சர் ஈ.வி. கே.எஸ். இளங்கோவன், இளைஞர் காங் கிரஸ் தலைவர்கள் சிலர் தி.மு.க. ஆட்சி குறித்தும் தமிழக அரசின் திட்டங்கள் குறித்தும் வெளிப்படையாக குறை கூறிப் பேசியதை சோனியாவிடம் ஆதாரங் களுடன் டி.ஆர். பாலு சுட்டிக்காட்டியதா கத் தெரிகிறது.

பிரதமர் மன்மோகன் சிங், சென்னை வந்தபோது அவரை முதல்வர் கருணா நிதி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப் புக்குப் பிறகு, இரு தலைவர்களும் தனித் தனியாக செய்தியாளர்களிடம் பேசிய போது, தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி சுமுகமாகவும், வலுவாகவும் உள்ளதாகத் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து தி.மு.க. உயர் நிலைத் தலைவர்களின் கூட்டம் கட்சி யின் தலைமை அலுவலகமான அண் ணா அறிவாலயத்தில் செவ்வாய்க்கிழ மை திடீரென நடைபெற்றது. சட்டப் பேர வைத் தேர்தல் குறித்து கூட்டத்தில் விவா திக்கப்பட்டதாக அந்தக் கட்சி வெளி யிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டது. இதில் காங்கிரஸுடன் கூட்டணியில் உள்ள விரிசல்களை சரி செய்வது குறித் தும் பேசப்பட்டதாக தெரிகிறது. இதற் காக சோனியா காந்தியைச் சந்திக்கவும் முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

சோனியாவுடன் சந்திப்பு சுமுகமாக இருந்தால் அதன் அடிப்படையில் தான் பெப்ரவரி 3 ஆம் திகதி சென்னையில் நடைபெறும் தி.மு.க. பொதுக் குழுக் கூட் டத்தில் கூட்டணி தொடர்பான தீர் மானத்தை நிறைவேற்றவும் தி.மு.க. முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகி றது.

இதைத்தொடர்ந்தே தி.மு.க. காங்கிரஸ் உறவை வலுப்படுத்தும் வகையில் டி.ஆர். பாலு டில்லிக்கு அனுப்பி வைக் கப்பட்டதாகத் தெரிகிறது. காங்கிரஸ் தலைவர்கள் சிலரது பேச்சை கோப்புகளா கத் தயாரித்து அவர் தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளதாகவும் அதை சோனியா விடம் அளித்துள்ளதாகவும் தி.மு.க வட்டாரங்களும் உறுதிப்படுத்தின.

## ஐ.நா. பயங்கரவாத தடுப்புக் குழுவின் தலைவராக இந்திய தூதுவர் நியமனம்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாத தடுப்புக் குழு வின் தலைவராக இந்திய தூதுவர் ஹர்தீப் சிங் புரி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் முக்கிய குழுக்களின் தலைவராகவும் அவர் இருப்பார் என ஐக்கிய நாடுகள் சபை நேற்று முன்தினம் அதிகாரபூர் வமாக அறிவித்தது. மேலும் அவர் இர ண்டு ஆண்டுகளுக்கு இந்த பதவியில் பணியாற்றுவார் என்றும் தெரிவித்து ள்ளது.

ஏற்கெனவே இந்த பொறுப்பை துருக்கி யின் தூதுவர் எர்துகுருல் அபாகன் வகித்து வந்தார். அவரது பதவிக்காலம் 2010, டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந் தது. ஐக்கிய நாடுகள் சபையின் பாது காப்புக் கவுன்சில் தீர்மானம் 1373 (2001), 1624 (2205) ஆகியவற்றின்படி பயங்கர வாத தடுப்புக் குழு அனைத்து நாடுகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை தடுக்கும் பணியில் ஈடுபடும். அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் பயங்கரவாதிகளால் இரட் டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பிறகு இந்தக் குழு ஏற்படுத்தப்பட்டது. ஏற்கெ னவே ஐக்கிய நாடுகள் சபையின் பாது காப்புக் கவுன்சில் செயல்குழுவின் தலை வராக ஹர்தீப் சிங் புரி தேர்வு செய்யப்பட் டுள்ளார்.

## மத்திய அரசுக்கு எதிராக போராட்டம் தீவிரமடையும்: பா.ஜ.க. எச்சரிக்கை

**டில்லி**

மத்திய அரசுக்கு எதிராக போராட்டத்தை தீவிரப்படுத்த, பாரதிய ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது என ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜெட்லி கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

போபர்ஸ் பீரங்கி பேரத்தில், இத்தாலி தொழிலதிபர் குட்ரோச்சியும், வின்சத்தாவும் கமிஷன் பெற்றதாக, வருமானவரித்துறை தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவில் குறிப் பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியாவும் நாட்டு மக்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

ஊழலில் திளைத்துள்ள மத்திய அரசுக்கு எதிராக, போராட்டத்தை தீவிரப்படுத்த, நாங் கள் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பாக, நாளை கவுகாத்தியில் நடக்கும் பா.ஜ. நிர்வாகிகள் கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் கொண்டு வரவுள்ளோம்.

மத்திய அரசின் அலட்சிய போக்கால் ஊழல் அதிகரித்துள்ளது. அதேபோல், சட்ட விரோதமாக, இந்தியாவுக்குள் ஊடுருவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த இரண்டு விஷயங்கள் குறித்து, கவுகாத்தி கூட்டத்தில் விவாதிக்க இருக்கிறோம்.

வங்கதேசத்திலிருந்து சட்டத்திற்கு புறம் பாக குடியேறியவர்கள், வாக்காளர் பட்டிய லில் இடம்பெற்றுள்ளதை ஆதாரத்துடன், தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டு, நீக்கும்படி கோரினோம். நட வடிக்கை எடுப்பதாக தேர்தல் ஆணையம் உறுதியளித்துள்ளது. ஸ்பெக்ட்ரம், பொது நலவாய போட்டி, ஆதர்ஷ் குடியிருப்பு ஊழல்கள் குறித்து, அனைத்து உண்மை களையும் விளக்கும் கண்காட்சி, கவுகாத்தி யில் அமைக்க உள்ளோம் என்றார்.

## ரூ.கோடி பெறுமதியான தங்க குடை திருட்டு

**திருப்பதி:**

திருப்பதி வேங்கடேஷ பெருமாள் கோவி லில் தங்க ரதத்தின் மீது இருந்த தங்கத்தி னால் ஆன குடை திருடப்பட்டுள்ளது.

குறித்த தங்க ரதம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் கட்டடப்பணி நடந்து வருகிறது. இதனால் ரதத்தை சுற்றி இரும்புத் தகடுகள் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இதை உடைத்த சிலர் ரதத்தின் மேலிருந்த தங்க குடையை திருடியுள்ளார்கள். இதன் மதிப்பு 1 கோடி ரூபாவாகும். இந்நிலையில் திருடு குறித்து விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

## முதல்வராக எடியூரப்பா நீடிப்பார்: பா.ஜ.க.

முதல்வர் பதவியில் இருந்து எடியூரப்பா தொடர்ந்து நீடிப்பார் என பா.ஜனதா மேலி டத் தலைவர் தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.



கர்நாடகத்தில் முதல்வர் எடியூரப்பா மீதும், அவரது குடும்பத் தினர் மற்றும் சில அமைச்சர்கள் மீதும் நில ஒதுக்கீடு ஊழல் புகார் கூறப்பட்டது. இதை தொடர்ந்து டில்லி சென்ற எடியூரப்பா, கட்சி மேலிடத் தலைவர்களை சந்தித்து விளக்கம் அளித்தார்.

இந்த சூழ்நிலையில் பஞ்சாயத்து தேர்தல் குறுக்கிட்டதால் எடியூரப்பா மீது தற்போது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தேர்தல் முடிவுக்கு பிறகு பார்த்துக்கொள்ளலாம் என் று கருதி பிரச்சினையை கட்சி மேலிடம் தற் காலிகமாக தள்ளி வைத்தது.

இந்தநிலையில் பஞ்சாயத்து தேர்தல் முடிவுகள் வெளியானது. கடந்த 2005ஆம் ஆண்டு தேர்தலுடன் ஒப்பிடும்போது இந்த தேர்தலில் பா.ஜனதா கணிசமான வெற்றி களை குவித்துள்ளது. இதுபற்றி கர்நாடக மாநில பா.ஜனதா கட்சியின் மேலிட பொறு ப்பாளர் தர்மேந்திர பிரதான் கூறியதாவது,

கர்நாடகத்தில் நடந்து முடிந்த பஞ்சாயத்து தேர் தல் முடிவு திருப்தி அளிக் கும் வகையில் உள்ளது. பா.ஜனதாவுக்கு வாக்களி த்து வெற்றி பெறச்செய்த கர்நாடக மக்களை பாராட்ட கடமைப்பட்டு உள்ளேன். பா.ஜனதாவின் இந்த வெற் றிக்கு முதல்வர் எடியூரப்பா தான் முக்கிய காரணம். இதற்காக அவருக்கும் என து பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது இந்த முறை பா.ஜனதாவின் வளர்ச்சியில் முன் னேற்றம் காணப்படுகிறது. பா.ஜனதா மீதும், முதல்வர் எடியூரப்பா மீதும் எதிர்க்கட்சியினர் ஊழல் புகாரை சுமத்தி அதன்மூலம் பிரசாரம் செய்தனர். ஆனால் இந்த பிரசாரம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. பெருவாரியான வாக்குகளில் பா.ஜனதாவை வெற்றி பெற செய்துள்ளனர். மேலும் முதல்வர் பதவியில் எடியூரப்பா தொடர்ந்து நீடிப்பார். அவரை மாற்றும் பேச்சுக்கே இடம் இல்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை கடலில் மின்பிடிக்க படைத்தரப்பு அனுமதி

வண்ணார்பண்ணை,

உயர் பாதுகாப்பு வலய பகுதியாக இருந்த அரியாலை கிழக்கு கடலில் மீன்பிடிப்பதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதல் சம்பவங்களால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து முற்று முழுதாக வெளியேறி இருந்தனர். இதுவரை மீள்குடியேற்றத்துக்கு மக்கள் அனுமதிக்கப்படாத நிலையில் நேற்று முன்தினம் முதல் பகல் நேரத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, அரியாலை கிழக்கு ஒ/90 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைத்து கடற்றொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கடற் றொழிலாளர் சங்கம் கேட்டுள்ளது.

---

## திரைப்பட (தொடர்ச்சி)

முதல்வரிடம் கொடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலையில் அழகிரிக்கு மறைமுகமாக ஒரு பதிலை தந்துள்ளார் முதல்வர். அது கனிமொழியைப் பாராட்டி அவர் பேசியது.

சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில் நேற்று முன்தினம் முதல்வர் கருணாநிதி பேசியதாவது-

கடந்த சுதந்திர தினத்தன்று சென்னை புனித ஜோர்ஜ் கோட்டையில் தேசிய கொடியை ஏற்றி வைத்து நான் உரை நிகழ்த்தியபோது ஒன்றை குறிப்பிட்டேன். ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டை உலக இளைஞர்கள் ஆண்டு என்று அறிவித்திருப்பதையொட்டி வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கு ஏற்ப பயிற்சிகளை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் புதிய திட்டம் ஒன்று இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு படித்த இளைஞர்கள், பொறியியல் இளைங்கலை, முதுகலை பட்டம் பெற்றுள்ளவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக்கான திறன் வளர்ப்புப் பயிற்சி இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

கவிஞர் கனிமொழி அரசாங்கத்தின் இந்த திட்டங்களை மாவட்ட அமைச்சர்களோடும் மாவட்ட கலெக்டர்களோடும் தொழில் நிறுவனங்களோடும் இணைந்து இந்த வேலைவாய்ப்பு முகாம்களை பல மாவட்டங்களிலே நடத்தி வருகிறார்.

இளைஞர்களைத்தான் நம்பியிருக்கிறேன். அவர்களால் தான் ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும் . இளைஞர்களால் தான் உருவான ஒரு நல்ல நிலையை கட்டிக்காக்கவும் முடியும். கட்டிக்காக்கவும், தட்டியெழுப்பவும் நிரம்பிய திறன் படைத்த இளைஞர்களாகிய நீங்கள் இன்று காட்டுகின்ற அதே ஆர்வத்தைத் தொடர்ந்து காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

---

## மாதகல் (தொடர்ச்சி)

இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நேற்று முன் தினம் இரவு உள்ளூர் மீனவர்கள் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை எனத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இந்திய மீனவர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் இது தொடர்பாக காரைநகர் கடற்படையினரிடமும் கடற்றொழிலாளர் சமாசத்திடமும் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எது வித முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

மேலும், இது தொடர்பில் யாழ். அரச அதிபருக்கும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத்திடமும் முறையிடவுள்ளதாக அவர் கூறினார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அதிக மீன் வளம் காணப்படுவதனால் அடிக்கடி எல்லையை மீறி வந்து மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில், குறுகிய கடற்பரப்பைக் கொண்டுள்ள மாதகல் கடற்பரப்பில் இப்பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

கடந்த வாரமும் மாதகல் சம்பில் கடற்பரப்பினுள் வந்து மீன்பிடித்த இந்திய மீனவப் படகு ஒன்று இயந்திரக்கோளாறினால் கரை ஒதுங்கியது. பின்னர் உள்ளூர் மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் அவர்களை இந்திய எல்லைக்குள் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் இந்திய இலங்கை கடற்பரப்பினுள் இரு பகுதி மீனவர்களும் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடிப்பதால் பலபிரச்சினைகள் ஏற்பட்டன. இதனைத் தீர்ப்பதற்காக இரு நாட்டு அரசாங்கங்களும் கடற்றொழிலாளர் சங்கங்களும் பல தடவைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## குட்டை பாவடை (தொடர்ச்சி)

இடம்பெறுகின்றன என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது அதில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை கூறினார். அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது

குட்டை பாவாடைகள் அணிவதை தடுப்பது தொடர்பில் எவ்விதமான தீர்மானமும் எடுக்கவில்லை. அது பொய்யான உருவாக்கப்பட்டதொரு பிரசாரமாகும்.

ஆனால் நாட்டில் மத வழிபாட்டு தலங்களில் முறையான வகையில் ஆடைகளை அணியவேண்டும் என ஒரு முறைமை வேண்டும். அதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

நாட்டில் தற்போது சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனை முடக்கும் நோக்கிலேயே இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கம் அவ்வாறு ஒரு தீர்மானத்தை எடுக்கவில்லை.

---

## யாழ்.தற்போதைய (தொடர்ச்சி)

அரசாங்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் அசௌகரியம் ஏற்படும் தானே என்று நீங்கள் கேட்பது சரியானது. காரணம் வரலாற்றில் இடம்பெற்றதை போன்று சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக மீண்டும் அபகீர்த்தியையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்த பல தரப்பினர் திட்டமிட்டு முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதனை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம்.

### விசாரிப்போம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தி மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது அரசாங்கத்தின் முழுமையான பொறுப்பாகும். அதனை நாங்கள் ஏற்கின்றோம். அந்த பொறுப்பை நாங்கள் செய்வோம். இது தொடர்பில் ஜனாதிபதியும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசாங்கம் தனது பொறுப்பை நிறைவேற்றுகின்ற அதேவேளை சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அபகீர்த்தியையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற சதி முயற்சிகள் குறித்தும் ஆராயும். அது தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

### ஜெனிவா அமர்வு

இவ்விடயத்தில் பல அமைப்புக்கள் மற்றும் பல தரப்புக்கள் திட்டமிட்டு சதி முயற்சிகளை மேற்கொள்கின்றன. அது தொடர்பில் ஆராய்வோம். இன்னும் இரண்டு மாதங்களில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் அமர்வுகள் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் இலங்கைக்கு எதிராக இவ்வாறு அபகீர்த்தியை ஏற்படுத்த பலர் முயற்சிக்கின்றனர்.

### பரராஜசிங்கம்

இவ்வாறான சவால் ஒன்று எமது முன் உள்ளது. கடந்த காலங்களில் இலங்கை ஒரு மிலேச்சத்தனமான நாடு என்று கூறி சர்வதேச மட்டத்தில் அசௌகரியத்தையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டது. அவற்றை நாங்கள் முறியடித்தோம். அன்று நத்தார் தினத்தன்று ஆலயத்தில் வைத்து முன்னாள் எம்.பி. பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். அது சர்வதேச மட்டத்தில் உள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியாகும்.

தற்போதும் அதே சதி முயற்சியை சில தரப்பினர் ஆரம்பித்துள்ளனர். எனவே அவை தொடர்பிலும் நாங்கள் ஆராய்வோம். அதாவது யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பில் உரிய விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பை ஏற்கும் அரசாங்கம் இந்த சதி முயற்சி குறித்தும் ஆராயும் என்பதனை தெளிவாக குறிப்பிடுகின்றேன்.

### அரசாங்கமே வெளிக்கொண்டு வந்தது

முக்கியமாக யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமையை வெளியில் கொண்டு வந்தது அரசாங்கம்தான். அதாவது அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த தான் இந்த விடயத்தை வெளியில் கொண்டுவந்தார்.

**கேள்வி:- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் விரல் நீட்டப்பட்டுள்ளதே?**

**பதில்:-** இந்த இடத்தில் உங்களுடன் நான் உடன்பட முடியாது. நீங்கள் புலனாய்வாளர் போன்று அமைச்சரின் பெயரை குறிப்பிடுகின்றீர்கள். நான் சட்டத்தை மதிப்பவன். எனவே என்னால் அவ்வாறு அதனை ஏற்க முடியாது. யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பில் அரசாங்கம் முழுமையான விசாரணையை நடத்தும் என்பதனை தெரிவிக்கின்றேன்.

**கேள்வி:- இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 600க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அரசாங்கம் பூச்சியமட்ட பாதிப்பு குறித்து பேசுகின்றதே?**

**பதில்:-** அமைச்சர் சம்பிக்க ரணவக்க அவ்வாறு கூறியுள்ளமை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் மனிதாபிமான நடவடிக்கையின்போது பூச்சிய பாதிப்பு மட்டத்தை பேணுமாறு படையினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

**கேள்வி:- அப்படியானால் எத்தனை பொது மக்கள் இறந்தனர்?**

**பதில்:-** அந்த தொகை சம்பந்தப்பட்ட தகவல்கள் என்னிடம் தற்போது இல்லை.

**கேள்வி:- அரசாங்கம் தனக்கு சாதகமான உள்ளூராட்சிமன்றங்களை தற்போது கலைக்கவுள்ளதாகவும் எதிர்க்கட்சிக்கு சாதகமாக உள்ளவற்றை பின்னர் கலைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றதே?**

**பதில்:-** எதிர்க்கட்சிக்கு சாதகமான உள்ளூராட்சிமன்றங்கள் உள்ளதா? என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் உள்ளூராட்சிமன்றங்கள் இன்று இரவு (நேற்று) கலைக்கப்படலாம். மாலையிலேயே முடிவை எடுக்கவுள்ளோம்.

எனினும் முன்னாள் கிரிக்கட் அணி தலைவர் அர்ஜுன ரணதுங்கவின் கோரிக்கைக்கு அமைய உலக கிண்ண கிரிக்கட் போட்டிகள் நடைபெறும் கொழும்பு கண்டி மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களில் உள்ளூராட்சிமன்ற தேர்தலை பிற்போடுவது குறித்து ஆராயவுள்ளோம். அது தொடர்பில் ஆராயப்படும்.

மேலும் இலங்கையில் முதற்தடவையாக உள்ளூராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடைபெறவுள்ளது. மேயர் ஒருவர் கூட தனி வேட்பாளராகவே போட்டியிட வேண்டும். இடைக்கால நிர்வாகம் அமையும். இதன் மூலம் வளங்கள் பாதுகாக்கப்படும்.

**கேள்வி:- யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சிமன்றங்கள் கலைக்கப்படுமா?**

**பதில்:-** அது தொடர்பிலும் ஆராய்ந்து வருகின்றோம். பெரும்பாலும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படும் சாத்தியம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்கால அழகு டிப்ஸ்



குளிர்காலத்தில் கதகதப்பான உடைகள் அணிந்துக் கொள்ளுதல், தலை முதல் கால் வரை மூடிய நிலையில் உடைகள் அணிதல் ஆகியவை மட்டும் போதாது. குளிர்காலத்தில், சருமத்திற்கு பிரத்யேக கவனம் செலுத்தி பராமரிப்பது அவசியம்.

அதற்காக சில டிப்ஸ்கள் இதோ...

**கூந்தல் பராமரிப்பு :**

குளிர்காலத்தில் கூந்தல் வறண்டு காணப்படும். எனவே, கூந்தலில் கத்தாழை சாறு தடவி, சில நிமிடங்கள் கழித்து மசாஜ் செய்யலாம். இதனால், கூந்தல் மென்மையாக இருக்கும். மேலும், வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஆலிவ் ஆயில் தடவலாம். இதனால், கூந்தலின் ஈரத்தன்மை வலுவடையும். எண்ணெயை சூடுபடுத்தி, தலையில் தேய்த்து வெயில் காலத்தில் ஊற விடுவதை விட குறைந்த நேரம் மட்டுமே ஊறவிட வேண்டும். தலையில், அதிக நேரம், எண்ணெயை ஊறவிட்டால், அதனால், உடல் நலன் பாதிக்கப்படலாம்.

அதே போல், மூலிகைச் சாறுகள் ஏதாவது தலையில் தேய்ப்பதாக இருந்தாலும், அவற்றையும் அதிக நேரம் ஊற விடக் கூடாது. மூலிகை சாறுகள் பெரும்பாலும் குளிர்ச்சி தருபவை, அவை வெயில் காலத்திற்கே உகந்தது.

குளிர்காலத்தில் கூந்தலை ப்ரீ ஹேர் விடுவதைத் தவிர்த்து, பின்னுவது அல்லது கொண்டை போடுவது ஆகியவற்றை செய்யலாம். இதனால், குளிர்ந்த காற்றால் கூந்தல் வறண்டு போவது தடுக்கப்படும்.

அடிக்கடி ஹேர் கலரிங் செய்வது, சுருட்டை முடிகளை நீண்ட முடியாக மாற்றும் ஸ்ட்ரீக்கிங் ஆகியவற்றால் கூந்தலின் ஈரப்பதம் வறண்டு போவதால் அவற்றையும், சூடான சாதனங்களை கூந்தலில் பயன்படுத்துவதையும் தவிர்ப்பது நல்லது.

கூந்தலில் இயற்கையான 'டைகள்' பயன்படுத்தலாம். ட்ரையர்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது நல்லது. குளிர்ந்த காற்றில் இருந்து கூந்தலைக் காப்பாற்ற, 'சில்க் பேப்ரிக்' துணிகளைப் பயன்படுத்தலாம்.

**சருமப் பராமரிப்பு:**

சரும ஆரோக்கியம் வெளிப்புறத்தில் செய்யும் சிகிச்சையை பொறுத்து மட்டுமல்லாது, நாம் சாப்பிடும் உணவையும் பொறுத்தது. முறையான ஊட்டச்சத்தான உணவு, சருமம் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. அதிலும் குறிப்பாக, சருமத்தை ஈரப்பதத்தை பராமரிப்பதில் தண்ணீர் முக்கியப் பங்காற்றுகிறது. தினமும், உணவில் அதிகளவில் பழங்கள் மற்றும் காய்கறிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை, நம் உடலின் செயற்பாட்டிற்கான தண்ணீரை வழங்குகின்றன.

குளிர்காலத்தில், சருமத்தின் மென்மை மற்றும் நெகிழ்வுத் தன்மை ஆகியவற்றைப் பராமரிக்க, சோப்பிற்குப் பதிலாக கடலை மாவைப் பயன்படுத்தலாம்.

தோல் வறண்டு போதல் மற்றும் வெடித்தல் ஆகியவற்றைத் தவிர்க்க, குளிக்கச் செல்வதற்கு சிறிது நேரத்திற்கு முன், தேங்காய் எண்ணெயைத் தேய்க்கலாம்.

குளிர்காலத்தில் மாய்ச்சரைசர்கள் மற்றும் கிரீம்கள் தடவ வேண்டியது அவசியம். குளிக்கப் பயன்படுத்தும் தண்ணீரில் சில துளிகள் எண்ணெய் சேர்த்துக் கொள்ளுங்கள். இது குளிப்பதால், ஏற்படும் ஈரப்பதம் இழப்பு மீண்டும் பெற உதவும். மிகவும் சூடான நீரில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். சூடான நீரில் குளிப்பதால், உடலின் இயற்கையான எண்ணெய்ப் பசை குறைந்துவிடும்.

குளிர்காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சினை உதடு வெடிப்பு. இதற்கு, சிறந்த பெட்ரோலியம் ஜெல்லியை உதட்டில் தடவலாம். பெட்ரோலியம் ஜெல்லிக்குப் பதிலாக வெண்ணெயையும் உதட்டில் தடவலாம். இதனால், உதடு வெடிப்பு குணமாவதோடு, கூடுதல் மென்மை கிடைக்கும்.

# இலைக்கஞ்சி



தேவையான பொருட்கள்:

சிவப்பு அரிசி - 1 சுண்டு (தவிடு நீக்கியது), பாசிப்பயறு - 1/4 சுண்டு, வல்லாரைச்சாறு -1/2 தம்ளர், பொன்னாங்காணிச் சாறு -1/2 தம்ளர், தேங்காய்ப் பால் -1 தம்ளர் (தடிப்பானது), சின்ன வெங்காயம்- 5, பச்சை மிளகாய் -2 ( விரும்பின்), எலுமிச்சம் புளி -1/2 பாதி, தண்ணீர் - 5 தம்ளர், உப்பு -அளவாக

**செய்முறை:**

பாசிப்பயற்றை 5,6 மணி நேரம் ஊறவைத்து எடுக்கவும்.

தணீரைக் கொதிக்க வைத்து அரிசியையும் பயறையும் சேர்த்து வேக விடவும்.

வல்லாரை, பொன்னாங்காணி கீரைகளைச் சுத்தம் செய்து தனித்தனியாக சாறு எடுத்துக் கொள்ளவும்.

வெங்காயம், பச்சை மிளகாயைக் குறுணலாக வெட்டவும்.

அரிசி, பயறு நன்கு கரைய வெந்ததும் இலைச் சாறு, தேங்காய்ப்பால், வெங்காயம், மிளகாய், உப்பு யாவற்றையும் சேர்த்துக் கொதிக்கவிட்டு இறக்கவும். கஞ்சி நன்கு ஆறியதும் எலுமிச்சம் புளியைச் சேர்த்துக் கொள்ளவும்.

குறிப்பு :

போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கும் பாடசாலைப் பருவனத்தினருக்கும் நோயிலிருந்து தேறுபவர்களுக்கும் இலைக்கஞ்சி மிகவும் பொருத்தமானது என்பதைக் கவனத்திற் கொள்க.

# பார்லித் தெளிவு



தேவையான பொருட்கள் :

பார்லி அரிசி - 2 மேசைக்கரண்டி

தண்ணீர் - 3 தம்ளர்

உப்பு - அளவாக

**செய்முறை**

பார்லி அரிசியை 1/2 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும்.

பின் 3 தம்ளர் இட்டு அவியவிடவும்.

பார்லி நன்கு வெந்ததும் இறக்கிக் கொள்ளவும்.

பத்து நிமிடத்தின் பின் முழுவதையும் கலக்காது மேலே தெளிந்துள்ள தெளிவை மாத்திரம் வடித்து உப்பு சேர்த்துப் பயன்படுத்தவும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா மையமாகும் நிலாவரை

## வற்றா நீர் நிலையும் நவசைலேஸ்வரமும்

அமைதியான சூழல், மருது வேம்பு, வாகை மரங்கள் ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பும் ரம்மியமான சோலை, கால்பதித்தால் நிறமூட்டும் செம்மண், மண்வளத்தை எடுத்துக் காட்டும் பயிர்ச்செய்கைச் சுற்றாடல், பருகும் போது மீண்டும் பருகத்தூண்டும் நீர் வளம், வந்தாரை வரவேற்கும் வீதியோர வர்த்தக நிலையங்கள், வற்றாத நீர் நிலையான ஆழ்கிணறு, அத்தனையும் உற்று நோக்கிய வண்ணம் கோயில் கொண்டிருக்கும் நவசைலேஸ்வரர் ஆலயம், அத்துடன் யுத்த வடுக்களை தாங்கி நிற்கும் கட்டட இடிபாடுகளுடன் கூடிய சுற்றாடல் கொண்டது தான் 'நிலாவரை'.

புத்தூர் மேற்கில் அமைந்துள்ள இந்த அமைவிடம் யாழ்.நகரில் இருந்து 16 ஆவது கிலோ மீற்றரில் யாழ்.நகருக்கு வடதிசையில் அச்சுவேலி நோக்கிச் செல்லும் 'இராசவீதி' யும் புத்தூர்

சுன்னாகம் நெடுஞ்சாலையும் சந்திக்கும் ணிச்சந்திக்கும் வடக்குப் புறமாக உள்ளது. வலிகிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் வடமேற்கு எல்லையில் வலி.கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் உள்ளூராட்சி ஆளுகைக்கு உட்பட்டது.

நிலாவரை என அழைக்கப்படும் இந்த அமைவிடம் நவக்கிரி அச்செழு, கலைமதி, சிறுப்பிட்டி கிராமங்களுக்கு நடுவிடத்தில் அமைந்திருப்பதோடு புத்தூர் கமநல சேவை நிலையம் சுதேச வைத்திய திணைக்களத்தின் மூலிகைத் தோட்டம், கமநல சேவை திணைக்களத்தின் உரக்களஞ்சியம், வாதரவத்தை குடிநீர் விநியோகத்திட்டத்திற்கான நீரை வழங்கும் தேசிய வடிகாலமைப்பு குடி நீர் விநியோக அதிகார சபையின் 'ஆழ் துளைக்கிணறு' பாதுகாப்பு தரப்பினரின் நிலாவரை இராணுவ முகாம் பாதுகாப்பு தரப்பினரால்



தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் கண்ணில் படாமல் நிலாவரை தப்புவது இல்லை. அது மட்டுமல்ல நிலாவரைச் சூழலை தமது கமராக்கள், வீடியோ பதிகளுக்கு உள்ளாக்காமல் விடுவதும் இல்லை

நிர்மாணிக்கப்பட்ட அறு கோண கூரை அமைப்புக் கொண்ட முருகன் கோயில் படையினரின் தேநீர்சாலையுடன் கூடிய விற்பனை நிலையம் மற்றும் சில குடும்பங்களின் வாழ்விடங்களான இல்லங்களையும் கொண்டது.

அண்மைக்காலம் வரை மிக அமைதியாகவும் ஆள் அரவமற்ற பிரதேசமாகவும் காணப்பட்டது. உள்ளூர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒரு சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கும் வழிப்போக்கர்கள் மற்றும் விவசாயிகள் இளைப்பாறிச் செல்லும் இடமாகவும் விளங்கியது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்பட்டதை அடுத்து வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்.குடா நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் தரிசனத்துக்கு தப்பிவிடாமல் உற்று நோக்கப்படும் மிக முக்கியமான சுற்றுலா மையம். நாளாந்தம் வெளிமாவட்ட சுற்றுலாப்பயணிகளின் வாகனங்கள் பல ஒரேநேரத்தில் தரித்து நிற்பதையும் பல நூற்றுக் கணக்கான பயணிகள் ஆறுதலாக அமர்ந்திருந்து உண்டு மகிழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் கண்ணில் படாமல் நிலாவரை தப்புவது இல்லை.

அது மட்டும் 'நிலாவரைச் சூழலை தமது கமராக்கள் வீடியோ பதிவுகளுக்கு உள்ளாக்காமல் விடுவதும் இல்லை.







சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கும் யாழ்.மாவட்டத்துக்குச் சிறப்பாக உரிய பனம் பண்டங்களையும், பனையோலை கைப்பணிப் பொருட்களையும், யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்தையும், மாம்பழத்தையும் விற்பதற்கு நடைபாதை விற்பனை நிலையங்கள் மணிப்பிரவான நடையில் சிங்களத்தையும் தமிழையும் கலந்து பேசும் நடைபாதை வியாபாரமும் பாப்போரை கவர்ந்திழுக்காமல் இல்லை.

அது மட்டுமல்ல 'தென்னிலங்கை கைப்பணிப்பொருள் கித்துள் பனங்கட்டி, பல்வேறு வகையான வளையல்கள் மற்றும் உணவு நிலையங்களும் வகை வகையாக வந்தோரை வரவேற்ற வண்ணம் உள்ளன. மேலும், விசாலமான சிற்றுண்டிச்சாலைகளும் தமிழ், சிங்கள சிறப்புச் சிற்றுண்டிகளும் சைவ உணவு அசைவ உணவு வகைகள் உள்ளடக்கியவையாக உள்ளன.

நிலாவரைக்கும் நவசைலேஸ்வரத்துக்கும் பூர்வீகமான புராண இதிகாச கதைத் தொடர்புகளும் கர்ண பரம்பரைக் கதைத் தொடர்புகளும் பல உண்டு. அந்தவகையில் இராம பிரான் தமிழ் வேந்தன் இராவணனை சங்காரம் செய்து விட்டு வடநாடு திரும்பும் போது ஸ்தாபித்த தலம் தான் நவசைலேஸ்வரம் என்றும் அவரது அம்பினால் தோண்டப்பட்டது தான் நிலாவரை வற்றாத நீர் நிலை என்றும் கூறப்படுவது உண்டு. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## நட்பு

நிலவு இல்லாத வானம்
இல்லை/ விரயம்
பூக்கள் இல்லாத பூமி
இல்லை/ விரயம்
காதல் இல்லாத இதயம்
இல்லை/ விரயம்
கனவுகள் இல்லாத இரவு
இல்லை/ விரயம்
பாசம் இல்லாத சொந்தம்
இல்லை/ விரயம்
நட்பு இல்லாத வாழ்வே
இல்லை/ விரயம்

ப.நிகிந்தன்
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

## பறவைகள்



ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

வான்கோழிகள் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

ஸ்விப்ட் என்ற பறவை மணிக்கு 170 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது.

இறக்கை இல்லாத பறவை கிவி, கூடு கட்டாத பறவை குயில்.

## நன்றி மறவேல்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாங்கள் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வன்னி பெருநிலப்பரப்புக்கு வந்தோம். வன்னியில் எமக்கு உறவினர்கள் யாரும் இருக்கவில்லை. வடமராட்சி கிழக்கில் இருந்த அப்பாவின் நண்பரின் அண்ணா வீட்டுக்குச் சென்றோம். முன் அறிமுகமே இல்லாத போதிலும் வந்தோரை இன் முகத்தடன் வரவேற்று உணவு தந்து உபசரித்தார்கள். கிளிநொச்சியில் வீடு எடுத்து செல்லும் வரைக்கும் பல நாட்கள் நாங்கள் அங்கேயே தங்கியிருந்தோம். வெறுங்கையுடன் வந்தவர்களுக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள், பாய், தலையணை போன்ற எல்லாப் பொருட்களையும் தந்து வழியனுப்பினார்கள்.

பெரும் போர் தொடங்க வடமராட்சி கிழக்கிலிருந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்ற செய்தி எமக்கு வந்தவுடன் எமக்கு உதவியவர்கள் எங்கே இருக்கிறார்கள் எனக் கவலை வந்தது. அப்படி இருக்க அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். நாங்கள் அவரை வரவேற்று உபசரித்து வீடு ஒன்றையும் கொடுத்தோம்.

ஆத்திசூடியில் ஔவைப்பாட்டி சொன்னது போல் நன்றி மறவாதிருக்க வாய்ப்புக் கிடைத்ததே பெரும் பேறு. இதனைத்தான் ஔவைப்பாட்டி உலக நீதிப் பாடலில் 'செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்' என்று அழகாகக் கூறினார்.

நேசராஜ்குமார் வித்யாசாகர் தரம்7
கிளி/கிளிநொச்சி ம.வி.





ச.சிவானுஜன் தரம் 7A
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

படத்திலிருப்பது விலங்குகளின் பொழுது போக்கு பூங்கா இதை உற்று கவனித்து. கீழே உள்ள கேள்விகளுக்கு விடை எழுதி அனுப்புங்கள்.

1. எழுத உதவும் பொருள் மறைந்துள்ளது. அது என்ன பொருள்?
2. உலோகத்தில் செய்யப்பட்ட பொருள்கள் என்னென்ன உள்ளது?
3. சிறுவன் எங்கே மறைந்தள்ளான்?
4. 'ஸீசா' விளையாடும் விலங்குகள் எவை?
5. இங்கே இரண்டு பூச்சிகள் மறைந்துள்ளது. அவை என்னென்ன?



சருமிதா கணேசலிங்கம் தரம் 2A
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

## புலமைப் பரிசில் சித்தி

யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் ம.சுவேதன் புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் மதிஅழகன் ஜெயரூபி தம்பதிகளின் புதல்வர்.



சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி
யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வின்போது, விருந்தினர்களாக கலந்தகொண்ட மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் ச.சிவநேஸ்வரன் ஆகியோர் அதிபர், பிரதி அதிபர்களால் அழைத்துவரப்படுவதையும் லண்டன் பழைய மாணவர் சங்க செயலாளர் குமாராஜன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அ.எழிலரசி, மானிப்பாய் பிரதேச சபை செயலர் திருமதி பு.சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் நிருபர்)

# தலம் என்றால் இந்தியாவில் சிதம்பரம் அதேபோல் இலங்கையில் "ஈழத்துச் சிதம்பரம்"

## இந்து நாகரிகத்துறை பேராசிரியர் ம. வேதநாதன்

(வட்டுக்கோட்டை நிருபர்)

தலம் என்றால் அது இந்தியாவில் சிதம்பரத்தையே குறிக்கும். அவ்வாறு இலங்கையில் தலம் என்பது ஈழத்துச் சிதம்பரத்தையே குறிக்கவேண்டும்.

தமிழ் நாட்டுச் சிதம்பரத்தையும் ஈழத்துச் சிதம்பரத்தையும் ஒப்பிட்டு இந்த நூல் வெளியிடப்படுவதுபாராட்டத்தக்கதாகும்.

இவ்வாறு கவிஞர் சி.பொன்னம்பலம் எழுதிய'தில்லைச் சிதம்பரமும்ஈழத்துச் சிதம்பரமும்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ம.வேதநாதன் தெரிவித்தார்.

ஈழத்துச் சிதம்பரத்தில் கடந்த வாரம் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில்-

தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்தில் நடைபெறுவதுபோன்ற மகோற்சவக் கிரியைகளும் பஞ்சரத பவனியும் இலங்கையில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்ற ஒரேஒரு ஆலயம் ஈழத்துச் சிதம்பரமாகும்.

சைவ மக்கள் வாழ்க்கையில் ஒரு தடவையாவது சிதம்பரம் சென்று நடராஜப் பெருமானைத் தரிசிக்க வேண்டும்.

தலம் என்றால் அது இந்தியாவில் சிதம்பரத்தையே குறிக்கும். அவ்வாறு இலங்கையில் தலம் என்பது ஈழத்துச் சிதம்பரத்தையே குறிக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள மக்கள் வழிபடுவதற்கு சிதம்பரம் சிறப்புப்பெற்றிருப்பதைப் போல இலங்கையில் மக்கள் வழிபடுவதற்கு சிறப்பான தலமாக ஈழத்துச் சிதம்பரம் விளங்குகிறது. இந்தியா சென்று சிதம்பரத்தில் வழிபாடு செய்ய முடியாதவர்கள் இலங்கையில் வடபால் காரைநகரில் அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானைத் தரிசிப்பதன் மூலம் சிதம்பர நடராசனைத் தரிசித்த பேற்றினைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனக் கூறினார்.

நூல் மதிப்புரை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தனதுரையில்-

புலவர் மணி சோ. இளமுருகனாரின் ஈழத்துச் சிதம்பர புராணம் வெளிவந்து நான்கு தசாப்தங்களின் பின்னர் நல்ல தரமான நூலாக 'தில்லைச் சிதம்பரமும் ஈழத்துச் சிதம்பரமும்' வெளிவந்துள்ளது. இந் நூலில் தமிழகத்து சிதம்பரம், ஈழத்துச் சிதம்பரம் பற்றிய வரலாறுகள் மட்டுமன்றி காரைநகர் பற்றியும் காரைநகரில் உள்ள ஆலயங்கள் பற்றியும் திருவாசக இயல் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சங்க நூற் செல்வர் அருளம்பலவாணர் 'காரைநகர் மான்மியம்' எழுதிய வித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா, கார்த்திகேயப் புலவர் போன்ற பெரியார்கள் தோன்றிய இந்த மண்ணில் பிறந்த ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சி. பொன்னம்பலம் இந்த நூலை அழகாகத் தொகுத்து எழுதியிருக்கிறார்.

கோயில் என்று சிறப்பிக்கப்படும் சிதம்பரத்தையும் ஈழத்துச் சிதம்பரத்தையும் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு அரிய வாய்ப்பாக இந்த நூல் அமைந்துள்ளது. சைவ சமயத்தவர்கள் அனைவரது இல்லங்களிலும் இருக்கவேண்டிய நூல். குறைந்த விலையில் மிகவும் தரமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நூலின் மூலம் கிடைக்கும் வருமானம் ஆலய திருப்பணி வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவது போற்றத்தக்கது - என்றார்.

# ஒத்திவைப்பு

வேலணை

சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த இக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை

(திருநெல்வேலி)

இவ்வருடம் மழை பிந்திப் பெய்வதனால் தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதியில் சிறு தானிய பயிர்ச் செய்கை மேற்கொள்ள சாதகமான சூழ்நிலை காணப்படுகின்றது.

இதனால் இப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி இப்பகுதி மக்கள் கமக்கார அமைப்பினரை கேட்டுக் கொள்கின்றனர்.

அத்துடன் இப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், இப்பகுதியின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

# வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் அன்பளிப்பு

மானிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினுள் உலக வங்கியின் வீட்டுத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேச செயலர் பிரிவில் உலக வங்கியின் 5 ஆம் கட்ட வீட்டுத்திட்டத்திற்கு இதுவரை தெரிவு செய்யப்பட்ட 84 பயனாளிகளுக்கு 2 தென்னங்கன்றுகளும் ஒருமாமரக் கன்றும் ஒரு மாதுளை மரக் கன்றும் வழங்கப்பட்டுள்ளன.

இம்மரக் கன்றுகள் 4 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஒரு பொதுவான இடத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. உலக வங்கியினரால் வழங்கப்பட்டு வரும் இம் மரக் கன்றுகளைப் பெறாதவர்கள் கிராம அலுவலர் ஊடாக தொடர்பு கொண்டு பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆலய மகா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை,

பிரசித்திபெற்ற தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்திற்கான எண்ணெய்க் காப்பு நிகழ்வு 21 ஆம், 22 ஆம் திகதிகளில் காலை 7 மணி தொடக்கம் 5 மணிவரை இடம்பெறும்.

இக்கும்பாபிஷேகப் பணிக்கான ஆயத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. ஆலய புனரமைப்பு வேலைகளாக முகப்பு மண்டபம் திருத்துதல், திருமஞ்சனக் கிணறு திருத்தல், அர்த்த மண்டபம், மகா மண்டபம் திருத்தியமைத்தல், இராஜகோபுரம் தூபிகள் வர்ணம் பூசுதல் போன்ற வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்திற்கு காண்டாமணியொன்று இங்கிலாந்திலுள்ள துர்க்கை அம்மன் ஆலய அடியவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பொருத்துவதற்கு வசதியாக மணிக்கூட்டு கோபுரம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் தொடரும் மழையால் குளங்களின் நீர் மட்டம் உயர்வு

கிளிநொச்சி,

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடைவிடாது பெய்து வரும் மழையினால் மீண்டும் மீளக்குடியேறிய மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல குளங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து தொடர்ந்தும் வான் பாய்ந்த வண்ணம் உள்ளது. பல இடங்களில் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது. போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்கள், மக்களின் வாழ்விடங்கள் யாவும் வெள்ளப் பெருக்கால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுகள், வர்த்தக நிலையங்களுக்கு மேலாகவும் வெள்ளம் உட்புகுந்ததால் அதிக சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டதுடன் இவ்வாறான கடைகள் மூடப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கச்சேரி முன்பாகவும் புகையிரத வீதி மற்றும் ஐயனார் ஆலய வீதி

### போக்குவரத்தும் பாதிப்பு

முதலானவை வெள்ளத்தில் மூழ்கியதுடன் பாரிய சுகாதாரப் பிரச்சினையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனையிறவு-குறிஞ்சாத்தீவு ஏ -9 வீதி தொடர்ந்தும் சேதமாகிவருவதாலும் பளை - கரந்தாய்க் குளம் மேவி நீர் பாய்வதாலும் 'ஏ -9' வீதிப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பூநகரியிலும் பல இடங்களில் வீதிகளின் மேலாக வெள்ளம் பாய்கிறது. வன்னேரிக்குளம் மேவிப் பாய்வதால் ஜெயபுரம் வீதியால் பயணிப்பதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தட்டுவன்கொட்டி, பரந்தன் - கோரக்கன்கட்டு பகுதிகளில் மிகமோசமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மீண்டும் இப்பகுதி மக்கள் தமது வாழ்விடங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து பொதுஇடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.




# வடக்கிலிருந்து விரட்டப்பட்ட சிங்கள மக்கள் இதுவரை மீள்குடியேற்றப்படவில்லை

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அவதானம் தேவை என சம்பிக்க ரணவக்க சாட்சியம்

(நமது நிருபர்)

தமிழ்ப் பிரிவினைவாதிகள் ஆயுதம் ஏந்தியமைக்கு எவ்விதமான நியாயமான காரணங்களும் இருக்கவில்லை. 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆறு மாதங்களில் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறினர். ஆனால், அன்று வடக்கு - கிழக்கிலிருந்து விரட்டப்பட்ட சிங்கள மக்கள் இன்று வரை மீள்குடியேற்றப்படவில்லை. அப்படிப் பார்க்கும்போது பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களேயாவர். தமிழ் மக்களை விடுத்து சிங்கள மக்களே கிளர்ச்சி செய்திருக்க வேண்டியவர்கள் என்று மின்சக்தி அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதியுமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சிங்களமக்கள் தொடர்பில் முக்கிய அவதானம் செலுத்த வேண்டும். இயற்கை வளர்ச்சி மற்றும் நகரங்களை நோக்கிக் குடிபெயர்தல் போன்ற காரணங்களை வைத்துப்பார்த்தால் இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் சிங்கள மக்கள் இருந்திருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் ஆணைக்குழுவின் தலைவர் சி. ஆர்.டி. சில்வா கலந்துகொண்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

சம்பிக்க ரணவக்க அங்கு தொடர்ந்து கூறியதாவது:- முக்கிய விடயம் ஒன்று தொடர்பில் இவ்வாறு தகவல் திரட்டும் ஆணைக்குழுவுக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். கடந்த 30 வருடகால பிரிவினைவாதப் பயங்கரவாதத்துக்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுவதுண்டு.

அதாவது, சிங்களப் பெரும்பான்மை மக்கள் உள்ள நாட்டில் தமிழ் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று ஒரு கருத்து உள்ளது. வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் முக்கியமானவர்கள் என்பதால் அவர்களுக்கு பிரிந்துவாழும் உரிமை உள்ளது என்றதொரு கருத்து நிலவுகின்றது. மேலும், தமிழ் மக்கள் சமூக, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.

இதேவேளை, பொய்யான வரலாற்று விடயங்களை காரணமாகக் கொண்டு இனவாதிகள் ஆயுதம் ஏந்தினர் என்றும், அதற்கு சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியதாகவும், அதனை

தவிர்க்க அப்போதைய அரசாங்கங்கள் தவறிவிட்டன என்றும் கருத்து நிலவுகின்றது.

### சிங்களம் மட்டும் தேவை இருந்தது

அடுத்ததாக, சிங்களம் மட்டும் அரசகரும மொழி விடயமாகும். சிங்கள மொழி என்பது இலங்கையில் உருவாகி 3,000 வருடங்களாகப் பேணப்படும் மொழியாகும். உலகில் உள்ள ஆறாயிரம் மொழிகளில் எமது மொழியும் உள்ளது. காலனித்துவ ஆட்சியின் பின்னர் சிங்கள மொழியை அரசகரும மொழியாக உருவாக்குவது அன்றைய கட்டாயத் தேவையாக இருந்தது. அந்த வகையில், இந்தச் சட்டம் 1956 ஆம் ஆண்டு வந்தது. ஆனால், இரண்டு மாதங்களில் வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக ஆக்கப்பட்டது. பலர் இதனை மறந்துவிட்டனர்.

### சிங்கள மக்களுக்கு அசௌகரியம்

குப் பின்னர் வடக்கு - கிழக்கில் வசித்த சிங்கள மக்களின் அனைத்து விடயங்களும் தமிழ்மொழியிலேயே இடம்பெற்றன. பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை என பலவற்றைக் கூறலாம். தெற்கில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட மொழிப் பிரச்சினையை வடக்கு - கிழக்கில் சிங்கள மக்கள் எதிர்கொண்டனர். இதனால், ஆயுதம் ஏந்தப்பட்டது என்பதனை ஏற்க முடியாது. 1988 ஆம் ஆண்டு தமிழ்மொழியும் அரசகரும மொழியாக வந்தது. இந்தியாவில் கூட இந்த நிலைமை இல்லை.

### 1983 கலவரத்தில் சிங்கள மக்களே பாதிக்கப்பட்டனர்

அடுத்த விடயமாக, 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தை பார்ப்போம். அந்தக் கலவரத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், தெற்கில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டது போன்று வடக்கு - கிழக்கில் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டனர். 1983 ஆம் ஆண்டு கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆறு மாதங்களில் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறினர். ஆனால், அன்று வடக்கு - கிழக்கிலிருந்து விரட்டப்பட்ட சிங்கள் மக்கள் இன்று வரை மீள்குடியேற்றப்படவில்லை. அப்படிப் பார்க்கும்போது பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களேயாவர்.

எனவே, இதற்காக ஆயுதம் ஏந்தப்பட்டது என்பதனையும் ஏற்கமுடியாது. அப்படிப் பார்க்கும்போது தமிழ் மக்களை விடுத்து சிங்கள மக்களே கிளர்ச்சி செய்திருக்க வேண்டியவர்கள்.

### சிங்களவர்களுக்கு எதிராக 202 தடவைகள் இனப்படுகொலை

1984 ஆம் ஆண்டிலிருந்து புலிகள், சிங்கள மக்களுக்கு எதிராக 202 தடவைகள் இனப்படுகொலைகளை நடத்தியுள்ளனர். ஒவ்வொரு தடவையும் ஆறு பேருக்கு மேலாகக் கொல்லப்பட்டுள்

எனினும், சிங்கள மக்கள் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிராக எழவில்லை. 1984 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரை சிங்கள மக்கள் 3,028 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் 3,051 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 1,353 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 2,690 பேர் அடையாளம் காணப்படவில்லை. காயமடைந்தவர்கள் 10,401 ஆவர். மொத்தம் 10,971 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

### வடக்கில் ஏன் சிங்களவர்கள் வாழமுடியாது?

வடக்கு - கிழக்கில் குடியேற்றங்கள் பற்றிக் கூறுகின்றனர். 1971 ஆம் ஆண்டளவில் வடக்கில் பல இடங்களில் சிங்கள மக்கள் அதிகளவில் வாழ்ந்துள்ளனர். ஆனால், இன்று என்ன நிலைமை காணப்படுகின்றது? தமிழ் மக்கள் எங்கும் வாழலாம்? ஆனால், சிங்கள மக்கள் வடக்கு - கிழக்கில் கடந்த காலங்களில் வாழ முடியாது? இவ்வாறான இனவாத நாஷிசவாத நிலைமையே அங்கு காணப்பட்டது. இயற்கை வளர்ச்சி மற்றும் நகரங்களை நோக்கிக் குடிபெயர்தல் போன்ற காரணங்களை வைத்துப் பார்த்தால் இன்று யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் சிங்கள மக்கள் இருந்திருப்பார்கள்.

ஆனால், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் குடியேற்றங்கள் பாரியளவில் இடம்பெற்றுள்ளன. இதற்கு ரெட்பானா மற்றும் தமிழ் புனர்வாழ்வுக் கழகம் என்பன உதவிகளை வழங்கியுள்ளன. இந்தக் குடியேற்றங்கள் எங்கிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று முன்னாள் புலிப் போராளிகள் கூறும் விடயங்களை வைத்து புரிந்துகொள்ளலாம். அதாவது, அவர்களின் வரலாறு இரத்தினபுரி, பதுளை, மாத்தளை போன்ற பகுதிகளில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையால் கலாபூஷணம் விருது பெற்ற கலைஞர்களுக்கு கௌரவிப்பு விழா அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கௌரி மோகன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதேச செயலர் பா.செந்தில் நந்ததன் உரையாற்றுவதையும் உதவி பிரதேச செயலர் என்.கோபிநாதன் கலைஞர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நெடுந்தீவு நிருபர்)

# இரணைமடு நீர் யாழ்ப்பாணம் வருவது சாதாரண விடயமல்ல அதனைக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கவை

## யாழ். அரச அதிபர்

(யாழ் மத்தி நிருபர்)

இரணைமடுவிலிருந்து யாழ். குடாவிற்கு குடி தண்ணீர் தேவைக்காக நீரைக் கொண்டு வருவது என்பது சாதாரண விடயமல். இருப்பினும் அதனைக் கொண்டு வர எடுக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கன. கிளிநொச்சி மக்களை பொறுத்தவரை இது அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை யாழ்.குடா நாட்டு மக்களுக்கு குடிநீர் பிரச்சினை. இருந்தும் இரு பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், விவசாய அமைப்பினர், கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஆகியவர்களின் ஒத்துழைப்பினால் இப் பாரிய திட்டம் 164.4 மில்லியன் ரூபா செலவில் ஜனவரியில் ஆரம்பிப்பதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன் என யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்.கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன திட்டம் அணி'க்க கூட்டம் நேற்று காலை யாழ். அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.கிளிநொச்சி மாவட்டத் திணைக்கள தல'வர்கள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபை செயலாளர்கள், மற்றும் பல உயரதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் யாழ். அரச அதிபர் மேலும் கூறுகையில், இரணைமடு குளத்து நீரை யாழ். குடாவிற்கு நகர்த்துவதற்கு 2002 இல் இருந்து தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் திட்டப்பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன் சாத்திய வள ஆய்வுகளையும் கற்கைகளையும் முன்னிலைப்படுத்தல்களையும் மேற்கொண்டு அபிவிருத்தி செய்கின்றார். இதற்காக 20 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தினை முன்னகர்த்த ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரெஞ்சு அபிவிருத்தி நிறுவனம், இலங்கை அரசு என்பன நிதிப் பங்களிப்பினை மேற்கொள்ளவுள்ளன. யாழ்.குடாநாட்டு மக்கள் குடி தண்ணீருக்காக மிகப் பெரிய கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

சண்டிலிப்பாய் கல்லுண்டாய் பிரதேசத்தில் வடிகால் அமைப்புத் திட்டம் அமைப்பதற்கு பொருத்தமான தொழில்நுட்பத்தின் கீழ் 10 ஹெக்ரெயர் காணி தேவையேற்றப்பட்டால் அதனை நாம் வழங்கியே ஆக வேண்டும்.

ஏனெனில் பொருத்த பிரதேசமாக கல்லுண்டாய் ஏற்கெனவே திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதால் அது சம்பந்தமாக மேலும் கருத்துக்களை உள்வாங்கி பொது மக்கள் பாதிக்கப்படாத வகையில் திட்டம் உள்வாங்கப்படவேண்டும். மேலும் நிலப் பிரச்சினை தொடர்பாக சகல பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி சபை செயலாளர்கள், மாநகர சபை அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் எமது செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் துரிதமாக இயங்க வேண்டும். அப்போது தான் இந்த குடிதண்ணீர் திட்டத்தை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல முடியும் - என்றார்.

தொடர்ந்து யாழ்., கிளிநொச்சி நீர் வழங்கல் சுகாதார திட்டப் பணிமனை திட்டப்பணிப்பாளர் பொறியியலாளர் தி.பாரதிதாசன் கூறுகையில், யாழ்., கிளிநொச்சி இரணைமடு குடிதண்ணீர் திட்டம் ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டம் 2011 ஜனவரி முதல் 2017 ஜனவரி வரை இடம்பெறும். ஆரம்ப கட்ட வேலைகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காகப் பொறியியலாளர், பணிப்பாளர், சமூகவியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் என பலரை இணைக்கவுள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் இரணைமடு குளத்து நீரை வழங்கும் 23 பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அப்பிரதேசங்களுக்கு மட்டுமே குடி தண்ணீர் வழங்கப்படும் என விளக்கியதுடன் யாழ். மாவட்ட சகல திணைக்கள தலைவர்களும் மேற்படி கூட்டத்தில் வலி.தென் மேற்கு பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாதன், மத்திய சுற்று சூழல் அதிகாரி திருமதி எஸ்.விஜயகுமார், கிளிநொச்சி மாவட்ட கமக்கார குழு தலைவர் எஸ்.மனோகரன், எஸ்.சிவப்பிரகாசம் ஆகியோர் கருத்துக்களைத் தெரிவித்தனர். இறுதியாக யாழ். அரச அதிபர் இத் திட்டம் தொடர்பாக தொகுப்பு ஒன்றை வழங்குகையில் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் இரணைமடு குளத்து நீரை யாழ். குடா நாட்டுக்கு கொண்டு செல்வதில் எதிர்ப்பினை தெரிவித்தார்.

வாழ்வாதார பிரச்சினை குடிநீர்ப் பிரச்சினை இரண்டும் எமது மக்களுக்கே. எனவே கிளிநொச்சி யாழ்.மக்கள் பாதிக்கப்படாத அபிவிருத்தி திட்டமாக குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்படுவோம் என யாழ்.அரச அதிபர் தெரிவித்தார்.

# மரத்தளபாட கொள்வனவுக்கு கடனுதவி

அச்சுவேலி,

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ள பிராந்திய மரக் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் ஒரு இலட்சம் ரூபா வரையிலான மரத்தளபாடங்கள் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டள்ளன.

கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யும் பயனாளிக்கு இரண்டு அரசாங்க ஊழியர்களின் பிணை ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

தளபாடங்கள் நியாய விலைக்கு கடன் அடிப்படையில் வழங்கப்படும் என பிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்தியத் தலைவர் எஸ். ஸ்ரீஸ்கந்தராசா அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் குருநகர் கடற் கரைவீதியில் 25 ஆம் இலக்கத்தில் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், காட்சியறை, அலுவலர்களுக்கான சுற்றுலா விடுதி என்ப திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த விற்பனை நிலையத்தின் மூலம் யாழ். மாவட்ட மக்கள் தமக்குத் தேவையான அரிந்த மர வகைகள், மற்றும் தளபாடங்களை நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும். தளபாடக் காட்சி அறையில் தமக்குத் தேவையான தளபாடங்களைப் பார்வையிட்டு கொள்வன செய்யமுடியு என பிராந்தியத் தலைவர் அறிவித்துள்ளார்.

# விழிப்புக் குழுக்களை அமைந்துள்ள கைதடி சனசமூக நிலையங்கள்

கைதடி

கைதடிப் பிரதேசத்தில் இயங்கும் 10 சனசமூக நிலையங்களும் தமது உறுப்பினர்களைக் கொண்டு இரவு நேர விழிப்புக் குழுக்களை அமைத்து உள்ளன.

கிராமம் முழுவதையும் உள்ளடக்கிய இவ் விழிப்புக் குழுக்கள் இரவு முழுவதும் கடமை புரிகின்றன. இராணுவத்தினரின் சைக்கிள் ரோந்து அணி இவ்விழிப்புக்குழுக்களை ஒரு மணி நேரத்திற்கு ஒருதடவை சந்தித்து நிலைமையை உறுதிப்படுத்திக் கொள்கின்றது. வெளிப் பிரதேசத்திலிருந்து கைதடிக்குள் நுழையும் வீதிகள் தோறும் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர். தினந்தோறும் கடமை புரியும் விழிப்புக்குழுக்களின் உறுப்பினர்களின் பெயர்கள், கைத்தொலைபேசி இலக்கங்களை இராணுவத்தினர் பெற்று அவர்களுடன் தொடர்பாடலையும் மேற்கொள்கின்றனர்.

பகல்வேளைகளிலும் இராணுவத்தினர் நடந்தும் சைக்கிளிலும் ரோந்துப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

இவற்றால் இரவு, பகல் கொள்ளை கால் நடைகளின் களவு எவையும் அண்மைய ஒரு வார காலமாக இடம்பெறவில்லை. இரவு வேளையில் வித்தியாசமான சத்தம் எது கேட்டாலும் மக்கள் உஷாராயிருப்பதையும் காணமுடிகின்றது.

# இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி

இலங்கையில் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுக் கொள்ளும் சகல மாணவர்களுக்கும் அடுத்த ஆண்டு முதல் இராணுவ முகாம்களில் தலைமைதுவப் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் உள்ள சகல மாணவர்களுக்கும் மூன்று வார காலம் இராணுவ முகாம்களில் மேற்படி தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ முகாம்களில் வழங்கப்படும் இந்த தலைமைத்துவப் பயிற்சிகளை இராணுவப் பயிற்சியாகக் கருதக்கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாணவ மாணவியரின் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த ஆண்டு முதல் கணினி மற்றும் ஆங்கிலப் பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டொப்பந்தத்தை புறந்தள்ளி வைத்துவிட்டு மக்களுக்கு சம்பள உயர்வை பெற்றுத்தர வேண்டும்

**- ம.ம.மு. வலப்பனை தொகுதி பொறுப்பாளர் கோரிக்கை**

மஸ்கெலியா

நாட்டில் பொருட்களின் விலைவாசி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வசதிபடைத்தவர்களே செலவு செய்ய யோசிக்கின்ற நேரத்தில் தினசரி சம்பளம் பெறும் சாதாரண மக்களின் நிலையைச் சொல்லத் தேவையில்லை.

இந் நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது மலையக மக்கள் பிரதிநிதிகளின் தார்மீகக் கடமையாகும். அதையுணர்ந்து கூட்டு ஒப்பந்தத்தைப் புறந்தள்ளி வைத்துவிட்டு சம்பள உயர்வைப் பெற்றுத்தர வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் வலப்பனை தொகுதிப் பொறுப்பாளர் எஸ்.கோவிந்தராஜ் தெரிவித்தார்.

இராகலை ஹல்கரனோயா டெல்மார் தோட்ட நடுப்பிரிவில் நடைபெற்ற மலையக தொழிலாளர் முன்னணியின் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரிவு முக்கியஸ்தர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களான கோதுமை மா, அரிசி, சீனி, பாண், தேங்காய் முதலானவற்றின் விலைகள் வானளவு உயர்வடைந்துள்ளன. எனினும் ஏற்கனவே கிடைத்துவரும் வருமானம் சம்பளப் பணத்தைக் கொண்டே சாதாரண மக்கள் தமது அன்றாட வாழ்வை நகர்த்த வேண்டியுள்ளது.

அதேநேரம் அண்மைக்கால விலையுயர்வை முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பெருந்தோட்ட மக்கள் சொல்லொணா துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

ஒருநாள் சம்பளம் ஒரு குடும்பச் செலவுக்கு போதாத நிலையில் வறுமையின் கோரப் பிடியுள் சிக்கியுள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப் பற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கம் அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களினதும் நலனில் காட்டும் அக்கறையை தேசிய பொருளாதாரத்துக்கு உந்து சக்தியாகத் திகழும் உழைக்கும் மக்கள் மீதும் காட்ட வேண்டும். இது தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிவரும் மலையகத் தலைமைகள் மௌனம் சாதித்து வருகின்றமை புரியாத புதிராக இருக்கின்றது.

எனவே இன்றைய சூழ்நிலையில் கூட்டு ஒப்பந்தத்தைப் புறந்தள்ளி வைத்து விட்டு அரசாங்கத்துடனும் தோட்டக் கம்பனிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதே தொழிலாளர்களின் பல்வேறு கஷ்டங்களுக்கும் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அமையும் என்றார்.

# புதிய நூற்றாண்டின் சவால்களுக்கு முகங்கொடுக்க கல்வியில் முன்னேற வேண்டும்

**அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் எஸ். சிவசுந்தரம்**

மஸ்கெலியா,

பெற்றோரின் பரம்பரைத் தொழிலையே செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து மாறி புதிய நூற்றாண்டுக்கும், சவால்களுக்கும் முகங் கொடுக்கக் கூடிய வகையில் கல்வியில் அக்கறை காட்டி முன்னேற வேண்டும் என அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினரும், இ.தொ.கா. உதவிச் செயலாளர்களில் ஒருவருமான செல்லையா சிவசுந்தரம் தெரிவித்தார்.

மஸ்கெலியா குடா மஸ்கெலியா கிராமத்தின் 'சர்வோதய சந்தரஸ்' முன்பள்ளி மாணவர்களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியை திருமதி குணசேகர தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில், நாம் எமது கலை, கலாசாரம் பாரம்பரியங்களைப் பின்பற்றி பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அந்த வழியில் எமது பிள்ளைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும். அதே நேரம் பெற்றோர்கள் செய்து வரும் தொழிலைத் தான் பிள்ளைகளும் செய்ய வேண்டும் என்று எண்ணி விடக் கூடாது.

குடா மஸ்கெலியா கிராமத்தைப் பொறுத்த வரையில் வீட்டிற்கு வீடு சாரதிகளும், வாகனம் பழுது பார்க்கின்ற மெக்கானிக் மார்களும் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனைவருமே மிகுந்த திறமை படைத்தவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

ஆனால் இக்கிராமத்திலிருந்து ஆசிரியர்களோ, வைத்தியர்களோ, சட்டத்தரணிகளோ, பொறியியலாளர்களோ உருவாகாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இங்குள்ள பெற்றோர்கள் இருபது வயது வந்தவுடன் தமது பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் முடித்து வைத்து விட வேண்டுமென்பதோடு நின்று விடக்கூடாது.

அதேபோல் பரம்பரைத் தொழிலுக்கு தமது ஆண் பிள்ளைகளைத் தயுார் செய்தால் போதுமென்றும் எண்ணி விடக்கூடாது. அதற்கு அப்பால் பிள்ளைகள் உயர் கல்வி கற்று உயர்ந்த தொழில் பார்க்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

கடந்த காலங்களைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. இன்று முன்பள்ளிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வரும் சின்னஞ் சிறார்களையாவது எதிர்காலத்தில் உயர் கல்வி பெறுவதற்கும் அதன் மூலம் கிராமம் எழுச்சி பெறுவதற்கும் வழிகாட்ட வேண்டும் என்றார்.

# கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் தோட்டத் தொழிலாளி உயிரிழப்பு

(பண்டாரவளை மேலதிக நிருபர்)

கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் தோட்டத் தொழிலாளியொருவர் உயிரிழந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அட்டாம்பிட்டிய முதலாம் பிரிவு தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா செல்லையா (வயது 50) என்ற தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கொலைக்கு குடும்பத் தகராறே காரணமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொலை தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் நேற்று முன்தினம் மாலை வரை கைது செய்யப்படவில்லை.

தலைப் பகுதியே தாக்குதலுக்கு உட்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெலிமட நீதிமன்ற நீதிபதி குறித்த பிரதேசத்துக்கு சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார். பண்டாரவளை பொலிஸாரின் ஆலோசனைக்கு அமைய அட்டாம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதில் இடிந்து விழுந்ததில் வீடு முற்றாக சேதம்

(காவத்தை மேலதிக நிருபர்)

மதில் சுவர் இடிந்து விழுந்ததில் வீடொன்று முற்றாக சேதமடைந்ததுடன் வீட்டின் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை காவத்தை - யான்ன பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாகவே மேற்படி சேதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது தெய்வாதீனமாக உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதே வேளை மாலை வேளைகளில் இப்பகுதியில் பெய்துவரும் கடும் மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியரின் வீட்டில் நகைகள் கொள்ளை

பதுளை,

வைத்தியரொருவரின் வீட்டை உடைத்து உட்புகுந்த திருடர்கள், இரண்டு இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதிமிக்க தங்க நகைகளைத் திருடியிருப்பதாக எட்டாம்பிட்டிய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எட்டாம்பிட்டியவை அண்மித்த பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டை மேற்கொண்ட திருடர்களினால் கைவிடப்பட்டிருந்த திறப்புக் கோர்வையைக் கைப்பற்றிய பொலிஸார் திருடர்களைக் கண்டுபிடித்து கைது செய்யும் முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

எட்டாம்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி. கால்லகே, திருடர்களைக் கண்டுபிடிக்கும் வகையில் பதுளைப் பொலிஸ் நிலையத்திலிருக்கும் மோப்ப நாய்களை வரவழைக்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் சந்தையை புதிய இடத்திற்கு மாற்ற நடவடிக்கை

யாழ்ப்பாணம்

போக்குவரத்திற்கு இடையூறாக வசதியீனங்களுடன் பல வருடங்களாக இயங்கி வரும் சண்டிலிப்பாய்ச் சந்தை மிக விரைவில் புதிய காணிக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் மாகாண சபையின் அங்கீகாரத்தை எதிர்பார்த்திருக்கிறார்.

மேற்படி சந்தை சண்டிலிப்பாய் கிராமத்தில் சண்டிலிப்பாய் இளவாலை பிரதான வீதியின் ஓரமாக பல வருடங்களாக இயங்கி வருகிறது. நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் இச் சந்தை சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்குக் காணி இல்லாதிருந்தது.

இப்பகுதி மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக இரண்டு பரப்புக் காணி இச் சந்தைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

COLOMBO STOCK EXCHANGE

**பங்குச்சந்தை யாழ்ப்பாணம்**

**தை 05 2011**

| பங்குசந்தைச் சுட்டிகள் | இன்று | நேற்று |
|---|---|---|
| அனைத்துப் பங்கு (ASPI) | 6754.31 | 6698.71 |
| மிலங்கா (MPI) | 7156.35 | 7087.28 |

**உரிமைமுதல் தகவல்கள்**

| | |
|---|---|
| வியாபாரப்புரள்வு (Rs.) | 3580.38 Mn |
| பங்குகளின் அளவு (No.) | 331.56 Mn |
| வியாபாரம் (No.) | 32172 |

**விலை அசைவுகளின் அடிப்படையில்**

| அதிகரிப்பு (Top 5 gainers) | விலை (Rs) | +% |
|---|---|---|
| நீப்கொம்பர் (W17) | 29.60 | 42.86 |
| மிறமார் பிச் ஹொட்டல் | 178.00 | 37.00 |
| பேருவளை வேர்க்கின் | 129.00 | 26 |
| நீப்கொம்பர் (W18) | 42.50 | 25.74 |
| நீப்கொம்பர் (W19) | 19.60 | 19.05 |

| குறைவு (Top 5 Losers) | விலை(Rs) | (-)% |
|---|---|---|
| சீலின்சிங் | 450.00 | 18.18 |
| ரீ சிமோல் | 220.00 | 13.73 |
| சோ வலஸ் | 205.00 | 10.32 |
| பி சி கவுஸ் | 14.50 | 9.94 |
| கொழும்பு பேட் | 206.00 | 5.94 |

## முறைப்பாடு

வேலணை

யாழ். குடா நாட்டிலுள்ள சில தனியார் வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் பாவனையாளர்கள் பார்வைக்கு வைப்பது இல்லை என மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்காத வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பவுசர் மூலம் மண்டைதீவுக்கு குடிதண்ணீர் விநியோகம்

வேலணை

வேலணைப் பிரதேச சபையினர் மண்டைதீவுக்கு பவுசர் மூலம் குடிநீர் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் செ.தவராசா இதற்கான ஒழுங்களை மேற்கொண்டுள்ளார்.

சாட்டிப் பகுதியிலிருந்து குடிநீர் பெற்று தினமும் பவுசர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை அல்லைப்பிட்டிப் பகுதியில் இருந்து குழாய் மூலம் மண்டைதீவுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவுமாறு நீண்ட நாட்களாக மக்கள் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 49 சிசி மோட்டார் சைக்கிள் பதிவு எல்லையை நீடிக்குக!

(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் '49 சிசி' மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கான கால எல்லையை நீடிக்குமாறு அதன் பாவனையாளர்கள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் '49 சிசி' மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்தவர்களுக்கான வாகனப்பதிவு ஆவணம் விற்பனை செய்யும் முகவர்களால் உடனடியாக வழங்கப்படுவதில்லை என்றும் அந்த வாகனப்பதிவு ஆவணங்களைப் பெறுவதற்கு தாம் மாதக்கணக்கில் குறித்த விற்பனை முகவர் நிலையங்களுக்கு அலைந்து திரிய வேண்டியுள்ளதாகவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இந்தத் தாமதம் காரணமாகவே பதிவு நடவடிக்கைகள் தாமதமடைவதாகவும் எனவே இந்தப் பதிவுத் திகதியை நீடிக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நாடகப் போட்டியில் முதலாமிடம்

அச்சுவேலி

திருமலைக்கலா மன்றத்தினால் 'போரினால் பாதிக்கப்பட்ட இளையோரின் ஆக்கத்தின் வெளிப்பாடு' என்ற தொனிப் பொருளில் கிராம மட்டத்தில் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் 'மீண்டெழும் வாழ்க்கை' நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

'மீண்டெழும் வாழ்க்கை' என்ற நாடகத்தை உடுப்பிட்டி இலக்குமி மற்றும் பருத்தித்துறை அல்வாய் பகுதி இளையோர் ஆற்றுகை செய்திருந்தனர்.

நாடகப் போட்டியில் மேலும் மூன்று நாடகங்கள் சிறந்த நாடகம் என்ற வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

'இளையோரின் தேய்பிறை' குப்பிளான் பகுதி இளையோரின் ஆற்றுகை. 'விவசாயியும் கழுதையும்' பொலநறுவை இளையோரின் ஆற்றுகை. 'புதிய ஊற்று சில்லாலை' இளையோரின் ஆற்றுகை என்பது குறிப்பிடத்தக்கது.

# மண்டைதீவு அல்லைப்பிட்டி கடல் வீதி புனரமைக்கும் பணி எப்போது?

யுத்த அனர்த்தங்களால் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக பாதுகாப்பு காரணங்களுக்காக கடற்படையினரால் மூடப்பட்ட வீதி அண்மையில் பொது மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டது. எனினும் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது துண்டிக்கப்பட்டு உருக்குலைந்து காணப்படுகின்றது.

இவ் வீதியை புனரமைத்து பொது மக்கள் பாவனைக்கு கையளிக்க யாழ். மாவட்ட வீதி அதிகாரிகள் முன்வரவேண்டும்.

மேற்படி வீதி மண்டைதீவு முன்னாள் கிராம சபைத் தலைவர் க.கைலாசபிள்ளை முன்னாள் கிராம கிராமத் தலைவர் மு.நவரட்ணராஜா மற்றும் பிரமுகர்கள் பெருமுயற்சியால் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ் வீதி அபிவிருத்தி வேலைகள் இடம் பெற்ற போதும் இங்குள்ள பரவைக்கடலை பாரிய கற்கள் போட்டு நிரவும் பணி முற்றுப் பெறாமல் நீண்ட காலமாக இழுபறியில் உள்ளது.

மண்டைதீவுக்கு மிக அண்மையில் உள்ளது அல்லைப்பிட்டி ஆகும். இவ் இரு கிராமங்களையும் பிரிக்கும் பரவைக் கடல் ஆகும். ஆகவே இப்பரவைக்கடலை பாரிய கற்களால் மூடி வீதி அமைக்கும் பணிக்கும் முன்னாள் வேலணை பெரும் தெருக்கள் திணைக்கள நிறைவேற்று பொறியிலாளர் காலத்தில் முற்று பெற்று பொது மக்கள் பாவனையில் இருந்து வந்தது. இதற்கு முன்பு மேற்படி இடங்களை சேர்ந்த மக்கள் முழங்காலுக்கு மேலான தண்ணீருக்குள் கால்நடையாக போக்குவரத்து செய்து வந்தனர்.

மேற்படி வீதியை புனரமத்து மண்டைதீவூடாக ஊர்காவற்றுறைக்கு இ.போ.ச பஸ் சேவை ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப் பட்டபோதும் அது நடைமுறைப் படுத்தவில்லை. மேற்படி வீதி புனரமைப்பு பணிகளுக்கு தீவுப்பகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.க.பொ.இரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்ட நிதியில் பெரும் தொகைப் பணத்தை ஒதுக்கி கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக பெய்து வரும் பெரு மழை காரணமாக இவ் வீதி மிகவும் பாதிக்கப்பட்டு உருக்குலைந்து காணப்படுகின்றது. இவ்வீதியால் மக்கள் பிரயாணம் செய்ய முடியாது பல வித கஷ்டங்களை அனுபவித்த வருகின்றனர்.

வீதி நீண்ட காலம் புனரமைக்காமையினால் பாரிய குண்டு குழிகளுமாக காணப்படுகின்றது. இதனுள் மழை வெள்ளம் நிரம்பி சிறு சிறு குளங்களைப் போல் காட்சியளிக்கின்றது.

வீதி அதிகாரசபை அதிகாரிகள் இவ் வீதியை விரைவாக புனரமைத்து பொது மக்களுக்கும் வாகனங்களுக்கும் சிரமம் இன்றி போக்குவரத்து செய்வதற்கு வழி வகுத்து கொடுக்கவேண்டும்.

மேற்படி வீதியால் அல்லைப்பிட்டி, சாட்டி, வேலணை முதல் ஊர்காவற்துறை வரை மக்கள் சென்று வருகின்றனர். இதனால் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இவ்வீதியால் போக்குவரத்து செய்து வருகின்றன.

ஆகவே வீதி முழுமையாக புனரமைக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்பு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவு ஊடாக ஊர்காவற்துறை வரை விசேட இ.போ.ச பஸ்சேவை ஒன்றை நடந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். முன்வரும் பட்சத்தில் நீண்ட நாட்களாக நிலவி வரும் மண்டைதீவு அல்லைப்பிட்டி வாழ் மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடலாம்.

இவ்வீதி புனரமைக்கும் பணிக்கு வரவு செலவு திட்டத்தில் பணம் ஒதுக்கி வந்த போதும் முழுமையாக வீதி புனரமைக்க முடியாமல் போய்விட்டது. கடலை நிரவ பாரிய கற்கள் போடப்பட்டும் நிரவ முடியவில்லை. பின்பு பொறியியலாளர் சுந்தரலிங்கத்தின் காலத்தில் அது முழுமையாக நிறைவேற்றி முடிந்தது. அவருக்கு இப்பகுதி மக்கள் நன்றி உடையவராக இருப்பார்கள்.

எஸ்.இராமச்சந்திரா
வேலணை நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியேறிய வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்



## பெரும் மழையாலும் பாதிப்பு

கடந்த முப்பது வருடங்களாக இடம் பெற்ற யுத்தம் முடிவுற்றுள்ள நிலையில் எண்ணற்ற உயிர், உடைமை இழப்புக்களைச் சந்தித்த வன்னி மக்கள் பல விதமான வசதியீனங்களின் மத்தியில் நலன்புரி நிலையங்களில் இருந்து மீண்டு தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கணிசமான அளவில் மீளக்குடியேற்றப் பட்டுள்ளனர். இதேவேளை மீளக் குடியேற்றம் செய்யப்படாமல் ஒரு தொகையினர் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மீளக் குடியேற்றம் செய்யவென நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்களில் பலர் தமது காணிகளில் மீளக்குடியேற்றம் செய்ய அனுமதிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் சொந்த ஊர்களில் பிற இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**நலன்புரி நிலையங்களிலிருந்து மீள்குடியேற்றத்துக்காக அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படும் மக்கள் மீள்குடியேற முடியாத நிலையில் மீண்டும் இடைத்தரிப்பு முகாம்களில் உள்ளனர். அவர்களின் காணிகள் படையினரின் பாவனையில்!**

மேலும், ஒரு தொகையினர் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை கொழும்பு போன்ற இடங்களில் இருந்த உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்து தமது காணிகளில் மீளக்குடியேற வந்தபோது காணிகளில் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் உள்ளனர்.

ஆனால், இவர்கள் அனைவரும் இடைத்தங்கல் முகாம்களில் படைத் தரப்பாலும், சிவில் அதிகாரிகளாலும் உரிய முறையில் பதிவுகள் செய்யப்பட்டு குடும்ப ரீதியாக புகைப்படம் எடுக்கப்பட்டு இலக்கம் இடப்பட்ட நிலையில் படை அதிகாரிகளால் தாம் வாழ்ந்த காணிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அக் காணிகள் யாவும் படையினரின் பாவனையில் உள்ளதால் மீளக்குடியேற அனுமதிக் கப்படவில்லை.

பொதுமக்களின் நிலை இவ்வாறு என்றால் ஆலயங்களின் நிலையும் இதுதான். பிரதான ஆலயமான கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் பூசை வழிபாட்டுக்கு அனுமதிக் கப்பட்டபோதும் ஆலய அர்ச்சகர் விடுதிக்காணி ஏனைய தேவைகளுக் குப் பயன்படுத்தப்படுவதால் இதுவரை ஆலய நிர்வாகத்திடம் ஒப் படைக்கப்படவில்லை.

இது தொடர்பில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், மற்றும் உயர் படை அதிகாரிகள், ஏனைய அரச முக்கியஸ்தர்களுக்கும் அறிவித்தும் ஆவன செய்யப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களில் குறிப்பாக பரவிப்பாஞ்சான், முகமாலை, வேம்பொடுகேணி முதலான இடங்களில் பொதுமக்களின் காணிகளில் மக்கள் மீளக்குடியேற அநுமதிக்கப்படவில்லை.

இதேபோல் பிரமந்தனாறு, தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, இயக்கச்சி, பளையில் வேம்பொடு கேணி, முகமாலை உட்பட்ட பகுதிகளில் மீளக்குடியேற்றம் அநுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திருமுறிகண்டிப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பாரிய பிரச்சினையாகும். இங்கு வாழ்ந்த மக்கள் 1977 – 1983 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் மலையகத்தில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து வந்து தமது சுயமுயற்சியால் காடுகளை அழித்து நிலத்தைப் பண்படுத்தி வீடுகள் அமைத்து விவசாயம் செய்தவர்களாவார். இவர்களில் பலர் சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியாத நிலையில் உள்ளனர்.

இன்று வன்னி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமானது காணிப்பிரச்சினை மற்றையது கல்விப்பிரச்சினை வீட்டுவசதியற்ற பிரச்சினையாகும்.

யுத்தங்காரணமாக பாடசாலைகள் யாவும் இடிந்த நிலையில் இடிபாடான கட்டிடத்தின் மத்தியிலும் மர நிழல்களிலும் தான் கல்வியைத் தொடர்கின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி மத்திய கல்லூரி, பளை மத்திய கல்லூரி முதலானவையின் நிலையும் இதுதான். இதே போல்தான் ஏனைய பாடசாலைகளின் நிலையும்.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளிலும் கல்விச்செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. கட்டடங்கள் இல்லை, தளபாடங்கள் இல்லை ஆய்வு கூடம் இல்லை, நூலக வசதி இல்லை. இல்லை என்ற சொல்லை வன்னியில் அடுக்கிக்கொண்டே போகலாம். முல்லைத்தீவு நகரம் ஒரு காலத்தில் பெரிய நகரங்களில் ஒன்றாக விளங்கியது. கடல் வளமும் விவசாய வளமும் ஒருங்கே அமைந்த மாவட்டம் முல்லைத்தீவு இன்று முல்லைத்தீவு நகரம் சோபை இழந்து கட்டடங்கள் பொதுமக்கள் வாழ்விடங்கள் எல்லாம் இடிந்த நிலையில் நிர்க்கதியான நிலையில்தான் காணப்படுகின்றது.

முல்லைத்தீவில் உள்ள அரச செயலகம் கூட தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. நகரத்தில் வர்த்தக தொழிற் செயற்பாடுகள் பெரிய அளவில் ஆரம்பிக்கப்படவில்லை.

மீளக்குடியேறிய கடற்தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானோர் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மீனவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தூரத்திற்கே கடற்தொழில் நடவடிக்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளும் இவ்வாறான ஒரு நிலையையே எதிர்நோக்குகின்றனர்.

மழை வெள்ளப்பெருக்கால் மீளக்குடியேறிய மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். தறப்பாள் கொட்டில்களின் கீழும் தகரக்கொட்டகையிலும் தங்கியுள்ள மீளக்குடியேறியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எண்ணில் அடங்காதது.

காணிகள் பலவற்றால் மண் அணைகள் செல்கின்றன. பல காணிகள் அடையாளம் காணமுடியாத நிலையில் உள்ளன. தண்ணீர் வடிந்து செல்ல மண் அணைகள் தடங்கலாக உள்ளன.

மீளக்குடியேற்றிய பகுதிகளில் தொற்று நோய் அபாயமும் எதிர் நோக்கப்படுகிறது. முல்லைத்தீவில் டெங்கு நோய் பரவும் அறிகுறியும் காணப்படுகிறது.

யுத்தம் உக்கிரமாக இடம்பெற்ற தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரம் புதுமாத்தளன், இடைக்காடு, ஆனந்தபுரம், வலைஞர்மடம் முள்ளிவாய்க்கல், புதுக்குடியிருப்பு, கேப்பாப்புலவு போன்ற பகுதிகளில் இன்னமும் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. முல்லைத்தீவு வீதிகள் பலத்த சேதமடைந்துள்ளன. இவ் வீதிகளால் பயணிப்பது பாரிய பிரச்சினையாகும். மழை பெய்யும் இவ் வேளை வாகனங்களும் பயணிகளும் அதிக சிரமங்களை எதிர்கொள்வதைக் காணமுடிகிறது.

இவற்றிற்கெல்லாம் சரியான தீர்வுகிட்ட வேண்டும். மீளக்குடியேறிய மக்களுக்கான நிவாரண உதவிகள் சரிவரக் கிரமமாகக் கிடைக்கவேண்டும். தமது பிள்ளைகள் தங்கு தடையின்றிக் கல்வியைத் தொடர ஆவன செய்யப்பட வேண்டும். சீரான மருத்துவ வசதி வேண்டும். இவற்றிற்கு மேலாகத் தமது காணிகள் கூடிய விரைவாக தமக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். என்று இம் மக்கள் வேண்டுகின்றனர்.

கே.வி.கே. திருலோகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடம்பாக்கம் செய்தி கேட்டீங்களா?

தமிழ், ஹிந்தின்னு முருக இயக்குனருக்கு படு கிராக்கியாம்... கிராக்கியாம்... உச்ச இயக்குநரா மாறிவர இப்போ ரியல் எஸ்டேட் பிசினஸ்ல குதிச்சிருக்காராம்... குதிச்சிருக்காராம்...சென்னையில் முக்கிய இடங்கள்ல நிலங்கள் வாங்கி குவிக்கிறாராம்.... குவிக்கிறாராம்...

கீர்த்தியான நடிகை நடிச்ச சுவேதமான படம் ஏற்கனவே ரிலீஸாச்சு. வந்த வேகத்திலேயே பெட்டிக்கும் போச்சு அம்மணி நடிச்ச காட்சிகளை மலையாள படரேஞ்சுக்கு இருக்கிறதால மறுபடியும் படப் பெயரை மாத்தி ரிலீஸ் பண்றாங்களாம்.. பண்றாங்களாம்.... கேட்டா அந்த படம் இல்லை இதுன்னு தயாரிப்பு புருடா விடுறாராம்... விடுறாராம்...

கோ



# மீண்டும் ஒரு தலை ராகம்

**இயக்குநரும்,** நடிகருமான டி.ராஜேந்தர் அடுத்ததாக 'ஒரு தலைக் காதல்' என்ற படத்தை இயக்கி அவரே நாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் மும்பையைச் சேர்ந்த இரண்டு நாயகிகள் டி.ராஜேந்தருக்கு ஜோடியாக நடிக்கின்றனர். இதுகுறித்து நிருபர்களிடம் அவர் கூறியதாவது: 'அடுத்த மாதம் இறுதியில் ஒரு தலைக் காதல் படப்பிடிப்பு தொடங்குகிறது. இதில் நான் கதாநாயகனாக நடிக்கிறேன். இந்தப் படத்தில் மும்பையைச் சேர்ந்த 2 கதாநாயகிகள் நடிக்கிறார்கள். இந்த படத்தில் குத்துப்பாட்டு மட்டும் அல்லாமல் தெம்மாங்கு பாட்டும் இடம்பெறும். 'ஒரு தலை ராகம்' படம் போல இந்த 'ஒரு தலைக் காதல்' படமும் மாபெரும் வெற்றி பெறும். இதன் படப்பிடிப்பு கொல்லிமலை, திண்டுக்கல், தேனி போன்ற பல்வேறு இடங்களில் நடைபெறும். இந்தப் படம் முடிந்த பிறகு குரளரசனை கதாநாயகனாக நடிக்க வைத்து ஒரு படம் எடுக்க உள்ளேன். சிம்பு அரசியலுக்கு வருவாரா? என்பது பற்றி அவர்தான் முடிவு செய்ய வேண்டும். அவர் யாரை காதலித்தாலும் அதை நான் ஏற்று அவருக்குத் திருமணம் செய்து வைப்பேன். காதலிப்பது பெரிய தவறு இல்லை என்றவர் இலட்சிய தி.மு.க.யாரையும் தேடிப்போகாது. வருகிற தேர்தலில் எந்தக் கட்சி எங்கள் ஆதரவைக் கேட்கிறதோ அந்த கட்சிக்கு நாங்கள் ஆதரவு கொடுப்போம். எங்களுக்கு கூட்டணி முக்கியம் அல்ல. கொள்கைதான் காரணம்' என்று சூடாக முடித்தார் டி.ராஜேந்தர். பாவம்ப்பா நம்ம தமிழ் மக்கள்... தலையெழுத்து இந்த கொடுமையெல்லாம் பாக்கணும்னு விதிச்சிருக்கு....

## சினி பிட்ஸ்

- 'வருடத்தில் 2 படத்தில் நடித்தாலும் அது பேசப்படுவதாக இருக்க வேண்டும்' என்றிகிறார் சமீரா ரெட்டி.
- தனது அடுத்த படத்துக்கான திரைக்கதை வசனம் எழுதுவதில் மும்முரமாக இருக்கிறார் கமல் ஹாசன்
- 'சினிமாவை கமர்ஷியல் பொருளாக பார்க்கக் கூடாது' என்கிறார் பிரகாஷ்ராஜ்.
- 'வெப்பம்' படத்தின் பாடல் பதிவு சம்பவங்களை அரைமணி நேர குறும்படமாக தயாரித்திருக்கிறார் கௌதம் மேனன்.
- 'அட்டகாசம்' படத்தை ஹிந்தியில் ரீமேக் செய்ய முயற்சித்து வருகிறார் சரன்.
- 'தம்பிக்கோட்டை' படத்தில் 'உன்னைப் போல் ஒருவன்' கமல் கெட்அப்பில் காமெடி செய்கிறார் சந்தானம்.
- 'இனி சிந்தாது இந்தயி ரத்தம்' படத்துக்கு கதை எழுதுகிறார் வி.சி.குகநாதன். இது அவர் பணியாற்றும் 250ஆவது படமாகும்.
- விஷால் நடிக்கும் படத்தை முடித்த பின் ஜூனில் ஹிந்தி படம் இயக்க செல்கிறார் பிரபு தேவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...ழும் மீரா

...றயப் படங்கள் வேண்டும், தனி நாயகியா
...க வேண்டும் என்றெல்லாம் எனக்கு எந்த
...இல்லை. நாலு படத்தில் நடித்தாலும் நல்ல நடி
...கழ வேண்டும் என்று அடக்கமாக பேசுகிறார்
...தவன்.
...துக்குப் பின்னர் மீண்டும் நடிப்பில் கவனம்
...வருகிறார் மீரா வாசுதேவன். மலையாளத்து
...டிகருடன் புதுக் காதலில் ஈடுபட்டிருக்கும் மீரா
...இந்திப் படம் ஒன்றில் நடிக்கிறாராம். அதே
...லயாளத்திலும் ஒரு படத்தில் நடிக்
...டநாயகன் படத்தில் அவரது
...கு ஏகப்பட்ட பாராட்டுக்
...கின்றனவாம். இதைச்
...கிழும் மீரா, புதிய பட
... வருகின்றன. நல்ல
...த் தேர்வு செய்து
...ாகிறேன். தமிழில்
...டிக்க ஆசையாக
... நல்ல கேரக்டர்
...ால் போதும்,
...ாக நடிக்க
...தயார் என்
... மீரா
...சுதேவன்.



# கையை பிசையும் காவலன்

**காவலன்** படத்தை பார்ப்பதற்கு ரொம்ப ஆவலனாக இருக்கிறான் ரசிகன். ஆனால் நினைத்த மாதிரி திருவிழா நடத்த முடியாது போலிருக்கே என்று இப்போதிலிருந்தே கையை பிசைய ஆரம்பித்திருக்கிறது தயாரிப்பாளர் தரப்பு. தியேட்டர் கிடைக்கவில்லை என்ற பழைய ஸ்லோகம் தான் இதற்கு பதில்.

தமிழகத்தில் மட்டும் சுமார் 600 தியேட்டர்களை கைப்பற்றி விட வேண்டும் என்று துடியாக துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரைக்கும் 200 தியேட்டர்கள் கூட ஒப்பந்தம் ஆகவில்லையாம். ரொம்பவே டென்ஷனோடு நடந்தது சென்சார். ஆங்காங்கே விஜய் பேசும் சில வசனங்கள் நெருப்பை கக்குகிறதாம் தனக்கு எதிரானவர்களை நோக்கி! அதே நேரத்தில் எங்கும் கத்தரி வைக்க முடியாதபடி படம் எடுத்திருக்கிறாராம் சித்திக்.

க்ளைமாக்ஸ் காட்சி அசத்தல். நாங்கள் எங்களை அறியாமல் கண் கலங்கினோம் என்றார்களாம் சென்சார் உறுப்பினர்கள்.

# கமலஹாசன் ஒரு பல்கலைக்கழகம்

**கமல்ஹாசன்** ஒரு நடமாடும் பல்கலைக்கழகம் என்று நடிகை த்ரிஷா கூறியுள்ளார். கமல்ஹாசனின் மன்மதன் அம்பு தனது ஆசை மற்றும் ஏக்கத்தை நிறைவேற்றி விட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார். டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் கமல்ஹாசன், மாதவனுடன் த்ரிஷா நடித்து, தியேட்டர்களில் கலகலப்பாக ஓடிக் கொண்டிருக்கும் படம் மன்மதன் அம்பு. இந்த படத்தில் நடித்த அனுபவம் குறித்து த்ரிஷா அளித்துள்ள பேட்டியில், கமல்ஹாசனை புகழோ புகழென்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார்.

அவர் கூறுகையில், கமல் சாருக்கு உலக விஷயங்கள் அனைத்தும் தெரியும். எதைப் பற்றிக் கேட்டாலும் அதற்கான சரியான பதிலை உடனே சொல்வார். சின்ன சந்தேகம் கேட்டால்கூட அதைப் பற்றிய விரிவான தகவலை எடுத்துச் சொல்வார். ஒரு நாட்டை சுற்றிப் பார்க்கும்போது அந்த நாட்டைப் பற்றிய தகவல்கள், சிறப்பம்சங்கள், வரலாறு உள்ளிட்ட பல அம்சங்களை விரல் நுனியில் வைத்திருப்பார். 'இவ்வளவு தகவல்களை தனது மூளையில் சேமித்து வைத்திருக்கிறாரே என்று நான் பலமுறை வியந்திருக்கிறேன். கமல் சார் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம்தான்! எந்த நாட்டைப் பற்றி கேட்டாலும் இங்கே, இந்தந்த வருடங்களில் இதுவெல்லாம் நடந்தது' அந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் இருக்கும் உண்மையான அரசியல் நிலவரம் என்ன? அந்த நாட்டில் பின்பு ஆட்சி செய்த மன்னர்கள் யார்? அவர்களைப் பற்றிய சிறப்பம்சங்கள் உள்ளிட்ட பல தகவல்களைப் பொழிவார். என்னைப் பொருத்தவரை சினிமாவில் கதாநாயகியாக நடிப்பவர்கள் ஒரு படத்திலாவது கமல் சாரோடு இணைந்து பணிபுரிய வேண்டும். அவரிடம் கற்றுக்கொள்ள நிறைய விஷயங்கள் இருக்கின்றன, என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...



## கூட்டுறவுத்தந்தை வி.வீரசிங்கம்

## இவரைப் பற்றி 25

**இலங்கை கூட்டுறவியக்கத்தின் தந்தை என்ற புகழுக்குரியவர் பெரியார் வி.வீரசிங்கம். யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுச் சபையின் தலைவராக இருந்து அனைவருக்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்தவர். 'கூட்டுறவே நாட்டுறவு' என்பதற்கேற்ப கூட்டுறவுச் சங்கங்களினூடாக மக்களின் வாழ்வை மேம்படுத்தி நாட்டின் உயர்வுக்கு பங்காற்றியவர். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமானவர்கள் வரிசையில் பதிவாகிய இவரைப் பற்றி சில வரிகள்........**

* நல்லோர்களும் பெரியோர்களும் வாழ்ந்த நவாலி என்னும் ஊரில் விஸ்வலிங்கம் - அன்னம்மா தம்பதியினருக்கு மகனாக 1892 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 7 ஆம் திகதி பிறந்தார்.

* ஆரம்பக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்த இவர் பேச்சுப் போட்டிகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் சிறந்து விளங்கினார்.

* மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் போது மாணவர் மன்றத்தின் தலைவராக இருந்து கீழ் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற்பித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றினார்.

* 'விளையும் பயிரை முளையில் தெரியும்' என்ற முது மொழிக்கமைய பெரியார் தனது சிறு வயது தொடக்கம் பாடசாலை வாழ்க்கையில் சிறந்து விளங்கி தனது திறமைகளை வளர்த்துக் கொண்டார்.

* 1911 ஆண்டு பெரியார் தனது பத்தொன்பதாவது வயதில் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த லண்டன் மெற்றிக்குலேஷன் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்.மாவட்டத்தில் தமிழ் மொழியுடன் சிறப்பாக சித்தியடைந்த பெருமையைப் பெற்றவராவர்.

* 'லண்டன் மொற்றிக்லேஷன்' பரீட்சையில் சித்தியடைந்ததன் பயனால் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

* பொருளாதாரம், கல்வி, தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி பெற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட முதலாவது தமிழ்ப் பட்டதாரி என்ற பெருமையைப் பெரியார் பெறறுக் கொண்டார்.

* வீரசிங்கம் தனது 25 ஆவது வயதில் நல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து அவருடன் 16 வருடங்கள் இல் வாழ்க்கையில் இணைந்திருந்தார்.

* 1933 ஆம் ஆண்டு தொடக்கம் தனி வாழ்க்கையைத் தொடர்ந்த பெரியார் கூட்டுறவுச் சேவைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து மனித மேம்பாட்டுக்காக அயராது உழைத்தார்.

* 1922 ஆம் ஆண்டு தொடக்கம் 1952 ஆம் ஆண்டு வரையான 30 வருடங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்துள்ளார்.

* யாழ்.மாவட்டப் பாடசாலைகள் அனைத்திற்கும் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட உயர் கல்வி மான்கன் அதிபராக இருந்த காலப் பகுதியில் முதன் முதலாக பாடசாலை ஒன்றின் அதிபராக இருந்த பெருமை வீரசிங்கத்தையே சாரும்.

* கிராமப் புற மாணவர்களை இலகுவில் கற்கத் தூண்டும் உத்திகள் பலவற்றை இவர் கையாண்டு அவர்களின் பாடசாலை வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

* மாணவர்களுக்குச் சிக்கலான கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை மிக இலகுவிலும், கவர்ச்சியாகவும், சுலபமாகவும் கற்பிக்கும் ஆற்றலுடையவராக 40 ஆண்டுகள் கல்விச் சேவையில் பணியாற்றியுள்ளார்.

* பாடசாலை நிர்வாகிகளுக்கு ஒரு முன்னோடியாக விளங்கிய பெரியார் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அன்பு வழியிலும் ஜனநாயக வழியிலும் வழி நடத்திச் சென்றார்.

* ஏழை மாணவர்கள் புத்தகங்கள் வாங்குவதற்கும் மதிய உணவை அருந்துவதற்கும் தனது சொந்த பணத்திலிருந்து நாளாந்தம் 10 சதம் 20 சதம் வீதம் கொடுத்து வந்துள்ளார்.

* 1952 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத்தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான பெரியார் வீரசிங்கம் தேசிய ரீதியிலான கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அயராது பாடுபட்டார்.

* ஆரம்ப பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை சுயமொழி மூலம் கல்வி போதிப்பதை ஆதரித்து பாராளுமன்றத்தில் ஆணித்தரமான உரைகளை நிகழ்த்தியுள்ளார். தாய் மொழி மீதிருக்கும் பற்றையும் பாசத்தையும் வெளிப்படுத்தினார்.

* கிராமிய மட்டத்தில் வாழ்ந்த ஏழை மாணவர்களுக்கு பெரியாரின் சுயமொழிச் சிந்தனைகள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தன.

* இவர் முன்வைத்த சுயமொழிக் கல்வித்திட்டம் 1956 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டமையினால் கிராமப்புற மாணவர்களும் உயர் கல்விகளைப் பெற்று உயர்வடைந்தார்.

* இந்துக் கோயில்களில் கோழி, ஆடு பலியிடுவதை கடுமையாக எதிர்த்து கிராமங்கள் தோறும் சென்று விழிப்புணர்வுப் பிரசாரங்களைச் செய்து அதில் வெற்றியும் கண்டார்.

* பெரியார் வீரசிங்கம் ஒரு உயர்ந்த கூட்டுறவுச் சிந்தனையாளராகவும் இலங்கை கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கிய பேரறிஞராகவும் விளங்கினார். இதனாலேயே இவர் கூட்டுறவின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

* 1940 ஆம் ஆண்டு பெரியார் வீரசிங்கத்தின் அரும் பெரும் முயற்சிகளினால் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் பல கூட்டுறவு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் யாழ்.மாவட்ட மலையாளம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

* 1929 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக கூட்டுறவு வங்கியையும் 1936 ஆம் ஆண்டு மூளாயில் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கத்தையும் உருவாக்கி மக்களிடையே கூட்டுறவுச் செயற்பாடுகளை விரிவுபடுத்தினார்.

* பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சமாசங்களும் முயற்சிகள் ஆரம்பமான போது அதனை வடபகுதியில் விரிவுபடுத்தி உயர்வடையச் செய்வதற்கு பெரியார் பெரிதும் பாடுபட்டு உழைத்தார்.

* கூட்டுறவின் சிந்தனைகளையும் கொள்கைகளையும் அதன் செயற்பாடுகளையும் மக்கள் மத்தியில் பரவச் செய்து மக்களின் வருமானத்தையும் நாட்டின் வளர்ச்சியையும் உயர்த்தியதால் கூட்டுறவின் தந்தை என அழைக்கப்பட்ட பெரியார் வி.வீரசிங்கம் 1964 ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார்.

**தொகுப்பு - அஸ்வின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை உரைக்கும் சத்தியக்கடதாசி

# சட்டமும் சமூகமும் 10





வழக்கறிஞர்
பொன். பூலோகசிங்கம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எப்படி முடிக்கலாம்?

யாரிடம் முடிக்கலாம்?

ஒரு சத்தியக்கடதாசியை முடிக்கும் அதிகாரம் ஒரு சமாதான நீதிவான் (J.P) ஒரு சத்திய ஆணையாளர் (Commissioner For Oaths) சமாதான நீதவானும் உத்தியோக பற்றற்ற நீதிபதியும் (J.P.U.M) ஒரு சட்டத்தரணி (Attorney-At-Law) ஆகியோருக்கு இருக்கின்றது.

ஒரு சத்தியக் கடதாசியின் முகப்பு வாசகம் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

'யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் வீதியைச் சேர்ந்த சின்னப்பு கந்தசாமி, வயது 50, இந்து சமயம், இலங்கைத் தமிழர் தொழில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆகிய யான் உண்மையாகவும் நேர்மையாகவும் பயபக்தியோடும் உறுதிப்படுத்தி வெளிப்படுத்திக் கொள்வதாவது, இதைத் தொடர்ந்து பந்தி பந்தியாக இலக்கமிட்டு ஒவ்வொரு பந்தியிலும் ஒவ்வொரு விடயப் பொருள் எழுதப்பட வேண்டும். முதல் வாக்கியம் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

1. இந்தச் சத்தியக் கடதாசியை முடிப்பவன் நானே யாவேன்.

மேலும் இந்த சத்தியக் கடதாசியை அத்தாட்சிப் படுத்துபவர் அத்தாட்சிப்படுத்தப்படும் பந்தியை (JURAT) என அழைப்பர். இந்தப் பந்தியின் வாசகம் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள
சத்தியக் கூற்றில்
உள்ளவற்றை வாசித்து
இந்த சத்தியக் கூற்றை
முடிப்பவருக்கு
விளங்கியப்படுத்தியபோது
அதனைசரியென அவர்
ஏற்றுக் கொண்டு
என் முன்பாக
உறுதிப்படுத்தி
2010ஆம் ஆண்டு மார்கழி
மாதம் 31 ஆம் திகதி
யாழ்ப்பாணத்திலிருந்து
தனது கையொப்பத்தை இட்டார் என உறுதிப்படுத்துகிறேன்.

..............................

சமாதான நீதிவான்/ சத்திய ஆணையாளர்

மேலே கூறப்பட்டுள்ள என் முன்பாக என்ற வாக்கியத்தின் மேல் 25 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். அவ்வாறு ஒட்டப்பட்ட முத்திரையின் மேல் சத்தியக் கடதாசி முடிப்பவர் கையொப்பம் இடவேண்டும். இதன் பின்னர் சத்தியக் கடதாசியை உறுதிப்படுத்தும் சமாதான நீதிவானோ அல்லது சத்திய ஆணையாளரோ தமது கையொப்பத்தை இட வேண்டும். அவ்வாறு கையொப்பம் இட்ட பின்னர் தனது உத்தியோகபூர்வமான (FRANK) இலட்சினையை இடுதல் வேண்டும்.

அத்தாட்சிப்படுத்துகின்ற பந்தியை (JURAT) என்பர். இதில் முக்கியமாக சத்தியக் கடதாசி நிறைவேற்றப்பட்ட திகதி, மாதம், ஆண்டு என்பவற்றுடன் அது நிறைவேற்றப்பட்ட இடம் என்பன கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

இந்த (JURAT) பகுதியில் ஏதாவது தவறுகள் அல்லது சட்டப் பிழைகள் காணப்படுமாயின் அந்த சத்தியக்கடதாசி முழுவதுமே செல்லுபடியற்றதாகிவிடும்.

இதே வேளையில் கண்பார்வையற்ற அல்லது வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளிகள் ஒரு சத்தியக் கடதாசியை நிறைவேற்றுவதாயின் எத்தகைய நடமுறையைக் கையாள வேண்டும் என குடியியல் நடபடிமுறைக் கோவையின்(CIVIL PROCE CODE) பிரிவு (SECTION) 439 பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

'சத்தியக் கடதாசியை முடிப்பவர் பார்வையற்றவராகவோ அல்லது படிப்பற்றவராகவோ நீதிமன்ற மொழியில் பரிச்சியம் அற்றவராகவோ இருப்பின் சத்தியக்கடதாசியை முடிப்பவருக்கு அந்த சத்தியக் கடதாசியில் உள்ளவற்றை அவருக்குப் புரிந்த மொழியில் வாசித்துக் காட்டப்படல் வேண்டும். அதனை JURAT லும் சுட்டிக் காட்டல் வேண்டும். அதனை அவர் புரிந்து கொண்ட பின்னர் தனது கையொப்பத்தை இட்டார் என சத்தியக் கடதாசியை நிறைவேற்றி அத்தாட்சிப் படுத்துபவர் அதில் குறிப்பிடல் வேண்டும்'. எனவும் மேற்படி பந்தி வலியுறுத்திக் கூறுகின்றது.

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# இன்டெக்ஸ் தரும் புரஜக்டர் போன்



**மொ**பைல் வர்த்தகம் அல்லது போன் வடிவமைப்பில் ஏதேனும் புதுமைகளைப் புகுத்தி வரும் இன்டெக்ஸ் நிறுவனம் அண்மையில், மொபைல் போனே படம் காட்டும் புரஜக்டராகவும் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட மொபைல் போன் ஒன்றை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. வழக்கம் போல இரண்டு சிம் கார்டு கொண்ட இந்த போனில் ஒரு முறை சார்ஜ் செய்தால் மூன்று மணி நேரம் புரஜக்டராக இதனைப் பயன்படுத்தலாம் இந்த போன் V Show IN8810 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

முழுமையான டச் ஸ்கிரீன் இதில் தரப்படுகிறது. இந்த போன் மூலமாகக் காட்டப்படும் புரஜக்டர் காட்சிகள் மூன்று அடி அகலத்திரை கொள்ளும் அளவிற்கு இருக்கும் மூன்று மணி நேரம் தொடர்ந்து பார்க்கலாம் என்பதால், ஒரு முறை சார்ஜ் செய்த ஒரு திரைப்படத்தினையே பார்க்கலாம். இதில் உள்ள புரஜக்டர் விளக்கு எல்.ஈ.டி தொழில்நுட்ப அடிப்படையில் அமைந்துள்ளது.

20,000 மணி நேரம் வரை இதன் திறன் குறையாது. பின்னர் சற்று மங்கத் தொடங்கும்.

இந்த போனில் இரண்டு ஜீ.எஸ்.எம் சிம்களைப் பயன்படுத்தலாம். டச் ஸ்கிரீன் திரை 3.2 அங்குல அகலம் கொண்டது. பதிவு செய்யக் கூடிய வீடியோ பிளேயர் தரப்பட்டுள்ளது. டிசம்பர் 1 முதல் ரூ. 12,000 அதிக பட்ச விலையிட்டு இது சந்தைக்கு வருகிறது.

சாம்சங் நிறுவனம் இதே போன்ற புரஜக்டர் போன் ஒன்றை முன்பு Beam GT-i8520 என்ற பெயரில் வெளியிட்டது. இதன் உள் நினைவகம் 64 எம்.பி. மெமரி கார்ட் மூலம் 16 ஜீபி வரை இதனை அதிகப்படுத்தலாம். விநாடிக்கு 25 பிரேம்கள் கொண்ட வீடியோவினைப் பதிவு செய்திடும் கமரா தரப்பட்டுள்ளது. புரஜக்டர் வசதியுடன் ரூ. 30,000 விலையில் மொபைல் கமரா போன் கிடைப்பது வசதியாகத்தான் தெரிகிறது.

## கேள்வி பதில்

செல்வி அருணாசலம் கலைமகள்
அரசடி வீதி
பருத்தித்துறை.

**கேள்வி :** மனித உரிமைகள் என்றால் என்ன?

**பதில் :** மனித உரிமைகள் என்பது ஒரு மனிதனுடைய பிறப்புரிமை. ஒரு மனிதன் தாயின் கருவறையில் (WOMB) கருத்தரித்த கணப்பொழுது முதல் அவன் கல்லறைக்குச் செல்லும் வரை அவனது (TOMB) வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் ஜீவாதார உரிமைகளே மனித உரிமை ஆகும்.

**கேள்வி :** மனித உரிமைகளை நாம் மூன்று பிரிவுகளாக நோக்குகின்றோம். அவை எவை?

**பதில் :** மனித உரிமைகள் என்ற சொல் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட பரந்த விரிந்த ஒரு விடயமாகும். அகத்தியர் காவிரியை கமண்டலத்திற்குள் அடக்கியது போல அதனை மூன்று வகைக்குள் அடக்க முடியாது. அவ்வாறு யாரும் நோக்குவது யன்னல் பார்வை போன்றது. இன்னும் சொல்வதானால் அண்ட வெளியில் பறக்கும் வானம்பாடியை தண்ட வாளத்தில் நடக்கச் சொல்ல முடியுமா?

**கேள்வி :** பண்பாட்டு உரிமைகள் இன்றைய எமது குடா நாட்டு மக்களிடையே எவ்வாறு பேணப்பட்டு வருகின்றன?

**பதில் :** நேற்றைய குடாநாட்டு மக்கள் மலேசியா, சிங்கப்பூர்,பர்மா, சீயம் (தாய்லாந்து) என்று திரைகடல் ஓடித்திரவியம் தேடினார்கள். ஆனால் அவர்கள் ஒரு போதும் தமிழர் பண்பாட்டை இழக்கவில்லை. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமேனியார் என்பவர் பர்மாவில் (இன்றைய மியன்மார்) தமிழ்க்குமரன் முருகனுக்கு கோவில் கட்டினார். இன்றைய குடா நாட்டு மக்கள் மேற்குலகை நோக்கிப் படையெடுக்கிறார்கள். திரைகடல் ஓடி அங்கு சென்று தேவியைக் தேடிச் கொண்டு சீரழிகிறார்கள். அங்கு சில தமிழர்கள் தற்கொலையும் செய்துள்ளார்கள். ஆகாய மார்க்கமாக வரும் இந்த ஆபத்தும் கலாசார சீரழிவுக்கு காரணமாகும்.

குடாநாட்டில் வாழும் மக்களோ சின்னத்திரைக்கு முன்னால் அமர்ந்து 'தமிழ்த் தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முறையாக திரைக்கு வந்து சில மாதங்களேயான புத்தம் புதிய சுப்பர் கிற்' திரைப்படங்களைக் குடும்பத்தோடு அமர்ந்து பார்த்து சிறுவர் சிறுமியரை சீரழிக்கிறார்கள்.

இன்றைய கலாசார (பண்பாட்டு) சீரழிவுகளைப் பார்த்தால் நாளை குடா நாட்டு மக்கள் திரைமறைவில் மறைந்தே போய்விடுவார்களோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி 09

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | | | 06 |
| 07 | | 08 | 09 | | 10 | 11 | 12 |
| 13 | 14 | | 15 | 16 | 17 | 18 | |
| 19 | 20 | 21 | | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | 29 | | | 30 |
| | 31 | 32 | 33 | | 34 | 35 | 36 |
| 37 | | | 38 | 39 | 40 | | 41 |
| 42 | 43 | 44 | 45 | 46 | | 47 | 48 |

**இடமிருந்து வலம்**

01. உயர் பதவி வகிப்பவர்களுக்கு வழங்கப்படுவது
08. மீன் முட்டையின் கூடு
10. இது நடந்தால் பொலிஸில் முறைப்பாடு செய்
13. இந்தியாவின் சமுத்திரத் திட்டம்
15. கணித வடிவம்
19. வீட்டுக் கட்டுமானப் பொருள்
22. இரசாயனங்களில் ஒன்று (குளம்பியுள்ளது)
26. இது அமிழ்ந்தால் மழை வராது (குழம்பியுள்ளது)
31. வீட்டைச் சுத்தி அமைப்பது (திரும்பியுள்ளது)
34. இது கொடியது என்றார் பாரதியார் (இறுதி எழுத்து இல்லை)
38. ஒரு பிரபல நடிகர்
42. நட்சத்திரங்களில் ஒன்று
47. யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் இதுவும் ஒன்று

**மேலிருந்து கீழ்**

01. இறைவன் நீராடுவதை கூறுவது
03. இந்தியாவிலுள்ள இந்துக்களின் புனித பூமி
04. எந்த நிகழ்வையும் இதோடு பார் (குழம்பியுள்ளது)
06. தூக்கு
10. காட்டு மிருகம்
11. பொத்தியாக உருவாகும் தானியம்
14. நாயின் அறிகுறி
16. இழப்பீட்டுக்கான மனித உணர்வு
21. ஒன்றைப் போல இன்னொன்று
25. சளரும் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
33. முஸ்லிம்களின் வழிபாட்டு ஸ்தலம்
34. ஒரு வகை அவரை
37. மனிதன் இதை ஒதுக்கிப்பார்க்க கூடாது

குறுக்கெழுத்து போட்டி 07க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பூ | வ | ர | சு | | பா | ர | ம் |
| பா | கை | | வ | ச | ன | ம் | |
| ள | | க | ர் | வ | ம் | | ட் |
| ம் | த | ம | | ம் | | சு | ப |
| | க | வ | லை | | கு | ண் | டு |
| ஆ | ர | ம் | ப | ம் | | ணா | |
| த | ம் | | வ | த | ன | ம் | |
| ரி | | அ | ம் | மா | | பு | வி |

### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. வி.ரவிராஜ்
சாவகச்சேரி
2. திருமதி சாள்ஸ் ரொபின்சன்
சுன்னாகம்
3. ரி.என்.மதியழகன்
யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப் போட்டி 09 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்

# பூதத்தம்பி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

09

விம்மிப்பூரித்த அவள் மார்பகங்கள் கல சங்களாகக் காண்போர் சிந்தையைக் கவ்வின. இடைக்குக் கீழ் தாழத்தொங்கும் கூந்தலின் கருமையும் அடர்த்தியும் நெளிவும் கார்மேகத்தின் திரட்சியை நினைவு படுத்தின. நாடகத்தில் பூதத்தம்பி தன் மனைவியின் அழகை வர்ணிப்பான் இருண்டமேகமே வந்து மருண்டு கிடக்கின்றதோ எழில் மிகும் இவள் கொண்டை. இளநீர் போலத் திரண்ட கொங்கைப் பாரத்தால் மருங்கும் ஒடியுமென்று தெரிந்து புலம்பும் தண்டை. ஆலைக்கரும்போடு பாலைப் பழிக்கச் சொல்லும் அதரம் பவளத் துண்டோ?. இவளிரண்டு காலைக் கும்பிட்டேனம் லீலைக்கிழுக்கச் செய்யும் காமனின் கை.

விருந்தாக பூதத்தம்பி இல்லத்திற்கு வந்த அந்திராசி வினையாகினான். 'உங்கள் மனைவியையும் அழைத்து வந்திருக்கலாமே? என்று பூதத்தம்பி வரவேற்ற போது, அவள் வரமாட்டாள் நண்பனே. நீங்கள் சாதி ஆசாரம் பார்ப்பது போல அவள் தகுதி ஆசாரம் பார்ப்பவள்' என்கிறான் அந்திராசி. ஏனைய விருந்தினர்களுடன் அந்திராசியை அமர்த்தி விருந்துபசாரம் செய்யவில்லை. தனி அறையில் இருத்தி அவனுக்கு உபசாரம் நடந்தது.

'இவள்தான் என் மனைவி' என பூதத்தம்பி அழகவல்லியை அறிமுகப்படுத்துகிறான். அவளைப் பார்த்த அந்திராசி அப்படியே இமைக்க மறந்து விட்டான். அப்படியொரு அழகியை அவன் எங்கும் கண்டதில்லை. அந்த அலங்கார மண்டபத்தின் சிலைகளில் ஒன்றாக அவள் நின்றிருந்தாள். தேவலோகத்தின் அழகு இவளோ என வியந்து நின்றான். ஆண்டவனுக்கு கண்ணே இல்லை. இப்படி ஒரு மகத்தான அழகியை பூதத்தம்பியுடன் இணைத்திருக்கும் கடவுளுக்கு இரசனையே கிடையாது. அன்றலந்த ரோஜா மலரென இருக்கும் அழகவல்லி எங்கே உழக்கிய உடல் கொண்ட நிறங்கொண்ட பூதத்தம்பி எங்கே?

அவளைக் கண்களால் விருந்துண்ட அந்திராசி அடங்காமோகத்துடன் தன் இல்லம் வருகிறான். பரிசுப் பொருட்களுடன் தூது அனுப்பி மீன் பரிசாக விளக்கு மாற்றையும் செருப்பையும் பெறுவதால் அடங்காக் கோபம் கொண்டு சதி வலையில் பூதத்தம்பியைச் சிக்க வைத்து கொல்விக்கிறான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் பலநாட்கள் கழியு முன்பே அவர்களை இங்கிருந்து வேறுத்துக் துரத்தும் எண்ணம் யாழ்பாணத்தாரிடம் இருந்ததென யாழ்ப்பாணச் சரித்திரத்தின் ஆசிரியர் செ.இராசநாயகம் குறிப்பிடுகிறார். அந்த அந்தரங்கச் சூழ்ச்சியை மனுவல் அந்திராடோ முதலி எனும் சிங்கள முதலி கண்டு வெளிப்படுத்தினான். இச்சூழ்ச்சிக்கு டொன் லூயிஸ் பூதத்தம்பி முதலி தலைமை வகித்துள்ளான். அவனோடு அரச விரோதிகளல்லேம் எனச் சத்தியம் செய்து கொடுத்த பறங்கிகள் ஐவரும், மன்னார்த் தலைவன் ஒருவனும், கல்தேறா எனம் கத்தோலிக்க குருவும் அடங்கினார். அவர்கள் பெற்ற தண்டனைகள் பார்த்தோர் நடு நடுங்கும் படியானதாகும்.

இச்சதியாலோசபயில் பூதத்தம்பியின் பெயரைக் கபடமாக மனுசல் அந்திராசி, நுழைத்து அநியாயகமாகப் பூதத்தம்பியைக் கொலை செய்வித்தான் என இராசாநாயகம் கருதுகிறார். பறங்கிகள் செய்த சதி ஆலோசனை வெளிவந்த போது பிரவேசியாதிருந்தாலும் தருணம் பார்த்திருந்த அந்திராசி பூதத்தம்பியை இதனுள் சிக்கவைத்தான் என இராசாநாயகம் கருதுகிறார். ஒல்லாந்தரை வேரறத் தொலைக்க வேண்டுமென்ற ஓர் அந்தரங்கச் சூழ்ச்சி யாழ்ப்பாணத்தாரிடம் இருப்பதாக சிங்கள முதலி அந்திராடோ வெளிப்படுத்தினான். அந்த யாழ்ப்பாணத்தார் யார்? பால் தேயஸின் குறிப்புக்கள்(1658), பிலிப் கன்ஜமானாடனின் குறிப்புக்கள் (1855), இலங்கை நிர்வாக அறிக்கை 1849 என்பனவற்றிலுள்ள வரலாற்று ஆதாரங்களிலிருந்து பூதத்தம்பியே அவ்வாறான சூழ்ச்சிக்கு அல்லது புரட்சிக்குத் தலைமை வகித்தான் என்பதை அறிய முடிகின்றது.

**கலாநிதி க.குணராசா**

இந்த மூன்று வரலாற்றுக் குறிப்புக்களும் ஐரோப்பிய ஆசிரியர்களுடையவை. அவர்கள் எந்தவோரிடத்திலும் டொன்லூயிஸ் பூதத்தம்பியை முதலியார் என்று குறிப்பிடவில்லை. அதனால் உண்மையில் பூதத்தம்பி ஒரு முதலியாரா? ஐயத்தினை மார்ட்டின் எழுப்பியுள்ளார். தமக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டியதாலும் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாலும், அவனைத் துரோகி என்றே ஐரோப்பிய ஆசிரியர்கள் குறித்துள்ளனர். அதனால் அவன் வகித்த பதவிப் பெயரை இயல்பாகவே நீக்கிவிட்டனர் எனத் துணியலாம்.

எவ்வாறாயினும் பூதத்தம்பி அந்நியருக்கு எதிராகக் கிளர்ந்து எழ முயன்றவன். அவன் புரட்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்டது. ஆனாலும் அவன் என்றும் நினைவு கூரப்படுவான். *(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

தென்னிந்திய சினிமாப் படங்களின் புதிய வரவுகள் தற்போது அதிகரித்துள்ள தன் பின்னணியில் யாழ்.குடாநாட்டிலும் அதன் தாக்கம் அதிகரித்திருப்பதை திரையரங்குகளில் அலைமோதுகின்ற ரசிகர் பட்டாளத்தை வைத்தே கணிப்பிட்டுக் கொள்ளலாம். அன்றைய விடுமுறை நாட் பொழுதைக் கழிப்பதற்காக எனது நண்பன் ஒருவனின் வற்புறுத்தலுக்கு உடன்பட்டு யாழ்ப்பணத்திலுள்ள திரையரங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தேன்.

மோட்டார் சைக்கிள் பாதுப்புக் கட்டணம் 10 ரூபா என சிட்டையில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் அங்கு 20 ரூபா வகுலிப்பு நடந்தது. எதிர்த்துக்கேட்டோம். சீறிவிழுந்தார் பாதுகாப்பு ஊழியர். அதேபோல சைக்கிள் பாதுகாப்புக் கட்டணமும் இரட்டிப்புத் தொகை. பாதுகாப்பு ஊழியருடன் தர்க்கம் புரிந்து பயனில்லை எனக் கருதி பணத்தைக் கொடுத்துவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்து படம் பார்ப்பதற்கு உள்நுழைவதற்கான அனுமதிச் சீட்டை பெறுவதற்கான இடத்திற்குச் சென்றோம். ரசிகர்கள் கூட்டத்திற்கு ஒருவாறு ஈடுகொடுத்து முண்டியடித்து அனுமதிச் சீட்டில் 'பல்கனிக்' கென 160 ரூபா கட்டணம் போடப்பட்டிருந்தது.

ஆனால் 250 ரூபா என மையினால் எழுதப்பட்டிருந்தது. தட்டிக் கேட்டவர்கள் ரிக்கெட் விற்பனை செய்பவரின் வசை மொழிக்கு ஆளானார்கள். எந்த ஒரு விடயத்திற்கும் தலையாட்டுபவர்களாக, ஆமாம் போடுபவர்களாகவே எமது சமூகம் வாழப்பழகி விட்ட நிலையில் வேறுவழியின்றி காசைக் கொடுத்துவிட்டு ரிக்கெட்டை வாங்கிக் கொண்டு இருக்கைகளில் அமர்ந்திருந்தோம்.

படக்காட்சி ஆரம்பிக்க 15 நிமிடங்கள் வரை இருந்தது. பெருமெண்ணிக்கையான ரசிகர்கள் வந்து குவிந்தபடி இருந்தனர். அவர்களில் அதிகமானோர் மாணவர்களாகவே இருந்தனர். அதற்கு அவர்கள் தம்முடன் கொண்டு வந்த கொப்பி புத்தகங்கள் சாட்சி பகருகின்றன. இருப்பினும் அவர்கள் தம்முடன் புத்தகங்களை மட்டும் கொண்டு வரவில்லை. கூடவே தமது காதலிகளையுமல்லவா அழைத்துவந்திருந்தனர். கவர்ச்சி உடைகளில் பெண்களின் பிரசன்னம் அதிகரித்திருந்தது. அப்பெண் பிள்ளைகளும் கல்விகற்கும் பதின்ம வயது மாணவியர்கள். அவர்களது கைகளிலும் கொப்பிகள் தவழ்ந்தன.

யாழ்.நகரப்பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதாக பெற்றோருக்கு பம்மாத்துக் காட்டிவிட்டு சோடி சோடியாக நுழைந்து திரையரங்குகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். தனியாார் கல்வி நிலையங்களென சினிமாத் திரையரங்குகளைய நினைத்து விட்டார்களோ எனும் அளவிற்கு மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தன. திரைப்படம் ஆரம்பித்தவுடன் இளைஞர்கள் புரிந்த அட்டகாசம் எல்லை மீறியது. அந்தளவிற்கு உச்ச தொனியில மைந்த கெட்டவார்த்தைப் பிரயோகங்கள் விசிலடிகள், கூச்சல்கள், கூப்பாடுகள் என பார்வையாளர் அரங்கமே அதிர்ந்தபடி இருந்தது. அந்தளவிற்கு அவர்களின் அட்டகாசம் துள்கிளப்பியது.

இதனால் நிம்மதியாக படம் பார்ப்பவர்களுக்கும் கூட பலர் சிரமப்பட்டனர். குடும்பத்துடன் வந்திருந்தவர்கள் பெரிதும் சங்கடப்பட்டதைக் காணமுடிந்தது. முன்னர் பெண்கள் திரையரங்குகளுக்குள் சென்று படம் பார்ப்பது என்பது மிகமிக அரிதாகவே காணப்பட்டது. ஆனால், தற்போது ஆண் நண்பன் எனும் போர்வையில் முன்பின் தெரியாத ஆணுடன் எவ்வித வெட்கமோ கூச்சமோ இன்றி பலர் கூடும் இடத்தில் வந்தமர்ந்து படம் பார்த்தல் என்ற போர்வையில் தமது காதல் களியாட்டங்களுக்கு திரையரங்குகளைப் பயன்படுத்தி வருவது சமூக ஆர்வலர்கள் மத்தியில் வேதனையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவற்றைத் தடுப்பதற்குக் கூட திரையரங்கு நிர்வாகம் பின்னடிப்பது ஏனோ தெரியவில்லை.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் கலாசார விழுமியங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தி மாணவர் ஒன்றியத்தால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டமை அநேகருக்கு நினைவிருக்கும்.

இவர்களது இத் தீர்மானம் வெற்றுத்தாள் அறிக்கையுடன் முடிந்து விட்டதாகவே தோன்றுகிறது. ஏனெனில், எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அவர்கள் இதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை.

பண்பாட்டு விழுமியங்களைப் பேணுமாறு வலியுறுத்துவோர் தாம் அத்தகைய பண்பாட்டு விழுமியங்களைச் சரியாக கடைப்பிடிக்கின்றனரா? என்பதை முதலில் அவர்கள் சுயசிந்தனை செய்வது நல்லது. ஏனெனில் தாம் சீரழிவுப்பாதையில் பயணித்துக்கொண்டு சமூகத்திற்கு புத்திமதி சொல்ல முனைந்தால் அப்புத்திமதிகளை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கருதுவது முட்டாள்தனமானது.





**மாணவர்கள் தமது வயதுக்கு ஏற்ப இப்படியான அநாகரிகச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றால் ஒரு சில விரிவுரையாளர்களும் நெறி பிறழ்ந்து நடப்பது வேதனையளிக்கிறது. தமது அறிவுப் பசியைத் தீர்க்கவரும் மாணவிகளிடம் தமது காமப்பசிகளைத் தீர்க்கும் சம்பவங்களும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.**

திரையரங்குகளில் கலாசாரச் சீர்கேடான சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் மேற்படி திரையரங்குகளுக்குள் பெரும்பாலும் உயர்கல்வி கற்றும் மாணவ மாணவியரே சோடியாக வந்து படம்பார்க்கும் நிகழ்வுகள் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

தற்போது சாதாரணமாக இடம்பெறும் சில ஒன்றுகூடல் நிகழ்வுகளில் மது சிகரெட் என்பன மாணவர்களால் தாராளமாகப் பயன்படுத்தப்படும். பயன்படுத்துவதுடன் விட்டால் பரவாயில்லை. எல்லா மாணவர்களும் குழுமியிருக்கும் குறிப்பாக பெண்கள் கூடியிருக்கும் நிகழ்வுகளில் பல மாணவர்களால் நடத்துகின்ற களியாட்டங்கள் அங்கு நடைபெறும் கலாச்சார சீரழிவை மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

சரி, மாணவர்கள் தமது வயதுக்கு ஏற்ப இப்படியான அநாகரிகச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றால் ஒரு சில விரிவுரையாளர்களும் நெறி பிழந்து நடப்பது வேதனையளிக்கிறது. தமது அறிவுப் பசியைத் தீர்க்க வரும் மாணவிகளிடம் தமது காமப் பசிகளைத் தீர்க்கும் சம்பவங்களும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இங்கு நாம் ஒட்டு மொத்த விரிவுரையாளர்களையும் குற்றம் காண விழைவது அபத்தமானது.

ஆனால் ஒரு சிலரின் தவறான நடவடிக்கைகள் ஒட்டுமொத்த விரிவுரையாளர் சமூகத்தினர் மீது பழிச்சொற்கள் விழுந்து விடக்கூடாது என்பது பற்றி நாம் தெளிவுடன் இருக்க வேண்டும். யாழ். பல்கலைக் கழகமானது எத்தனையோ ஒழுக்கம் மிக்க அறிஞர்களையும் கல்வியியலாளர்களையும் உற்பவித்த உயர் கலைக் கூடத்தில் இப்படியான அசிங்கங்கள் அரங்கேறுவதை ஒருபோதும் ஏற்க முடியாது. எமது சமூகத்திற்கு வழி காட்டிகளா இருக்க வேண்டியவர்கள் எமது இனத்தின் பண்பாட்டு வேர்களை அறுக்கும் கோடரிக்காம்புகளாக இருப்பது வேதனைக்குரியது.

எனவே தான் மாணவர் சமூகம் எடுத்திருக்கும் இத்தகைய முயற்சியை வரவேற்கின்றோம் ஆனால் அதனைச் செயலுருப் பெற வைக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அவசியம்.

*நிற்க, தடம் மாறும் யாழ்ப்பாண கலாசாரம் என்ற பகுதி எமது சமூக கலாசாரப் பிறழ்வான விட யங்களை அப்படியே வெளிச்சமாக்கிக் காட்டு பகுதியாகும். மேற்கொண்டு இவ்வாறான சம்பவங்களை இனிமேலும் இடம்பெறாமற் தடுப்பதற்கே தவிர யாருடைய மனங்களையும் புண்படுத்துவதற்காகவோ வேதனைப்படுத்துவதற்காகவோ அல்ல என்பதை வாசகர்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இப்பத்தி பற்றி பல வாசகர்கள், யாழ்ப்பாண மண்ணின் உயர்ந்த கலாசாரத்தை கீழ்த்தரமான முறையில் விமர்சிப்பதாக அபிப்பிராயப்படுகிறார்கள்.*

*இப்பத்தியில் வரும் சம்பவங்கள் அனைத்தும் நிஜங்களே தவிர நிழல்கள் அல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். எது எப்படியோ, இப்பத்தியை இனிவரும் காலங்களிலும் யாழ். ஓசை மீது பதியவிடுவதா அல்லது இப் பகுதிக்கு நிரந்தரமாக விடை கொடுப்பதா என்பது பற்றி உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இப்பத்தியை நிறுத்துவதா? இல்லையா? என்பது பற்றி எதிர்காலத்தில் முடிவு செய்யப்படும்.*

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவனைக்குதவாத 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் மீட்பு

புளியந்தீவு,

மட்டக்களப்பு நகரின் புளியந்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு நகர சபையின் பொதுச் சுகாதார பிரிவினர் மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது பாவனைக்குதவாத 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 10 மணியளவில் மட்டக்களப்பு நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் என். தேவநேசன் தலைமையில் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.குபேரன் மற்றும் மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே இப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்கள் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் நான்கு கடை உரிமையாளர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டது.

இதன் போது குறித்த நான்கு கடை உரிமையாளர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக மூவருக்கு தலா 6000 ரூபாவும் ஒருவருக்கு 7000 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டதுடன் கடும் எச்சரிக்கை செய்துவிடுவிக்கப்பட்டனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

திருக்கோவில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக தொடர்ந்து பெய்துவரும் அடைமழையினால்ர 3 1/2 இலட்சம் மக்களுக்குமேல் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் மற்றும் அவசரத்தேவைகள், நஷ்டஈடுகள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மழை வெள்ளத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள வாகரை, வாழைச்சேனை, களுவங்கேணி, சித்தாண்டி, ஐயங்கேணி, பாலைச்சோலை, வந்தாறு மூலை, கல்குடா, ஏறாவூர், புலிபாய்ந்தகல், குடும்பிமலை ,தராவ, வவுணதீவு ,கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு, வெல்லாவெளி போன்ற பிரதேசங்கள் வெள்ளத்தினால் முற்றாக மூழ்கியுள்ளதுடன் இடம்பெயர்ந்து உறவினர் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளதுடன் விவசாய நடவடிக்கைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு மட்டும் வழங்காது நஷ்டஈடு மற்றும் ஏனைய அவசர தேவைகளையும் உடன் வழங்க வேண்டுமெனவும் இம் மக்களின் விவசாயம் மற்றும் ஜீவனோபாய தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே இவர்களின் அவசர தேவைகளை பூர்த்தி செய்து நிவாரணங்களை வழங்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் நேரடியாக நேற்றுமுன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

# பன்றிக் காய்ச்சல் தடுப்புக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அம்பாறையில் தீவிரம்

மாவடிப்பள்ளி,

நாட்டிலே பீதியை ஏற்படுத்தி வரும் ஏ(எச்1 என்1) எனப்படும் பன்றிக் காய்ச்சல் ஏற்படாமல் தடுப்பதற்கான தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் அம்பாறை மாவட்டத்தில் பாரியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயத்திற்குட்பட்ட 21 சுகாதார வைத்திய அலுவலகங்களின் ஊடாக இத்தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. அலுவலகப் பணியாளர்கள் முதல் வீட்டிலுள்ளவர்கள் வரை சுகாதார வைத்திய அலுவலகங்களுக்கு வருகை தந்து தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில் தீவிரமாகவுள்ளனர்.

இதேபோன்று கர்ப்பிணித் தாய்மார்கள், சுவாச நோயுள்ளவர்கள், நீரிழிவு நோயாளர்கள் மற்றும் இருதய நோயாளர்களுக்கும் இத்தடுப்பூசி மருந்து ஏற்றப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழைக்கு மத்தியிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தடுப்பூசி ஏற்றியதைக் காண முடிந்தது.

இதுவரையும் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி 22 பேர் மரணமடைந்துள்ளதாகவும் 400 பேர் இந்த நோய்த் தொற்றுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ள அகதிகள் மாணவர்க்கு மாகாண சபை உறுப்பினர் செல்வராசா பொருட்கள் அன்பளிப்பு

காரைதீவு,

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு மற்றும் பொத்துவில் குண்டுமடு ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிழக்கு மாகாண உறுப்பினர் சீனித்தம்பி செல்வராசா பலவித உதவிகளை வழங்கினார்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வெ.ஜெகதீஸன், கிராம சேவையாளர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முன்னிலையில் ஆலையடிவேம்பு வெள்ள அகதி மாணவர்க்கு அப்பியாசக் கொப்பிகள், பென்கள் உறுப்பினர் செல்வராசா வழங்கி வைத்தார். பெரியகுளம், வாச்சிக்குடா கோளாவில் பிரதேச வெள்ளப் பாதிப்பு மாணவர்கள் 300 பேருக்கு இவ்வுதவிகளை திங்களன்று வழங்கி வைத்தார்.



தரிசனம் விழிப்புலனற்ற மாணவ மாணவிகள் கல்வி கற்பதற்கு செல்லும் கல்லூரி வீதி செப்பனிடப்படாமல் மிக மோசமாக பாழடைந்துள்ளது. தற்போது பெய்துவரும் கடும் மழையால் இவர்களின் நிலைமை பரிதாபகரமாக உள்ளது. எனவே உரிய அதிகாரி[illegible]தில் எடுத்து வீதியை செப்பனிடவேண்டும்.

மேலும் 100 வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இவ்வுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அன்றாடம் தொழில் செய்து பிழைக்கும் அன்றாடக் காய்ச்சிகளின் நிலை பரிதாபகரமாகி உள்ளதெனக் கூறப்படுகிறது. பொத்துவில் குண்டுமடுப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மிகவும் வறிய 12 குடும்பங்களுக்கு அரிசி, சீனி போன்ற பொருட்களை வழங்கியதோடு விறகு, லாம்பெண்ணெய், பாய் போன்ற அவசிய பொருட்கள் வாங்க 12 ஆயிரம் ரூபாவையும் உறுப்பினர் செல்வராசா வழங்கினார்.

இதேவேளை, அக்கரைப்பற்று - 13 ஆம் குறிச்சி முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர் செல்வராசாவை சந்தித்து வெள்ள நிவாரணம் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

நாவிதன்வெளிப் பகுதிக்கும் நேற்று விஜயம் செய்த உறுப்பினர் செல்வராசா அங்குள்ள வெள்ள நிலைமை மோசமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

## கிழக்கில் 79 அழகியற்கலை ஆசிரியர்கள் நியமனம்

காரைதீவு,

கிழக்கு மாகாணத்தில் திங்களன்று 79 அழகியற் கலை ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற அழகியல் கலைப் பாடங்களில் டிப்ளோமா மற்றும் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்களுக்கே இப்புதிய ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 69 தமிழ் மொழி மூலம், 10 சிங்கள மொழி மூலமும் ஆசிரியர்கள் அடங்குகின்றனர். கிழக்கு மாகாண கல்வியமைச்சின் புதிய செயலாளர் என். புஸ்பகுமார திங்களன்று பதவியேற்ற கையோடு இப்புதிய ஆசிரியர்களுக்கான நியமனங்களையும் வழங்கி வைத்தார்.

இவர்கள் அனைவரும் கிழக்கு மாகாண பாடசாலைகளில் தமது பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். கிழக்கில் இனிமேல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாட ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்களென முன்னாள் செயலாளர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி இடமாற்றம்

வாழைச்சேனை,


வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய எஸ். கொடிசிங்க கொழும்பு பொலிஸ் தலைமையகத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். இதேவேளை கொழும்பு சப்புகஸ்கந்த பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய ஜெயவீர புதிதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு செவ்வாய்க்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குட்பட்டவர்களில் காணப்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றைக் குறைப்பதற்கான இடையறுப்பு அணுகுமுறைகளும் பற்றிய பார்வை.

VII

ஆக்கம்
ஸ்ரீ.நதிபரன் B.A. (Hons)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

b. நிகழ்கால வாழ்வியல் சூழலுடன் ஒத்துப் போவதற்குரிய இலக்குகளை முன்னிறுத்துதல் (Focus on goal setting based on the torture victims current situation).

c. பாதிப்புற்றவரின் சுய ஆற்றல்களை வெளிக்கொணர்தல் (Re- establishing self efficacy).

போன்ற உளவியல்சார் அணுகுமுறைகள் மூலம் பாதிப்படைந்தவரை கையாளலாம். கையாளுகையில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கவேண்டி வரும். அவற்றை வெற்றிகரமான முறையில் எதிர்கொள்ள வேண்டும். அப்படி எதிர்கொண்டால் பாதிப்புற்றவரை மீளவாழ்வளிக்கலாம். மேலும் பாதிப்புற்றவரை நீண்டகாலத்தின் பின் குணப்படுத்துவதை விட குறுங்காலத்தில் குணப்படுத்துவது இலகுவானது.

தமிழர் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட பாதிக்கப்படுவோரின் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. போர் நடைபெறும் நாடுகளில் சித்திரவதைக்குட்படுவோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தடுக்க முடியாது என்பது நிதர்சனமானது. குறிப்பாக அப்பாவி மக்களே சித்திரவதையின் தாக்கங்களுக்குட்படுகிறார்கள். பிழை ஏதும் செய்யாமல் தண்டிக்கப்படுகின்றோம் என்ற குற்ற உணர்வு சித்திரவதையின் பின்னரும் அவர்களது மரண பரியந்தம் வரை தொடரவே செய்யும். சம காலத்தில் நடைபெற்ற ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் யுத்தங்களில் வல்லரசு நாடுகளால் இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி அறிந்திருக்கிறோம். பல லட்சம் அப்பாவி மக்களின் வாழ்வியலையே சூறையாடிக் கொடிய யுத்தங்கள் தந்த பாடங்கள் அதிகம். இலங்கையைப் பொறுத்த வரையில் யுத்தம் ஏற்படுத்திவிட்ட வடுக்கள் ஏராளம். போரியல் உத்திகளில் ஒன்றான சித்திரவதைக்குட்படுத்தல் என்ற எண்ணக்கரு தமிழர் பிரதேசங்களில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குற்றம் ஏதும் இழைக்காத பல அப்பாவிப் பொது மக்களின் எதிர்கால வாழ்வு சூனியப் படுத்தப்பட்டிருக்கின்றது. குறிப்பாக இளைஞர்களின் எதிர் கால வாழ்க்கையை தேவையற்ற யுத்தம் சூனியப்படுத்தியிருக்கிறது. எனவே நடந்த சம்பவங்களை எண்ணி வருந்திக் கொண்டிருப்பதை விட நடப்பவை நல்லதாகவே இருக்கட்டும் என்ற தொலைநோக்குடன் பாதிப்படைந்தவர்களின் வாழ்வைக் கட்டமைக்க வேண்டியது அவசியம்.

முடிவாக அண்மைக்கால போர்ச் சூழலினால் சித்திவதைப்பட்டவர்களிடத்தில் பல தரப்பட்ட உடல், உளப் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப நடைமுறைச் சாத்தியமான கையாள்கை முயற்சிகளை மேற்கொண்டு அவர்களை இனங்கண்டு உதவுதல் வேண்டும். மேலும் இது சம்பந்தமான விளக்கங்கள். அறிவூட்டல்களை சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டு வர முடியும்.

(முற்றும்)

# வீட்டு வைத்தியம்

- முகத்தில் முடி உள்ளதா? பயத்தமாவும் வெந்தயப் பொடியும் கலந்து முகத்தில் இருக்கும் முடியில் தடவி உலர்ந்த பிறகு தேய்த்துக் கழுவவும்.
- மங்கலான கறுப்பான உதடுகளுக்கு கொத்தமல்லி இலைகளின் சாற்றைத் தினமும் இரவில் படுப்பதற்கு முன்பு தடவி வந்தால் 15 நாட்களில் நல்ல பயனைக் காணலாம்.
- கண்களைச் சுற்றியுள்ள கருவளையங்களைப் போக்க 5 பாதாம், 1 டீஸ்பூன் பாலேடு, 1/2 எலுமிச்சைச்சாறு, 1 டீஸ்பூன் புல்லர் மண் (Fuller earth), துருவிய பாதி உருளைக்கிழங்கு ஆகியவற்றை கெட்டியாக அரைக்கவும் கண்களுக்கு அடியில் தடவி 15 நிமிடங்கள் ஊறிய பிறகு மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்துக் கண்களைச்சுற்றி தடவி எடுக்கவும்.
- கண் இமையில் ஏற்படும் கட்டியைப் போக்க இதோ ஒரு எளிய வழி. சூடான சாதத்தைச் சுத்தமான மெல்லிய துணியில் போட்டுக் கட்டி கட்டியைச் சுற்றி ஒத்தடம் கொடுக்கலாம். விளக்கெண்ணெயையும் சாதத்தோடு கலக்கலாம்.



- காதுவலிக்கு துளசிச்சாறு இளசான வெங்காயச்சாறு இவற்றை லேசாகச் சூடாக்கிக் காதில் விடவேண்டும். விரைவில் வலி குணமாகும்.
- பொடுகைப் போக்க 20 வேப்ப இலைகளைக் கழுவி அதனுடன் 1டீஸ்பூன் வெந்தயம் போட்டு முதல் நாள் ஊறவைக்கவும். 1 மணி நேரத்திற்குப் பிறகு தலையைத் தூய்மை செய்யவும்.
- சூரியனின் கடும் உஷ்ணத்தைத் தவிர்க்க வெளியில் செல்லும் போது வெங்காயத்தை மென்று தின்றால் வெங்காயச் சாறு நல்ல பலன் தரும்.
- பச்சைப் பசலைக் கீரையைச் சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும்.
- சிறிதளவு பிளாக் சால்ட்டை புதினா இலைகளோடு சாப்பிட்டால் வயிற்றுவலி குறையும்.
- மரச்சிலாம்பு தோலில் குத்தி இருந்தால் குத்திய இடத்தில் சில துளிகள் அயோடின் ஊற்றவும். குத்தியது கறுப்பாக மாறும். சுலபமாக அதை வெளியே எடுக்கலாம்.
- வாய்த் துர்நாற்றத்தைப் போக்க காலையில் எழுந்து பல்துலக்கியவுடன் 5 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். துர்நாற்றம் போவதோடு ஜீரண உறுப்புக்களையும் சுத்தஞ் செய்யும்.
- சூரிய வெப்பத்தால் சருமம் கறுத்து விட்டதா? கவலை வேண்டாம். வேக வைக்காத பச்சை உருளைக்கிழங்கிலிருந்து சாறு எடுத்து சருமத்தில் தடவி விடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வாதமும் ரூஸோவின் கல்விக் கருத்துக்களும்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இந்நூலின் நோக்கங்கள் என இரண்டினை ரூஸோ குறிப்பிடுகிறார்.

1. மனிதனை இயற்கையோடு இயைந்தவனாக்குதல்
2. அனைத்தையும் உள்ளடக்கிய பரந்த கல்வியமைப்பை வெளிப்படுத்துதல்

ஆனால் இந்நூல் கல்விக்கான செயற் கட்டமைப்பைக்கொண்டிருக்கவில்லை. எனினும் கல்வியும் அதன் நோக்கங்களும் எவ்வாறு அமைய வேண்டுமென அது வலியுறுத்தியுள்ளது. எமிலியில் குழந்தைகளுக்கு உரிமைகள் வழங்குதலையும் சுதந்திரமாகச் செயற்பட வைத்தலையும் ரூஸோ முன் வைத்துள்ளார். குழந்தைகளது தனித்தன்மைக்கு மதிப்பளித்தல், அவர்களது நல்லியல்புகளில் நம்பிக்கை வைத்துச் செயற்படல், அவர்களது இயல்பான விருப்பங்களுக்கு ஊக்கங்களுக்கும் கௌரவமளித்து ஊக்கப்படுத்தல், விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல், மனவெழுச்சி தரும் செயற்பாடுகளைச் செய்ய வைத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதுடன் குழந்தைகளின் செயலாற்றல்களை வளர்க்க முடியுமென ரூஸோ நம்பினார்.

இயற்கையை நீங்குவதே சகல துன்பங்களுக்கும் காரணம். எனவே இயற்கைக்குத் திரும்புவதே துன்பங்களிலிருந்து மீளும் வழியாகும் எனக் குறிப்பிடும் அவர் இயற்கையான நாகரிகத்தையும் இயற்கையான மனிதனையும் உருவாக்குவதே கல்வியின் நோக்கமாக இருக்கவேண்டும் என வலியுறுத்தினார். கல்வியானது குழந்தையை விருத்தியாக்கும் இயற்கை வழிமுறையாக அமைய வேண்டும். கல்வியைப் பிள்ளைகளிடத்தில் திணிக்கக்கூடாது எனவும் அவர் கூறினார். சமூகம் தீமை நிறைந்தது. சமூகத் தீமைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டும். தீமையான சமூகத்திடமிருந்து பிள்ளைகளைப் பிரித்தெடுத்து இயற்கை முறையில் கற்பிக்க வேண்டும் என்பது அவரது கருத்தாகவிருந்தது. அவர் வலியுறுத்திய கல்வி எதிர் மறைக் கல்வி என்றும் சிலாகிக்கப்படுகிறது. நடைமுறையிலிருந்த ஒழுங்குமுறைப்பட்ட சமூகக் கட்டமைப்பை நிராகரித்த அவர் அதற்கெதிரான எதிர்நிலைப்பட்ட கல்வி அணுகுமுறையினை முன்வைத்தார் எனலாம். எதிர் நிலைக் கல்வி என்பதனுள் சமூக ஒழுங்கமைப்பிலிருந்து விடுதலையடைந்து இயற்கை ஒழுங்கமைப்புக்குள் நுழைவது முதன்மைப்படுத்தப்பட்டது. இக் கல்வியின் இயல்புகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. பிள்ளையை இயற்கைக்குத் திரும்பச் செய்து இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை உருவாக்குதல்.
2. முறைசார் பாட ஏற்பாடுகளிலிருந்து விலகி சுதந்திரமான செயற்பாடுகள் ஊடாகக் கற்கும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
3. பயனுள்ள வழிகளில் நேரத்தைச் செலவிட வழிப்படுத்தல்.
4. நூற் கல்விக்குப் பதிலாக சுயமாகச் சிந்தித்துக் கற்கும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
5. ஒழுக்கப் போதனைகள் தேவையற்றவை. இயற்கையில் கற்க அநுமதிப்பதே ஒழுக்கமாக வாழப் போதுமானதாகும்.

அவ்வகையில் பிள்ளைகளை வழிப்படுத்தல் சிறுபிள்ளைகளை முறைசார் கல்விக்கு உட்படுத்திச் சித்திரவதை செய்வதை ரூஸோ வெறுத்தார். உரிய பருவத்தின் இயல்பூக்கங்களுக்கும் மனவெழுச்சிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இயல்பான திறன்கள் உரிய பயிற்சிகள் ஊடாக ஏற்படுத்தப்பட்ட பின்னரே போதனைகளை வழங்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

எதிர் நிலைக் கல்வி என்பதனுள் சமூக ஒழுங்கமைப்பிலிருந்து விடுதலையடைந்து இயற்கை ஒழுங்கமைப்புக்குள் நுழைவது முதன்மைப் படுத்தப்பட்டது.

அவ்வகையில் கற்கும் பருவங்களை ரூஸோ நான்காகப் பாகுபடுத்தினார்

**நான்கு பருவங்கள்**

1. பிறப்பு முதல் 5 வயது வரையான காலப் பகுதி முதலாம் பருவமாகும். இப்பருவத்தில் குறுக்கீடுகள், பலாத்காரங்கள் அற்ற வகையில் குழந்தைகளின் உடலியக்கச் செயற்பாடுகளை வளர்தெடுக்கக் கூடியதாக அவர்களது ஆர்வங்களைத் தூண்டக் கூடியதாகப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றார்.
2. 5 வயது முதல் 12 வயது வரையான காலப்பகுதி இரண்டாம் பருவமாகும். இக்காலப்பகுதியில் இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் ஆராய்தல், அவற்றின் பண்புகளைப் புலன்களால் அறிதல், இயற்கை ஒலிகளைப் பிரித்தறிதல் ஆகிய இயல்புகள் பிள்ளைகளிடத்தில் காணப்படும். இதற்கேற்ற வகையில் புலன்களுக்கான பயிற்சியினை இப்பருவத்தில் மேற்கொள்ளவேண்டும் என்றார்.
3. 12 வயது முதல் 15 வயது வரையான காலப்பகுதி மூன்றாவது பருவமாகும். இயற்கை உலகு பற்றி அறியும் ஆர்வமும் ஆராய்வூக்கமும் இக்காலத்தில் காணப்படுமெனவும் அதைத் தூண்டும் வகையில் கதைகள், வரலாறுகளைக்கூறியும் பிரச்சினைகளை ஆராயும் சந்தர்ப்பங்களை வழங்கியும் கற்பிக்குமாறு ரூஸோ கூறுகிறார். அத்துடன் பிள்ளையின் பொருளாதார சுதந்திரத்திற்கு உதவக் கூடிய தொழிலையும் இக்காலத்தில் கற்பிக்க வேண்டும் என்றார்.
4. 15 வயது முதல் 20 வயது வரையான இறுதிப் பருவத்தில்தான் ஒழுக்கக் கல்வியை அளிக்க வேண்டும் எனக் கூறும் அவர் பாலுணர்ச்சியை அறநெறி சார்ந்த வழிப்படுத்துவதோடு பிறருடன் பரிவுடன் பழகி அவர்களை அறிவதன் வாயிலாக நல்ல மனவெழுச்சிகளை உருவாக்க வழி செய்ய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்துகிறார். இவ்வாறு உருவாகும் மனிதன் சிறந்த மனிதப் பண்புள்ள முழுமையான ஆளுமையுடையவனாக மாறுவான் என்பது ரூஸோவின் கருத்தாகும்.




எனினும் ரூஸோ பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. கீழ்ப்படிந்து நடந்து ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்படக்கூடிய வகையில் அவர்களுக்குக் கல்வியளித்தால் போதுமானது என்பது அவரது கருத்தாகும்.

இவ்வகையில் ரூஸோவின் இயற்கைவாத கல்விச் சிந்தனை பற்றி நோக்கினோம். இவரது சிந்தனைகள் இன்றளவும் முக்கியத்துவம் மிக்கவையாகவுள்ளன. பின்வந்த குழந்தைச் சிந்தனையாளர்கள் பெஸ்டலோஜி, புரொபெல், மொண்டிசூரி அம்மையார் ஆகியோர் இவரது கருத்துக்களை உள்வாங்கி நேர்சரி கின்டர்னார்டின் அமைப்புக்களை ஏற்படுத்தினர்.

இலங்கை உட்பட பல நாடுகளில் கலைத்திட்டங்களிலும் இயற்கை வாதம் மற்றும் ரூஸோவின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் இடம்பெறும் செய்து கற்றல் (Learning by doing) என்பது ரூஸோவின் கருத்தினடியாக வந்ததே. அதேபோல் 5 முறையில் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதும் ரூஸோவின் கருத்துக்களின் பாற்பட்டது. ஆரம்பக் கல்வியில் இவரது கருத்துக்களுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

'அவ்வகையில் ரூஸோவின் இயற்கைவாத சிந்தனைகளை பாடசாலைகளில் பிரயோகிக்கும்போது அதிகம் பயன் பெறலாம்' என்றார். **(முற்றும்)**

'ஞானத்தமிழ்'
(ஏழாலை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பூமராங்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"நீங்கள் எல்லாம் ஊர்ப் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு நகரப் பள்ளிக்கூடத்துக்குப் போய் என்ன சாதிக்கப் போறியள். இம்முறை யாருக்கும் விடுகைப் பத்திரம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்திருக்கிறம்.

எல்லோரும் இப்படியே போறதெண்டால் பள்ளிக்கூடத்தை ஆரம்பப் பள்ளியாக மாற்றிவிடலாம் போல கிடக்கு. பின்ன என்ன எல்லாக் கெட் டிக்காரப்பிள்ளையளும் இப்படியே போனால் மிச்சப் பின்தங்கிய பிள் ளைகளை வைச்சு மாடுதான் மேய்க் கலாம். எப்படி நல்ல பரீட்சை முடிவுகளை எடுத்துக் காட்டுவது. சித்தியடையும் வீதம் கூட மோசமாகத் தான் வரும் தயவுசெய்து வல்லிபுரத்தார் விடுகைப் பத்திரம் எடுக்கிற கதையை விட்டுட்டுப் போட்டு வாரும்" என்று தருமரத்தினத்தார் எரிஞ்சு விழுந்தார்.

வல்லிபுரத்தாருக்கோ மகனைப் பற்றிய அவனது எதிர்காலம் பற்றிய தனது மனக்கோட்டை எல்லாம் தகர்ந்து விழுந்தது போல இருந்தது.

இந்தப் பள்ளிக்கூடத்திலையும் சில ஆசிரியர்கள் நகரப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் சிலரை விட கல்வித்தரம் கற்பித்தல் முறைமை வழிகாட்டும் பாங்கு ஒழுக்கம் பேணும் முறை மனப்பாங்குகளில் சிறந்தவர்கள் தான். அதேசமயம் சில ஆசிரியர்கள் ஊருக்கை இருந்து கொண்டு தாங்கள் மட்டும் வசதியாக வீட்டுக்குப் பக்கத்திலை உள்ள பள்ளிக்கூடத்திலை சுகமாக வேலை செய்து கொண்டு தங்கடை பிள்ளையளை எல்லாம் நகரத்துப்பள்ளிக் கூடங்களிலை விட்டுப் படிப்பிக்கினம். ஆனால், அவை மட்டும் இங்கை படிபிக்கிற இலட்சணம் எப்படிச் சொல்வதென்று புரியவில்லை. எல்லாப்படிவங்கள் பதிவுகள் கனிப்பீடுகளை வகுப்பிலை வைத்து நிரப்பி வைத்துக் கொண்டிருப்பினம். பாடம் நடைபெறாது நிரப்பல் வேலைகள் தான் நடக்கும். கல்வியதிகாரிகள் வரும் போது இவர்களின் பதிவுகளைப் பார்த்துவிட்டு ஆகா ஓகோ என்று புகழ்ந்து விட இவர்களும் தங்களளவில் பெருமைப்பட்டுக் கொள்வதுதான் மிச்சம். ஆனால் கள நிலைவரம் மாணவர்ககளுக்குத்தான் புரியும். எல்லாத்துக்கும் மேலாக தாங்கள் படிப்பித்த காலத்தை வருடங்களில் எண்ணிப் பெருமைப்படுவது மட்டும் தான். அவர்களிடம் நல்ல மனப்பாங்கு இல்லையே. ஊர்ப்பள்ளிக்கூடத்தை வளர்க்கோணும் என்ற சிந்தனை அல்லது மனப்பாங்கு அறவே இல்லை.உத்தியோகம் பார்க்க வீட்டுக் அருகில் ஒரு இடம் கிடந்தால் போதும் என்ற நிலை தான். பின்னை என்ன அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல அதிபரே தனது பிள்ளைகளை நகரத்துப்பள்ளியிலை படிப்பித்துக்கொண்டு ஊர்ப்பிள்ளைகளை மட்டும் நகரப்பள்ளிக்குப் போக வேண்டாமென்று எப்படிச் சொல்லுவார். கேட்டால் பெற்றார் படிப்பிக்கிற பள்ளியிலை பிள்ளைகள் படிக்கக்கூடாது என்று புருடாவிடுவினம். இல்லை.

நான் கேட்குறேன் நகரத்துப் பள்ளிக்கூடங்களில் மட்டும் படிப்பிக்கிற அதிபர்களும், ஆசிரியர்களும் தங்கள் பிள்ளைகளையும் அங்கேயே வைத்துக் படிப்பிக்கினம் தானே. அப்ப கிராமத்துப் பள்ளிக்கு ஒரு நீதி நகரத்துப் பள்ளிக்கு வேறு ஒரு நீதியோ? மற்றையெல்லாம் படிக்காத முட்டாள் என்ற நினைத்துவிட்டினமோ. ஏமாற்றலாம் என்று நினைக்கின்றார்களோ? இவர்கள் கூட நகரத்துப் பள்ளிக்கூடங்களில படிப்பிச்சால் நிச்சயம் தங்கட பிள்ளைகளையும் அங்கை விட்டுத் தான் படிப்பிப்பினம். அது மட்டுமல்ல இந்த அதிபர் இருக்கிறாரே அவர் இங்கை பிள்ளையளை வைத்து பாடசாலைத் தோட்டத்திலை மாறிப்மாறிப் பயிர் ஏற்றிக்கொண்டுதான் இருக்கிறார். பொடியள் எந்நேரமும் தோட்டத்திலை ஏதோ வேலை செய்து கொண்டு தான் நிற்குதுகள். அதுகள் எப்படித்தான் படிக்குதுகளோ ராசாவுக்கு ஏற்ற மந்திரி மாதிரி அவருக்கு விவசாயப்பாட ஆசிரியராக வேலாயுதத்தார் கிடைச்சிருக்கிறார். இவர் எள் என்றால் அவர் எண்ணெயாக நிற்பார். அவர் வகுப்பிலை இருக்கிறமாதித் தெரியவில்லை. எந்த நேரமும் பொடியளைத் தோட்டத்திலை மேச்சபடிதான். குறைக்கு உதிலை வருகிற வருமானத்துக்கு கனக்கென்ன? குறைக்கு கட்டடங்களை ஒப்பந்தத்திலை எடுத்து அதிலையும் வேறு வருமானம் எனப் பெருமினார்.

தருமரத்தினத்தார் குரலைச் செருமிய படி என்ன வல்லிபுரத்தார் யோசனையில் ஆழ்ந்திட்டியள் என்ற போது தான் வல்லிபுரத்தார் சுயநினைவிற்கு வந்தார். தருமரத்தினத்தார் தொடர்ந்தார். ஒன்றுக்கும் யோசியாதையும் இஞ்சை படிச்சுப் பெரிய ஆளா வரேலாதோ. பாரும் பாசுபதியின்ரை மகன் நேசன் இங்கை படிச்சுத் தானே டொக்டராக வந்தான். குறைக்குப் படிக்கேக்கையே கூலி வேலை செய்து தான் படிச்சவன். உடனே வல்லிபுரத்தார் சொன்னார். நீங்கள் படிச்சனியள் உங்களுக்கு நான் எப்படிச் சொல்லுவது பிள்ளையளின்ர உளவியல் உங்களுக்குத் தெரியுந்தானே அதுகள் அங்கு படிக்கவேணும் என்று நிற்கேக்கை விருப்பமில்லாத இடத்திலை எப்படிப்படிக்கிறது என்று அதற்கு தருமரத்தினத்தார் சொன்னார் அதுகளுக்குச் சரியான விளக்கம் கொடுத்தாக் கேட்குங்கள். சும்மா மற்றப் பொடியளோடை எடுபடப் பார்க்குதுகள் என்று. அதற்கு வல்லிவுரத்தார் நீங்கள் அசெம்பிளியிலை நெடுகச் சொல்லியும் கேக்காததுகள் எங்கடை சொல்லை எப்படிக் கேட்குங்கள். இல்லைக் குறை நினையாதையுங்கோ கலா ரீச்சற்றை மகனுக்கு லிவிங் சேட்டிப்பிக்கேற் குடுத்தனீங்கள் தானே என்றார். அதுக்கு தருமரத்தினத்தார் சொன்னார் பிள்ளையளும் பெற்றோரும் ஒரே பள்ளிக்கூடத்திலை இருக்கப்படாது என்று. உடனே வல்லிபுரத்தார் நகரத்துப்பள்ளியிலை எல்லா ரீச்சர் மாரும் தங்கடை பிள்ளைகளை அதே பள்ளியிலை வைச்சுத் தானே படிப்பிக்கினம். அதுகள் நல்லாத்தானே படிக்குதுகள் சேர் என்று உடனே தருமரத்தினத்தார் சொன்னார். நீங்கள் என்ன கதைச்சாலும் பிரயோசனமில்லை விடுகைப்பத்திரம் தரமாட்டேன் எனக்கு வேலையிருக்கு நீங்கள போட்டு வாங்கோ என்று. வல்லிபுரத்தார் கோபத்துடன் நீங்கள் உங்கடை பிள்ளைகளை நகரத்துப்பள்ளியிலை படிப்பிச்சுச்கொண்டு ஊரார் பிள்ளைக்கு உபதேசம் செய்ய வேண்டாம். பக்கத்திலை இருக்கிற மாஞ்சோலை மகாவித்தியாலயமும் ஒரு கிராமத்துப்பள்ளிதான் அந்த அதிபர் தன்ரை மகளை அங்கேயே படிப்பித்து மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பேல்லையோ. சிறந்த முன்மாதிரியான வழிகாட்டியாக அவர் இருந்ததாலை இங்குள்ள பெற்றோர் எல்லோருமே தம் பிளளைகளை ஆங்கேயே படிக்கவைக்கினம். பள்ளிக்கூடம் இப்ப நல்லா முன்னேறிவிட்டது. நான் உங்களிட்டையிருந்து லீவீங் சேட்டிபிக்கேட் எடுக்கிற மாதிரி எடுக்கிறன் என்று கூறிவிட்டு வெடுகென எழுந்து வீடு நோக்கி நடந்தார்.

வீடு சென்று மனைவி வள்ளியம்மைக்கு நடந்ததையெல்லாம் கூறிவிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலத்துச் சென்று முறைப்படி நடந்ததையெல்லாம் ஆதாரங்களுடன் எழுதி மனுக்கொடுத்தார். அடுத்த சில தினங்களுக்குள் விசாரணையென அதிபரும், வல்லிபுரத்தாரும் அலைந்தனர். மிக விரைவில் விடுகைப்பத்திரம் வழங்கப்படவேண்டும் என்ற உத்தரவு கல்விப் பணிப்பாளரிடமிருந்து அதிபருக்குக் கிடைத்தது. வல்லிபுரத்தார் நெஞ்சை நிமித்தியபடி வந்து லீவீங்சேட்டிபிக் கேட்ப் பெற்றுச் சென்றார்.

தருமரத்தினத்தார் மனதில் பொருமியபடி அதைக்கொடுத்தார். இவ்வாறு வல்லிபுரத்தார் தன் மகனைப் படிப்பிப்பதற்காக பல தடைகளை பணக்கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தார். இப்போது வேந்தன் க.பொ.த சாதாரண தர, க.பொ. உயர் தரப் பரீட்சைகளிலெல்லாம் மிகச் சிறந்த பெறுபேறுகளை பெற்றது மட்டுமல்ல. நல்ல கீழ்ப்படிவுள்ள மாணவன் என்ற நற்பெயரையும் பெற்றிருந்தான். அவனுக்கு இப்போது மருத்துவக் கல்லூரி அட்மிசனும் கிடைத்தாயிற்று. இப்போது வல்லிவுரத்தார் ஒரு தடவை தருமரத்தினத்தாரை நினைத்துக் கொண்டார். அவருக்குத்தான் பாடம் புகட்டி விட்ட புளகாங்கிதத்தில் அவருடைய பணக்கஷ்டம் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல



பறந்தோடிற்று.

தருமரத்தினத்தாற்ரை நிலமையோ வேறு விதமாக இருந்தது. தன் ஏழு பிள்ளைகளையும் நகரப்பள்ளியிலை படிக்க வைச்சுக் குறைக்கு வீட்டிலை விசேட ரியூசன் வகுப்புக்கள் எல்லாம் ஏற்பாடு பண்ணியும் அவரது ஒரு பிள்ளையால் கூட குறைந்த பட்சம் கலைப்பிரிவில் கூட யுனிவெர் சிட்டியிலை ஒரு இடம் தன்னும் பெற முடியவில்லை என நினைத்து வேதனைப்பட்டார். எனினும் தன் செல்வாக்கைப பயன்படுத்தித்தன் பிள்ளைகளில் சிலரை அரசாங்க உத்தியோகங்களில் பின் கதவால் அமர்த்தி விட மற்றயவர்கள் நாட்டுச் சூழலைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். ஆக மொத்தில் ஒரு அதிபராக பெரிய பெரிய பட்டங்களை எல்லாம் பெற்றும் ஒரு பிள்ளையைத் தன்னும் கல்வியில் நல்ல நிலைக்குக் கொண்டு வர அவரால் முடியவில்லை. அதுதான் சொல்லுறது ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளருமெண்டு. ஊரார்பிள்ளைகளைக் கொண்டு மண்ணடிச்சதற்கு கடவுள் நல்ல தண்டனை கொடுத்து விட்டார். எத்தனை பிள்ளைகள் தோட்டத்திலை எந்த நேரமும் நின்று உழைச்சுக் கொடுத்ததுகள் அந்தப் பிள்ளைகள் விடுகிற பெருமூச்சு சும்மாவிடுமோ.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்



உலகில் உள்ள பிறப்புக்களில் ஈடு இணையற்ற பிறவி மனிதப் பிறவி. அதிலும் பெண் என்பவள் காத்திரமான இடத்தை வகிக்கிறாள். அதில் இருவிதமான பங்குகள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒன்று தாய் மற்றையது மனைவி. குழந்தைகளுக்குப் பாசமிகு தாயாகவும் கணவனுக்கு நல்ல மனைவியாகவும் விளங்குகின்றாள். இதனால் சமூகத்தில் பெண்ணுக்குரிய பொறுப்புகள் அதிகம். இதனால் பண்டைய தமிழிலக்கியங்கள் பெண்களின் பெருமைபற்றி சிலாகித்துரைக்கின்றன.

மனைவியே ஒருவனுக்கு நெருங்கிய உறவு. ஒரு ஆணின் ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னாலும் அவனது மரணபரியந்தம் வரை மனைவியின் பங்கும் பணியும் முக்கியமானவை. கணவனது நலத்தில் அக்கறை கொண்ட அன்பின் வடிவமாக திகழ்பவள் மனைவி. மகாபாரதத்தில் சிறந்த துணை யார்? என்ற கேள்வி வருகிறது. அதற்கு தருமர் சிறந்த துணை மனைவியே என்கிறார். கணவனிடத்தில் மனைவி எப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள் என்பது பற்றி பண்டைய புலவர்கள் புகழ்வதைச் சற்றுச் சிந்திப்போம்.

கம்பராமயணத்தில் ஒரு காட்சி. இராமர் தனது தம்பி இலக்குமணனுடனும் விசுவாமித்திர முனிவருடனும் மிதிலாபுரிக்குச் சென்று கொண்டிருக்கின்றனர். அரச வீதியை நெருங்கியதும் கன்னி மாடத்தின் மீது தோழியருடன் இருந்த சீதை இராமன் அழகைக் கண்டு வியந்து பார்க்கிறாள். அவள் நாணம், கற்பு அறிந்து மெய் சிலிர்த்து நிற்கிறாள். அகங்குழைந்து சொக்கி இமை கொட்டாது அவன் அழகில் மயங்கி நிற்கின்றாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும் அழிந்தவளாகத் தன்னை மறந்து நிற்கிறாள்.

சீதை சிந்திக்கிறாள், என்னுடைய நாற்குணங்களும் என்னிடமிருந்து விலகிவிட்டன. இதோ! இத்தெருவில் சென்ற இவர்தான் காரணம். என் கண் வழி நுழைந்த கள்வர் இவர்தான். பார்ப்பதற்குச் சிறந்த வீரனாக திகழ்கின்றார். அன்றியும் இவருக்கு குதிரை, தேர் முதலிய வாகனங்கள் இல்லையா? தாமரை மலர் போன்ற மென்மையான பாதங்கள் பதிய வெறுங் கால்களுடன் நடந்து வருகிறாரே! அவரது அடிகள் வருந்ததா? என்றெண்ணி கவலையுற்றாள். வருங்காலக் கணவன் இவன் தான் என்று குறிப்பறிந்து எனது கணவனின் வருத்தத்தை தனது வருத்தமாக எண்ணி ஏங்கும் பரிவு மனைவியிடத்தே தான் உண்டு என்ற கம்பனின் கற்பனை சிந்தனைக்குரியது.

'பெண் வழி நலனோடும் பிறந்த நாணோடும்
எண்வழி நிறைவோடும் எங்கும் காண்கிலேன்
மண்வழி நடந்தடி வருந்தப் போனவன்
கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்'

என்று கம்பர் பாடுகிறார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பின்வரும் சம்பவத்தினூடாக மனைவியின் மகிமை பற்றி புகழ்ந்துரைக்கிறார்.

கண்ணபிரான் இளவயதில் யசோதை வீட்டில் வளர்ந்து வருகிறார். கோபிகைகளுக்கு அருள் புரிவதற்காக அவர்களது வீடுகளுக்குச் சென்று தயிர் திருடி உண்டு வந்தார். இறைவன் பக்தர்களுக்கு தனது அருட்கடாட்சத்தை கொடுக்கத் திருவுளம் கொண்டால் நேரடியாகக் கொடுக்கமாட்டார். பல சோதனைகளை நிகழ்த்தி மறைமுகமாகவே தனது அருட்பிரவாகத்தை நிகழ்த்துவார். இச் சம்பவமும் அப்படியே. திருமாலின் அவதாரத்தின் நோக்கமும் அது போலதான் என்பதை ஈண்டு சிந்திக்கற்பாலது.

சரி விடயத்திற்கு வருவோம். நாள் தோறும் தயிர், பால் காணமாற் போவதை அவதானித்த கோபிகைகள் யாரின் வேலையாக இருக்குமோ என நினைத்தனர். இது கண்ணனின் வேலையாகத்தான் இருக்கும் எனக்கருதி ஒரு நாள் தயிர் திருடும் வேளை கண்ணனைக் கண்டு பிடித்தனர். உடனே யசோதையிடம் சென்று முறையிட, யசோதை கண்ணனைப் பிடித்து விசாரித்தாள். அதற்கு கண்ணன் அம்மா! இவர்கள் சொல்லுவது முழுப் பொய் இத்தனை பேர் வீடுகளுக்கும் சென்று ஒரே நேரத்தில் சிறுவனாகிய நான் திருடி உண்பேனா? எனது வயிறு கொள்ளுமா? என வினாவி இவர்கள் கணவனை வஞ்சித்து அவர்களுக்காக வைத்திருந்த பாலையும் தயிரையும் இவர்கள்தான் குடித்துவிட்டு என்மீது பழியை போட்டுவிட்டனர் எனக் கூறினான். அவனது பேச்சிலும் வாதத்திலும் நியாயம் இருப்பதைப் புரிந்து கொண்டு தனது மகன் தவறிழைத்திருக்க மாட்டான் என்று கூறி கோபிகைகளை அன்னை யசோதை கண்டித்தாள். இதனால் அவமானமுற்ற கோபிகைகள் திருட்டுக் கண்ணனுக்கு பாடம் படிப்பிக்க எண்ணி அவன் வரும் வேளையில் மறைந்திருந்து கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கு காத்திருந்தனர்.

வழக்கம் போலவே கண்ணன் அவர்கள் வீடுகள் தோறும் சென்று பாலும் தயிரையும் பருகும் வேளையில் கோபிகைகள் கையும் மெய்யுமாகப் பிடித்து திருட்டுக் கிருஷ்ணா! உன் அன்னைக்கு முன்னால் எங்களை அவமானப்படுத்தினாய் என்று ஏசியபடி முதுகில் மத்தால் அடித்தனர். இவ்வாறு மத்தினால் கோபிகைகள் அடிப்பதை பொறுக்காத கண்ணனின் மனைவியாகிய இலக்குமி கண்டு வருந்துவதாக மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார்.

இலக்குமி கூறுகிறார் பெருமானே இப்படி வாருங்கள் உங்களுக்கு என்ன தலையெழுத்து? இப்படி இந்த பெண்களிடம் மத்தடிபடுகிறீர்களே? நான் பிறந்த இடம் பாற்கடல் எனவே எனது தாயார் வீட்டிலேயே சுகமாகப் படுத்துறங்குங்கள். கண்விழிக்கின்ற போதெல்லாம் வயிராற பாலைக்குடியுங்கள் என இலக்குமி கூறுவதாக மீனாட்சி சுந்தரனார் பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறார்.

'முத்த நகை விதுமுகப் பொதுவியர் கடப்பான்
முழுக்க வன் தாழ் வலித்து
மூடுங் கவாடந் திறந்து மனைபுக்குண
முனிந்தவர் பிடித்தடிக்கும்
மத்தடி பொறுத்து வரு துணை முகிலை யுண்டுகண்
வளர்த் துறைதி என்று
வயிறுளைந் தீன்ற வொரு பாற்கடல் குடியாக்கும்
மடமானை அஞ்சலிப்போம்'

என்கிறார்.

எஸ். நதிபரன் B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



‘பிள்ளைகளுக்குக் கதை சொல்லுதல்’ என்ற பழக்கம் வெகுகாலமாகவே எம்மிடம் உள்ளது. அம்மம்மா கதை கூறுவது, அப்பம்மா கதை கூறுவது, தாய், தந்தையார் பிள்ளையை மடியில் வைத்துக் கதை கூறுவது என கதை சொல்லும் மரபு பலவாறாக உள்ளது.

பாட்டி வடை சுட்ட கதையிலிருந்து அரசன் கதை, குடியானவன் கதை, வியாபாரியின் கதை என இவைகளின் நீளம் மிக மிக அதிகம். இன்றைய அவசர யுகத்தில் கதை சொல்லும் மரபு மிகவும் குறைந்து விட்டது. ஆயினும் பிள்ளைக்கு கதை சொன்ன சம்பவம் ஒன்றை இங்கே பதிவு செய்கிறேன்.

கணவன் மனைவி இருவருமே அரச உத்தியோகம் பார்ப்பவர்கள் அவர்களுக்கு பாடசாலை செல்லும் வயதில் ஒரு மகனும், முன்பள்ளி வகுப்பில் இன்னுமொரு மகனும் உள்ளனர். நாளாந்தம் இரவு வேளை உணவுக்குப் பின்பு கதை சொல்வது வழக்கம். ராஜா, ராணிக் கதை சொல்வதாயின் அவர்கள் தமது நாட்டு மக்களை நேசித்து, வறுமையான குடி மக்களுக்கு உதவிகள் செய்து, அவர்கள் நல்ல நிலையை அடைய உதவினார்கள் எனக் கதை சொல்லுவார்கள்.

ஒரு ஊரில் ஓர் விவசாயி இருந்தார். அவரது குடும்பம் விவசாயம் செய்து நிறைய காசு உழைத்து வீடு கட்டி, ரி.வி வாங்கி, மோட்டார் சைக்கிள், கார் வாங்கினார்கள். கஷ்டப்பட்ட சனங்களுக்கெல்லாம் உதவி செய்து அவர்களையும் நல்ல நிலைக்கு கொண்டு வந்தார்கள் என இன்னுமொரு கதை இருக்கும்.

இக்கதைகளால் அப் பிள்ளைகளின் செயல்கள் நற் பழக்க வழக்கங்கள் உள்ளதாக இருப்பதனைப் பார்க்க முடிகிறது.

கதை சொல்வதன் ஊடாக நல்ல சிந்தனைகள் சிறு பராயத்தில் ஊட்டப்படல் வேண்டும். சமூக விழுமியங்கள் சீரழிகின்றன குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. சமூக அமைதியின்மை ஏற்படுகிறது என்றெல்லாம் குரல்கள் எழுகின்றன. இவற்றைச் செய்யும் சமூகத்தின் சிறு பிரிவை திருத்த முயற்சி எடுக்கவேண்டும். வளரும் சிறார்களுக்கு நல்ல கதைகளை சொல்வதன் ஊடாக நல்ல எண்ணங்களை உடையவர்களாக மாற்ற முடியும். பிள்ளைகளுக்கு கதை சொல்லும் மரபும் புத்துயிர்ப்பு பெற வேண்டியுள்ளது.

பாடசாலை மட்டத்தில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு நாளாந்தம் 10 நிமிடமாவது நல்ல சிந்தனைகளைப் புகட்டக் கூடிய கதை சொல்லும் பழக்கமொன்று உருவாக்கப்படல் வேண்டும். புராணங்கள், இதிகாசங்கள் வீடுகளில் கூறும் மரபிலிருந்து வெகு தூரம் வந்து விட்டடோம். ஆனாலும் சம காலத்துடன் ஒட்டியதான நல்ல கதைகளைக் கூறும் மரபை உருவாக்கி ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்புக்கு நாம் உதவ வேண்டும்.

- சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சென்ற வாரத் தொடர்ச்சி)

தரிசனத்தின் ஊடாக தாலாட்டுப் பாடல்களையும், விளையாட்டுப்பாடலையும், கதைப்பாடலையும், தொழிற்பாடலையும், நோய்ப்பாடலையும், சுற்றத்தார் பெருமை கூறும் பாடல்களையும், ஒப்பாரிப்பாடலையும் எமக்குத் தந்துள்ளது.

தாலாட்டுப் பாடல் என்பது குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்கடப்படும்.

தாயின் அன்பையும் சேயைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும். பணக்கார வீட்டிலும் தாய் குழந்தையை தாலாட்டுகிறாள். ஏழை வீட்டிலும் தமிழிசையால் அமுதூட்டி தாய் தாலாட்டுகிறாள். தாலாட்டு பாடலில் உறவினர் பெருமை எல்லாம் வருகின்றது. எடுத்துக் காட்டாக,

'மாமன் அடித்தானோ மாதாளங் கம்பாலே
அண்ணன் அடித்தானோ ஆவாரங் கொம்பாலே
பாட்டி அடித்தாளோ பால்வடியும் கம்பாலே
ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ
ஆரடிச்சு நீ அழுதாய் கண்மணியே கண்ணுறங்கு'

என பாடல் வருகின்றது. மேலும் பிள்ளையினது பெருமையை நோக்கும் போது

**'கொவ்வை இதழ் மகளே - என்
குவிந்த இரத்தினமே
கட்டிப் பசும் பொன்னே என்
கண்மணியே கண்வளராய்'** என பாடல் போக்கிக் கொள்ளவும் கூட்டுப் பணிபுரிதலை இசைவு கொள்ளவும் பாடப்படும் பாடல்கள் அடங்கும். நாட்டுப் புறமக்கள் வேலை செய்யும் போது களைப்பு தெரியாமல் இருக்கவும், மனமகிழ்ச்சிக்காகவும் பாடப்படுவன. வேளாண்மை தொழிற்பாடலில் விதை விதைத்தது. நீர் பாய்ச்சி களையெடுத்து கதிர் அறுத்து போரடித்து வண்டியில் ஏற்றிச்செல்லும் வரை பல வளர்ச்சிப் படிகள் உள்ளன. மீனவப் பாடல்களில் அம்பாப்பாட்டு கடற்பாட்டு என்பன முக்கியம் பெறுகின்றன. இத் தொழிற்பாட்டு அம்சங்களை 'வாழ்வும் இசையும்' நிகழ்வில் சிறப்பாக காணமுடிந்தது.

நையாண்டிப் பாடல் என்பது ஒரு நபரையோ நிகழ்வையோ கேலி செய்யும் நோக்குடன் நகைச்சுவையுடன் பாடப்படும் பாடல் நையாண்டி அல்லது கேலிப் பாடல் எனப்படும். பொதுவாக சமூக சீரமைப்பு நோக்கிலும் வளர்ச்சி நோக்கிலும்

மதித்தமுகம்

தங்கம் பதித்த முகம் தரணிமார் மதித்த முகம்' என வருகின்றது. இவ்வாறாக நாட்டார் இசையானது வாழ்வியற் கூறில் சிறப்பாக உள் ளடங்கியுள்ளது.

'இசையும் வாழ்வும்' எனும்



# மனித வாழ்வியல் கூறான
# நாட்டார் ஆடலும் பாடலும்

வைக்கவும் பாடப்படும் பாடலாகும். தாலாட்டுப் பாடல்கள் கிராமிய மக்களின் வாழ்க்கையோடு அவர்களின் உணர்வுகளோடு பின்னிப்பிணைந்தவை. தாலாட்டுப் பாடல் இனிய இசை. அவ்விசையில் குழந்தை மயங்கி தூங்குகின்றது. தால் என்பது நாவைக்குறிக்கும். நாவினால் ஓசை எழுப்பி குழந்தையை உறங்க வைப்பதே தாலாட்டு. தாய் தன் குழந்தையை மடியிலோ, தோளிலோ, கைகளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுவது வழக்கம். பாடல்களில் குழந்தையின் அருமை, அதன் விளையாட்டுப் பொருட்கள், மாமன் பெருமை ,குலப்பெருமை என்பன சுட்

வருகின்றது. இத்தகு தாலாட்டு நிகழ்வினை வாழ்வும் இசையும் ஆனது தன்னுள் பரிணமித்து இருந்தது.

விளையாட்டுப் பாடல்களிலே சிறுவர்கள் விளையாடும் போது பாடப்படும் பாடல்கள் அடங்கும்.

**'ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு, பாலாறு, பாலாறு'**

என்ற பாடல் சிறுவர்களின் விளையாட்டு பாடலுக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

தொழிற்பாடல்களிலே தொழிற்பணிகளில் ஈடுபடும் போது வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடனும் அலுப்பை

அவை மீறப்படும் போது எழும் அந்நியர் சீற்றம் காரணமாக பாடப்பட்டவைகளாக கருதப்படுகின்றன. அந்நியர் ஆட்சியின் போது

' என்ன பிடிக்கிறாய் அந்தோனி
எலி பிடிக்கிறேன் சிஞ்சாரே
பொத்திப் பொத்திப்பிடி அந்தோனி
பூரிக் கொண்டோடுது சிஞ்சாரே' என

வரும் பாடல் கிண்டல் செய்வதாக அமைகின்றது. அவ்வாறே கதை ஒன்றை பாடுகின்ற மரபிலமைந்த பாடல்கள் கதைப்பாடல்கள் எனப்படும். எடுத்துக்காட்டாக,

'ஆக்காண்டி ஆக்காண்டி எங்கெங்கே முட்டை
வைத்தாய் கல்லைப்பிரிந்து கடலருகே முட்டை
வைத்தேன்' என்ற பாடலை குறிப்பிடலாம்.

ஒப்பாரிப்பாடலானது கிராம மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது. வாழ்வின் தொடக்கத்தில் பாடப்படுவது தாலாட்டு. முடிவில் பாடப்படுவது ஒப்பாரி தாய் தந்தை கணவன் பிள்ளை, உற்றார் உறவினர் எவரெனும் இறந்து விட்டால் மனதில் எழும் துன்ப உணர்வே ஒப்பாரி ஆகும். இதனால் இறந்தவரின் வரலாறு தெரியாதவர் கூட அப் பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக,

'பொன்னான மேனியிலே ஒரு
பொல்லாத நோய் வந்தென்ன
தங்கத் திருமேனியிலே ஒரு
தகாத நோய் வந்தென்ன' என்ற பாட

லில் நோய் தாக்கம் புலப்படுகின்றது. அவ்வாறே மனைவி புலம்பும் பாடலிலே

'முத்துப்பதித்த முகம் முதலிமார்

நிகழ்வினுடைய ஆற்றுகைத் தன்மையை நோக்கும் போது மனித வாழ்வின் பின்னிப் பிறந்த கூறாக இசையும் நடனமும் ஒன்றிணைந்துள்ளது. நடனம் எனும் மூலகத்தினுள் இசையும் இசை எனும் மூலகத்தினுள் நடனமும் இணைந்து பிரிப்பின்றி காணப்படுகிறது. இத்தகு நடனமும் இசையும் எனும் நிகழ்வானது நடனமும் இசையும் கலந்த பல்கதம்ப நிகழ்வாக வெளிப்பட்டது. வாழ்வியல் அடிப்படைகளை எமது பாரம்பரியமாக கிராமிய மண்வாசனையில் பயன்படுத்தப் பட்டு வந்தமையை மீள வெளிக்காட்டியது. இதற்கான இசை நெறியாள்கையை பத்மநாதன் ஆசிரியர் அவர்கள் நேர்த்தியாக வடிவமைத்துள்ளார்.

முழுவதும் ஆண்களை அங்கத்தவர்களாக கொண்ட பாடசாலையில் ஆண்களை சிறப்பான வகையில் பெண்பாகமாடவைத்ததும் அவர்களது துல்லியமான ஆடல் நடிப்பு வெளிப்பாட்டு அசைவுகளை வெளிப்படுத்த வைத்தது. ஆசிரியரது நெறியாட்சி திறன் வெளிப்பாட்டை புலப்படுத்தி நிற்கின்றது. இத்தகு நாட்டார் இசையின் பாடலின் மீள் தரிசனமானது எமது சமூகத்தின் பண்பாட்டு கூறுகளை மீள நினைவுபடுத்திக் கொள்வதற்கு நல்லதோர் காட்சியாக ஆடலையும் பாடலையும் கொண்டமைந்தமையானது சிறப்பிற்குரிய விடயமாகும்.'

(முற்றும்)

எஸ்.ரி.குமரன்

## ஆன்மிக ஓசை

**புதிய ஆசைகளை வளர்க்காதீர்கள். அதுவே நீங்கள் செய்திருக்கிற தவறில் இருந்து மீள்வதற்கு சரியான பிராயச்சித்தம் ஆகும்.**
- ரமண மகரிஷி

**நான் உன்னை பொல்லாதவர்களின் கைக்கு தப்புவித்து உன்னை பலவந்தரின் கைக்கு நிங்கலாக்கி விடுவிப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்.**
- ஏரேமியா

**தன் வரவுக்கு தக்கபடி செலவு செய்பவனும் எல்லா செயல்களிலும் நடுநிலையை கைக்கொள்பவனும் நிச்சயம் ஏழ்மை அடையமாட்டான்.**
- நபிகள் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் 9 இல் பிறந்தவர்களுக்குரிய பலன்கள் - செவ்வாய்

இயற்கையிலேயே துடிப்பும், வேகமும் கொண்ட 9 எண்காரர்களின் சிறப்பு இயல்புகளை இங்கு விவரமாகப் பார்ப்போம். இந்த எண்ணின் நாயகர் முருகப் பெருமான் அவரே தேவர்களுக்குச் சேனாதிபதி யாவார்.

எனவே, சேனாதிபதிக்குள்ள கட்டுப்பாடும், திறமையும், சவால்களைத் துணிந்து எதிர்கொள்ளும் தன்மையும் இவர்களுக்கு உண்டு. இரத்தத்தைப் பார்த்து இவர்கள் பயப்பட மாட்டார்கள். தெருச்சண்டை, யுத்தக்களத்தில் இவர்களைப் பார்க்கலாம். மேலும் அதிகாரமுள்ள பொலிஸ், இராணுவம் ஆகிய தொழிலில் மிகவும் விருப்பம் உடையவர்கள் இவர்கள் தான்! மற்றவர்கள் பயப்படும் காரியங்களைத் துணிந்து ஏற்றுக்கொள்வார்கள். துணிவே துணை என்று நடைபோடுவார்கள்.

இவர்களுக்கு முன்கோபமும் படபடப்பும் உண்டு. உடலும் சற்று முறுக்கேறி நிற்கும். நான்கு எண்காரர்களைப் போல் இவர்களுக்குக் கோபம், ரோஷம், தன்மானம் ஆகிய மூன்று குணங்களும் நிறைந்திருக்கும். எனவே இவர்களுக்கு எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கும். இவர்கள் எத்தொழிலிலும், பதவியிலும், நிர்வாகத்திலும் வல்லவர்கள். இவர்கள் ஓரளவு ஒல்லியானவர்களே! ஆண்களில் பெரும்பாலோர் மீசை வளர்ப்பதில் விருப்பம் உடையவர்கள். நாவன்மை மிகுந்தவர்கள்.

இவர்களில் அதிர்ஷ்டசாலிகள் மென்மேலும் அதிர்ஷ்டசாலிகளாகவும், துரதிர்ஷ்டசாலிகள் தொடர்ந்து துரதிர்ஷ்டசாலிகளாகவும் இருப்பார்கள். இந்த எண்காரர்களுக்கு உடலில் அடிக்கடி காயங்கள், விபத்துக்கள் போன்றவை ஏற்படும். ஆயினும் அதைக் கண்டுபயப்பட மாட்டார்கள். 9 ஆம் எண்ணில் பிறந்தவர்களின் பெயர்கள் 8 ஆம் எண்ணில் மட்டும் இருந்து விட்டால் தற்கொலை முயற்சிகளும் வாகனங்களால் விபத்து உண்டு.

இந்தச் செவ்வாய்க் கிரக ஆதிக்கர்கள் சைக்கிள், மோட்டார் சைக்கிள், லொரி, காளை, மாண்டு வண்டிகள், குஸ்தி, நீச்சல் போட்டிகள், மிருகவேட்டை, உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் மிகவும் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள்.

## [illegible]

சர்க்கஸ் விளையாட்டுக்களில் விருப்பமுடன் ஈடுபடுபவர்கள் இவர்கள்தான். கார், சைக்கிள், லாரி, பஸ் ஆகியவற்றை மிகவும் வேகமாக ஓட்டுபவர்கள் இவர்கள் தான். இவர்கள் எதற்கும், எப்போதும் பயப்பட மாட்டார்கள்! மேலும் தங்களது நோக்கத்திற்காகக் கடுமையான உழைக்கவும் தயங்க மாட்டார்கள்.

இவர்கள் எப்போதும் அலைபாயும் மனத்தை உடையவர்களாக இருப்பார்கள். இறைவன் இவர்களின் மனத்தை அமைதியாக வைத்திருக்க அனுமதிப்பதில்லை போலும்! இவர்கள் நடப்பதில் மிகவும் பிரியமுடையவர்கள்! இவர்களுக்கு என்ன தான் வசதியிருப்பினும் கால் தேய நடந்து செல்வதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம். எந்த ஒரு அரசாங்க அலுவலகத்திலும் தனியார் ஸ்தாபனங்களிலும் தலைமைப் பதவியில் இவர்கள் நன்கு புகழ் பெறுவார்கள். இவர்கள் உழைப்பதில் சுகம் காண்பார்கள். சோம்பலை இவர்கள் வெறுப்பவர்கள். ஊர் சுற்றுவதிலும் அலாதிப் பிரியம் உடையவர்கள்.

இவர்கள் சுதந்திரப் போக்கு உடையவர்கள்! அவசரக்காரர்கள்! உணர்ச்சி மயமானவர்கள்! பிடிவாத குணம் இயற்கையிலேயே உண்டு. ஆபத்து மிகுந்த தொழிலில் இறங்கிவிடுவார்கள். அதில் வெற்றியும் பெறுவார்கள். இவர்களின் சண்டைக் குணத்தால், குடும்பத்தில் அடிக்கடி குடும்பப் பிரச்சினைகள் ஏற்படும். தங்களை எல்லோரும் மதிக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இவர்களுக்கு எப்போதும் உண்டு.

எந்த நிர்வாகத்திலும் தலைமைப் பதவி அல்லது பொறுப்புகள் கிடைத்தால்தான், இவர்கள் அவற்றில் மிகவும் தீவிரமாகவும், சிறப்பாகவும் ஈடுபட்டு, அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்கள். இல்லை என்றால் அவைகளை அப்படியே விட்டுவிட்டு ஒதுங்கி விடுவார்கள். பின்பு அந்தக் காரியங்கள் கெட்டழிந்தாலும்கூட அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட மாட்டார்கள்.

### இவர்களது திருமணம்

இவர்கள் தாம்பத்தியத்தில் மிகுந்த விருப்பமும், வேகமும் உடையவர்கள். தங்களது நட்பு எண்களான 3, 5, 6, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களை (பிறவி எண், கூட்டு எண்) மணந்து கொண்டால், இவர்களுக்கு ஆனந்தமான திருமண வாழ்க்கை அமையும். குழந்தை பாக்கியம் இவர்களுக்கு உண்டு! ஆண் குழந்தை நிச்சயம் ஏற்படும்.

2, 11, 20, 29, 8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களையும், கூட்டு எண் 2, 8 வரும் பெண்களையும் திருமணம் செய்யக்கூடாது! திருமண வாழ்க்கையே கசந்துவிடும். சில அன்பர்கள் மனைவியின் கொடுமையால் மனைவியை விட்டு ஓடத் துணிந்து விடுவார்கள். திருமண நாளின் எண்கள் 3, 6, 9, 1 ஆகியவை வந்தால், குடும்ப வாழ்க்கை நன்கு அமையும்.

### இவர்களது நண்பர்கள்

3, 6, 9 ஆகிய எண்களை உடைய அன்பர்கள் இவர்களுக்கு நல்ல நண்பர்களாகவும், கூட்டாளிகளாகவும் அமைவார்கள். 1 ஆம் திகதி பிறந்தவர்களின் உதவி நடுத்தரமானதுதான். 2, 8 எண்காரர்களின் நட்பையும், கூட்டையும் தவிர்த்துவிட்டால், பல நஷ்டங்களை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ளலாம்.

### 9 ஆம் திகதி பிறந்தவர்கள்

வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறுபவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்கள். சுதந்திரமான எண்ணங்கள் நிறைந்தவர்.




ஓட்டப் பந்தயத்தில் ஒலிம்பிக் பதக்கம் வாங்கவேண்டுமென்று ஆசைப்பட்டாயே அதற்கான முயற்சியை எடுக்கிறாயா?
ஆமாம் பினான்ஸ் கம்பனி ஒன்று துவங்கியிருக்கிறேன்




நிருபர்:உங்களுக்குத் தெரிந்த தமிழ் வார்த்தைகள் என்ன?
நடிகை: காதல் பணம்




உங்க பெண்ணும் அடுத்த வீட்டுப் பையனும் எப்போது ஓடிப் போனாங்க?
காலையில் நடைப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது




இந்த இசையமைப்பாளர் பாவம் ஏன்?
அவரால் அவரது கலியாண அல்பத்தைக் கூட வெளியிட முடியவில்லையே!

செய்யவேண்டும் என்ற ஆதங்கம் உடையவர்கள் மற்றவர்களை அடக்கி ஆளவிரும்புபவர்கள். உற்றார் உறவினர்கள் கூட அடிக்கடி சண்டைபோடும் குணமும் உடையவர்கள்.

### 18 ஆம் திகதி பிறந்தவர்கள்

போராட்டமே இவர்களது வாழ்க்கையாக இருக்கும். இவர்கள் மற்றவர்களின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தமாட்டார்கள். எதையும் தங்களின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வரவே முற்படுவார்கள். பேச்சுத் திறமை அதிகம் உண்டு. கட்டைப் பஞ்சாய்த்து செய்து வைக்கும் குணத்தவர்கள்.

அவசரம், பிடிவாதம், சுயநலம் ஆகியவற்றை விட்டுவிட்டால், இவர்கள் பெரும் சாதனைகளைப் படைக்கலாம். காதலிலும் அதிகாரம் காட்டி, அதன் மூலம் பிரச்சினைகளை உண்டு பண்ணிக் கொள்வார்கள். எப்போதும் உணர்ச்சி வசப்பட்டவர்கள், மன அமைதியை [illegible]கொள்ள வேண்டும்.

### 27 ஆம் திகதி பிறந்தவர்கள்

அறிவும், ஆற்றலும் நிறைந்தவர்கள். பலர் இராஜ தந்திரிகளாகவும் விளங்குவார்கள். சமூகத்தில் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு நிச்சயம் கிடைக்கும். இரவு நேரத்தில் வேலை செய்வது இவர்களுக்கு பிடிக்கும். இவர்களது திட்டங்கள் எல்லாம் நிச்சயம் வெற்றி அடையும்.

மனம் தளராமல் உழைப்பவர்கள். மற்ற இரு திகதிகளில் பிறந்த அன்பர்களை விட அமைதியானவர்கள். செயலில் நம்பிக்கை உடையவர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டாகும்.

நல்ல செயல்களின் மூலம் பேரு, புகழும் அடைவார்கள். சுதந்திர மனப்பான்மை உண்டு. நிதானமாக, அவசரப்படாமல் (சீரான திட்டத்துடன்) செயல்பட்டு வெற்றியைச் சீக்கிரம் அடைவார்கள். ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசித்தே காரியங்களில் ஈடுபடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஒஸ்மானியா கல்லூரியை மீளக்கட்டியெழுப்ப பழைய மாணவர் சங்கம் உதயம்




(ஏ.எஸ்.எம்.ஜாவித் )

போரினால் பாதிக்கப்பட்டு சிதைவடைந்துள்ள யாழ். ஒஸ்மானியா கல்லூரியை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் பழைய மாணவர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் இக் கல்லூரியை மீளக் கட்டியெழுப்பத் தேவயான உதவிகளை வழங்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இங்கு ஒஸ்மானியா கல்லூரின் பழைய மாணவர் சங்க பொதுச் செயலாளர் எம். எஸ். ஜஹாங்கிர் கருத்து வெளியிடுகையில், இருபது வருடங்களுக்குப்பின் தற்போது யாழ்.மாவட்டத்திற்கு முஸ்லிம்கள் மீளக்குடியமரச் செல்கின்றனர். இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் பிரபல்யமான ஒஸ்மானியக் கல்லூரியை மீளவும் சிறப்பாக இயங்க வைக்க வேண்டிய தேவையும் அவசரமும் ஏற்பட்டுள்ளது.

எனவே, அதனை கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு யாழ். முஸ்லிம் களுக்கும் அதில் கல்வி கற்ற பழைய மாண வர்களுக்கும் உள்ளது. அந்த வகையில் கடந்த 20 வருடங்களாக செயலிழந்து போன பழைய மாணவர் ஒன்றியத்தை புதிதாக உருவாக்கி அதனை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளோம்.

வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் ஹாட்லி கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி போன்ற பழைமை வாய்ந்ததும் பிரபல்யமானதுமான கல்லூரிகளுடன் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியும் கல்வி நடவடிக்கைகள் மட்டுமல்லாது விளையாட்டுத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் சரிசமமாக போட்டிபோட்ட ஒரு கல்லூரியாகும்.

யாழ்.மாவட்டத்திலும் முஸ்லிம் களுக்கென ஒரு தனியான பாடசாலை தேவையென உணரப்பட்டதன் விளைவாக அன்றைய கல்விமான்களும், புத்தி ஜீவிகளும் 1963ஆம் ஆண்டு ஜனவரி ஐந்தாம் திகதி யாழ். மாவட்டத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி உருவாக்கப்பட்டது. அப்போது ஏழு ஆசிரியர்களுடன் அதன் முதற்கல்வி நடவடிக்கை ஆரம்பமானது.

இவ்வாறு உருவாகிய மேற்படி கல்லூரி பின்னர் சமூகத்தில் பல்வேறுபட்ட புத்தி ஜீவிகளையும் அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும் உருவாக்கியது. இவ்வாறு கல்வியில் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி பாடசாலையின் சகல கல்வி நடவடிக்கைகளுக்கும் 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதுடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இவ்வாறு சிறந்து விளங்கிய மேற்படி பாடசாலை 1990 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள 27 வருட கால வளர்ச்சி 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இன்று வரை சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளமையானது அனைவரையும் கவலைக்குள்ளாக்கும் விடயமாகும்.

தற்போது,முஸ்லிம் மக்கள் சிறுகச் சிறுக மீளக்குடியமர மக்கள் நாட்டம் கொண்டுள்ளனர் இதன் காரணமாக அவர்களின் கல்வியின் பால் உள்ள புத்துணர்ச்சியில் முன்னேற்றம் காணப்பட்டு வருகின்றது.

இன்றவரை சுமார் 622 குடும்பங்கள் மீளக்குடிமர்ந்துள்ளனர். அத்துடன் தற்போது 80 மாணவர்கள் சிதைந்துபோன பாடசாலைக் கட்டிடத்தின் மத்தியில் ஓரளவு திருத்தியமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத்தில் ஆறு நிரந்தர ஆசிரியர்களையும் 10 தற்காலிக ஆசிரியர்களையும் கொண்டு கல்வி நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. எதிர்வரும் ஜனவரியில் மேலும் 40 மாணவர்கள் மீளக்குடியமர்ந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட பதிவு செய்துள்ளனர். சிதைந்துபோன பாடசாலையை கட்டி யெழுப்புவதற்கும், அதன் ஏனைய தேவைகளை நிறைவுசெய்து கொடுப்பதற்கும் எம் முடன் இணைந்து செயற்பட ஆர்வமுள்ள அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு பழைய மாணவர்கள் அனைவரிடமும் வேண்டுகோள்விடுக்கின்றோம்.

ஒஸ்மானியக் கல்லூரியை உரியவாறு புனரமைக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [07.01.11 முதல் 13.01.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

**★ மேஷம்**

மேடராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான நற்பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பண விரயம் சற்று அதிகமாக அமையும். பலாபலன் ஏற்படும் குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமூகமான பலாபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. மாணவர்களுக்கு நன்மையுண்டு. பெண்களுக்கு மனமகிழ்வு உண்டு.

**★ இடபம்**

இடபராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு இழுபறி நிலையிருக்கும். தொழில் நிலைகளில் அலைச்சல், வேலைப் பளு என்பன இருக்கும். குடும்பத்தில் சற்று சுமாரான மத்திமமான பலனே ஏற்படும். பண வரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் நிலை தொடரும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு அனுகூலம் உண்டு.

**★ மிதுனம்**

மிதுனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் மன நிறைவுகளும் அமையும். பண வரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் பலனுண்டு. மனைவி மூலமாக அனுகூல நிலைகள் ஏற்படும் பலனுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு நன்மைகள் அமையும். மாணவர்களுக்கு நன்மையுண்டு. பெ்ணகளுக்கு வெற்றி உண்டு.

**★ கடகம்**

கடகராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலா பலன்களே அமையும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் உண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை தொடரும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு மனசஞ்சலம் இருக்கும்.

**★ சிம்மம்**

சிம்மராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் ஏற்படும். பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலனுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் மன நிறைவும் ஏற்படும் நிலையுண்டு. பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் சற்று இழுபறி நிலைகள் இருக்கும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு. பெண்களுக்கு மனநிறைவு ஏற்படும்.

**★ கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும் நிலை உண்டு. தொழில் நிலையில் சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான நிலை ஏற்படும். உடல் நிலையில் திடீர் சுகயீனம். மருத்துவ செலவு இருக்கும். கடன் நிலைகளில் நிதானமான செயற்படவேண்டும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு. பெண்கள் நிதானம் தேவை.

**★ துலாம்**

துலாம் ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் வேலைப் பளு, அலைச்சல் போன்ற பலாபலன்கள் அமையும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் அமைய இடமுண்டு. சகோதரர் வழியில் சிறு சிறு மனக் கஷ்டம் ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு மனக் கஷ்டம் ஏற்படும். பண வரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. பெண்களுக்கு அனுகூலமுண்டு.

**★ விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றமான பலாபலன்கள் ஏற்படுகின்ற நிலையுண்டு.

குடும்பத்தில் மகிழ்வும், மன நிறைவுகளும் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சுமூகமான பலாபலன் ஏற்படும்.

மாணவர்களுக்கு வெற்றி உண்டு. பெண்களுக்கு மகிழ்ச்சி உண்டு.

**★ தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானமான வேண்டும். தொழில் நிலைகளில் முன்னேற்ற கரமான பலன் உண்டு. பண வரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும். குடும்பத்தில் சிறு சிறு மந்த நிலை மருத்துவ செலவு ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. பெண்களுக்கு சஞ்சலம் உண்டு.

**★ மகரம்**

மகர ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. தொழில் நிலைகளில் வேலைப்பளு சற்று அதிகம் இருக்கும். எதிர்பாராத வகை செலவினங்கள் அதிகம் ஏற்படும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.

**★ கும்பம்**

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். முயற்சிகளில் வெற்றிகள் உண்டு. பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையில் ஏற்படும். குடும்பத்தில் மிகவும் மன நிறைவுகளும் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு. பெண்களுக்கு நன்மையுண்டு

**★ மீனம்**

மீனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. அலைச்சல், திடீர் பிரயாணங்கள் என்பன அமையும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. தொழில் சார்ந்த பிரயாணங்கள் ஏற்படும் பலனுண்டு. கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமுண்டு. பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பேராசிரியர் பத்மநாதன் இதில் குறியீடாக எடுத்துக் கொள்ளப்பட்ட இடதுபக்கத்தில் உள்ள மூன்றாவது குறியீட்டை கவிழ்ந்த வடிவில் உள்ள 'ணகர' எழுத்தெனக் கூறி இப்பெயரை 'கோவேதன்' என வாசிக்கிறார் (தியாகராஜா 2004: viii). இப்பெயரின் முதல் எழுத்தாக வரும் 'கோ' என்ற சொல்லுக்கு அரசன், வேந்தன் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இது 'ராஜா' என்ற வடமொழிச் சொல்லுக்கு சமனான கருத்தைக் கொடுக்கிறது. இதன் மூலம் இம்முத்திரைச் சாசனம் இங்கு தமிழ் சிற்றரசு இருந்ததற்கான ஆதாரமாக கூறப்படுகிறது (Indrapala 2001: 324-25).

20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்டபட்ட நாணயவியலாளர் சேயோன் தனது ஆய்வின் போது பிராமி எழுத்துப் பொறித்த அரிய பல நாணயங்களைக் கண்டுபிடித்துள்ளார் (SeYon 1998: 94,nos. 3-10). இவை அக்றுகொடாவில் கிடைத்த நாணயங்களின் காலத்திற்குரியவை என்பதை அவற்றின் எழுத்தமைவைக் கொண்டு கணிக்க முடிகிறது. ஆயினும் இந்நாணயங்கள் தொடர்பாக ஆசிரியரால் பிரசுரிக்கப்பட்ட நூலில் உள்ள புகைப்படத்தில் நாணயங்களில் உள்ள எழுத்துக்கள் தெளிவற்றிருப்பதனால் அவற்றின் பெயர்களைச் சரிவர வாசிக்க முடியவில்லை. இருப்பினும் ஒரு சில எழுத்துக்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிக்குரியவை என்பதை அடையாளம் காண முடிகிறது. இதன் மூலம் இங்கு தமிழோடு பிராகிருத மொழியும் புழக்கத்திலிருந்தமை தெரிகிறது. இவை மேலும் உறுதி செய்வதில் அண்மையில் இங்கு தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட பேசிரியர் கிருஷ்ணராஜாவால் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த பல மட்பாண்ட ஓடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. (கிருஷ்ணராஜா 1998). இவ்வரலாற்று ஆதாரங்களின் பின்னணியில் வைத்து நோக்கும் போது மஹாவம்ஸம் கூறும் கி.மு.6ஆம் நூற்றாண்டிலேயே வட



இலங்கையில் நாக அரசமரபு இருந்ததெனக் கூறலாம். அதில் கந்தரோடை வடஇலங்கையின் புராதன குடியிருப்புக்களின் தலைமைக் குடி யிருப்பாக அடையாளம் காணப்பட்டிருப்பதால் முதலாவது குறுநில அரசுகள் அங்கு தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இந்நிலையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பெரியபுளியங்குளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.2 ஆம் நுாற்றாண்டைச் சார்ந்த நான்கு கல்வெட்டுகள் (Parana-vitana 1970 : nos. 338-41). அங்கு அதிகாரத்திலிருந்த நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறுவதை நோக்கும் போது வடஇலங்கையின் தொடக்க கால அரசுகள் பலவும் நாக மரபுடன் தொடர்புடையவையாகக் கருத இடமுண்டு.

இம் மரபு பிற்காலத்திலும் தொடர்ந்ததை உறுதிப்படுத்துவதில் உடுத்துறையில் கிடைத்த நாணயம் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஏறத்தாழ கி.பி 1-2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நாணயத்தின் இருபக்கங்களிலும் தமிழ் மொழியில், தமிழ்ப்பிராமி எழுத்தில் அமைந்த பெயர்கள் காணப்படுகின்றன (படம் -2). இதன் முற்பக்கத்தில் உள்ள பெயரை 'நாகபூமி' என வாசிக்கமுடிகிறது. ஆயினும் சரிதவியல் அறிஞர் பேராசிரியர் சுப்பராயலும் இப்பெயரின் இறுதியில் வரும் எழுத்தை 'வ' என எடுத்து இதை நாகவம்சம் என வாசிப்பதே பொருத்தம் எனக் கூறுகிறார் இதன் வாசிப்பு எதுவாக இருப்பினும் இப்பெயர்கள் வடஇலங்கையில் நாக அரசமரபு இருந்ததற்கு முக்கிய ஆதாரமாக காணப்படுகின்றன என்பதில் ஐய

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

மில்லை. நாணயத்தில் பின்பக்க த்தில் உள்ள பெயரைப் 'பொலம்' என வாசிக்க முடிகிறது (புஷ்பரட்ணம் 2003:117). இது பண்டைய காலத்தில் நாணயத்தைச் சுட்டும் பெயர் என்பதற்கு சங்க இலக்கியத்தில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டமைய அரசு வளர்ச்சி பெறத் தொடங்கிய

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காலகட்டத்தில் தென்னிலங்கையைப் போல் வடஇலங்கையிலும் சிற்றரசுகள் இருந்துள்ளமை தெரிகிறது. தென்னிலங்கையில் சிற்றரசர்களாக இருந்த சிலரே பின்னர் அநுராதபுர மன்னர்களாக ஆட்சிக்கு வந்ததைப் பாளி இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. அவர்களுள் நாகச் சிற்றரசர்களும் அடங்குவர். இதை உறுதிப்படுத்தும் வகையில் இந்நூல்கள் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த துல்லநாஹ (கி.மு.119), கல்லநாஹ (கி.மு.109 - 103), சோறநாஹ (கி.மு. 63-51), மகாநாஹ (கி.பி.7-19) இளாநஹ (கி.பி.33-43), மல்லநாஹ (கி.பி.136 - 143), குஜநாஹ (கி.பி.186 - 187) குஞ்சநாஹ (187-189), ஸ்ரீநாஹ (கி.பி. 189 - 209), அபயநாக (231-240) ஸ்ரீநாஹ கி.பி.240-242), ஆகிய மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. வரலாற்றாய்வில் இவர்கள் சிங்கள மன்னர்களாக சித்தரிக்கப்பட்டிருந்தாலும் அவர்களில் சிலர் தமிழ் மொழி பேசிய நாக இனக்குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம் என்பதை அவர்களில் பெயர்கள் எடுத்துக்காட்டுகின்றன (பத்மநாதன் 2006:33-34).

இந்த இடத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம் அநுராதபுரத்தில் ஆட்சியாளராக இருந்த மன்னர்களில் பலரும் அநுராதபுரத்திற்கு தெற்கே மிகத் தொலைவில் உள்ள மஹாகமை போன்ற இடங்களில் சிற்றரசர்களாக இருந்தவர்கள் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அதே நூல்கள் அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக் கிட்டிய தூரத்தில் இருந்த நாகதீபத்தில் நாகச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததாக கூறியுள்ள போதிலும் அவர்கள் அநுராதபுர மன்னர்களாக வந்தது பற்றி ஒரு இடத்தில்தானும் கூறவில்லை. இந்த வேறுபாட்டிற்கு ஆதிகாலம் தொட்டு நாகதீபம் அநுராதபுர நாகரிக வட் டத்திற்குள் உட்படாது தனியொரு ஆட்சிக்குட்பட்ட பிராந்தியமாக இருந்தமை காரணமாக அல்லது பௌத்த மதத்தை யும், அம்மத்தைப் பின்னபற்றிய மக்க ளின் வரலாற்றையும் முதன்மைப்படுத் திக் கூற எழுந்த பாளி இலக்கியங்கள் அம் மதத்திற்கு மாறான பண்பாடு கொண்ட மக்களின் வரலாற்றை கூறாது தவிர்க்க விரும்பியமை காரணமா என்பது விரிவாக ஆராயப்படவேண்டிய அம்சங்களாகும். ஏனெனில் இக்காலத்தில் அநுராதபுர அரசை தமிழரும், ஏனைய மன்னர்களும் மாறி மாறி ஆட்சி செய்ததாகக் கூறும் இந் நூல்கள் தமிழ் மன்னர்களைப் பொதுவாக வர்த்தகராக, படையெடுப்பாளராக வந்து அநுராதபுர அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்த மன்னர்கள் எனக் கூறுவதன் மூலம் அவர்களை நாகதீபத்திற்கு அப்பால் கடல்கடந்து வந்த அன்னிய நாட்டவர் எனக் காட்ட முற்பட்டுள்ளன.

(தொடரும்)

## எதிரும் புதிரும்

நான் நானாக வாழ நீயோ
நான் இப்படித்தான்
வாழ வேண்டும் என்கிறாய்
என்பாட்டில் நான் வாழ
நான் சொல்வதைக் கேளென
நீ பின்னால் விரட்டுகிறாய்

என் சுதந்திரத்தை பறித்து
சுடுகாட்டில் வாழும் அநுபவத்தை
வெளிக் கொணர்கின்றாய்

நான் எனக்கான தேடல்களுடன்
நானாகத்தானே வாழ முடியும்
நான் நீயில்லை நீ நானில்லை
என்பதை நீ புரிய வேண்டும்.

நான் உன்னைப் போல்
அழகாய் உடை உடுத்தலாம்
ஆபரணங்களையும் அணியலாம்
ஆனாலும் உன்னைப் போலவே
எல்லாவற்றிலும்
ஒத்துப்போக முடியாது.

நானும் நீயும்
எதிரும் புதிருமானவர்கள்
வடதுருவம் தென்துருவம் அல்ல
பிரித்து வைத்த வடகிழக்கும் அல்ல
வானத்தில் மிளிரும்
சூரிய சந்திரர்களும் இல்லை
நீயும் நானும்
தனித்துவமானவர்கள்.

நான் நானாகவும்
நீ நீயாகவும் வாழவே
இறைவன் எம்மைப் படைத்தான்.



நாம் நாமாக வாழும் போது
நமக்குள் புரிந்துணர்வு ஏற்படும்
என்னை நீ
அடக்கி ஆள முயலகையில்
என்னுள் இருந்தும்
சிங்கம் சீறிப் பாயும்.

நான் நானாகவும்
நீ நீயாகவும்
வாழப் பழகிக் கொள்வோம்
அப்போதுதான்
நாம் நாமாக வாழ முடியும்
நமக்கான சுதந்திரத்துடன்

பூநகரி - புரட்சிகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு



அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புலமைப் பரிசில் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட தரம் 10 மற்றும் தரம் 5 மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (படங்கள்:- ஏழாலை நிருபர்)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம். (படம்:- தெல்லிப்பழை நிருபர்)



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படத்தில் காணலாம். (படம்:- பளை நிருபர்)



வேலணை பிரதேச செயலக வீடமைப்பு திணைக்களத்தால் வீடு அமைப்பதற்கான நிதி உதவி வழங்கப்பட்டது. வீட்டிற்கான அடிக்கல்லினை சரவணை கிழக்கு கிராம உத்தியோகத்தர் கா.கணேசலிங்கம் நாட்டுவதையும் அருகில் ஈ.பி.டி.பி கட்சியின் வேலணை பிரதேச பொறுப்பாளர் மற்றும் வீடமைப்பு திணைக்கள [illegible] ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- நெடுந்தீவு நிருபர்)



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல்பராமரிப்பு நிலைய நிகழ்வில் சிறுவன் ஒரு வருக்கு ஏடு தொடக்கப்படுவதையும் பின்னணியில் சிறுமிகள் முப்பெரும் தேவிகளின் உடைய அணிந்து அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரசபை, யாழ்ப்பாணம்,

# வெற்றி நடைபோடும் இந்திய அணி...



கடந்த ஆண்டு உலக கிரிக்கெட்டில் பல அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்த ஆண்டாகும். டெஸ்ட் தரவரிசையில் மாற்றம், இந்தியாவின் அதிரடி மாற்றங்கள், இலங்கை அணியின் விஸ்பரூபம், அவுஸ்திரேலிய அணியின் கட்டுக்கள் குலைப்பு, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளின் எழுச்சி, பாகிஸ்தான் கிரிக்கெட்டில் சூதாட்டப் புயல் என்று 2010 ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகம் பல சுவையான அம்சங்களுடன் நகர்ந்து சென்றது.

அந்தவகையில் இந்திய அணி டெஸ்ட் அரங்கில் அசைக்கமுடியாத நிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணியை பின்தள்ளி முதலாவது இடத்தினைத் தொட்டதுடன் பல தடங்களைப் பதித்து புதிய ஆண்டுக்குள் நுழைந்துள்ளது.

பங்களாதேஷ் அணிக்கு எதிராக டெஸ்ட் தொடருடன் கடந்த ஆண்டை ஆரம்பித்த இந்திய அணி தொடரை 2-0 என்று நிலையில் வென்று வெற்றியுடன் தனது பயணத்தினை ஆரம்பித்தது. இந்த வெற்றியுடன் வீறுநடை போட ஆரம்பித்த இந்தியஅணி அதன் தாகத்தினைக் சற்றும் குறைத்துக்கொள்ளவில்லை.

ஜூன் மாதம் இலங்கையில் நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடரில் வெற்றிபெற்று ஆசிய சம்பியன் பட்டத்தை நீண்ட நாட்களுக்குப் பிறகு தனதாக்கிக்கொண்டது. பின்னர் மீண்டு இலங்கைக்கு வந்த இந்திய அணி இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரை சமன் செய்தது.

இங்கு தான் இலங்கை அணியின் சுழல் நாயகன் முத்தையா முரளிதரன் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட்டுக்கள் என்ற இமாலய இலக்கை அடைந்து தனது டெஸ்ட் வாழ்க்கைக்கு ஓய்வு கொடுத்தார்.

பின்னர் தன் சொந்த மண்ணில் உலகின் முன்னணி அணியான அவுஸ்திரேலியாவை எதிர்கொண்ட இந்திய அணி லக்ஷ்மணின் அபார ஆட்டத்திலும் இஷாந்தின் பந்துவீச்சிலும் டெஸ்ட் தொடரை வென்று முதன் முதலாக அவுஸ்திரேலிய அணிக்கு தொடர் முழுதும் தோல்வியை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து ஆண்டின் இறுதியில் நியூஸிலாந்து அணிக்கு தன் சொந்த மண்ணில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து தன்னை உலகில் சிறந்த முன்னணி அணியாக உலகிற்கு படம்பிடித்துக் காட்டியது. அவ்வணியினுடனான டெஸ்ட் தொடரை வென்றதோடு கம்பீர் தலைமையிலான இளம் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள்தொடரில் போட்டி முழுவதையும் வென்று தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில் இந்த வெற்றின் உத்வேகத்துடன் தென்னாபிரிக்காவுக்கு பறந்த இந்திய அணி அங்கு சவால் நிறைந்த ஆடுகளத்தில் மிகத் திறமையாக ஆடிவருகின்றது. இதில் ஆண்டின் இறுதியில் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் அரங்கில் 50 ஆவது சதத்தினைப் பதிவு செய்தார். இவ்வாறு கடந்த ஆண்டில் அதிரடி வேகத்துடன் பல சாதனைகளைத் தனதாக்கிக் கொண்டு வந்த இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டிலும் பல சாதனைகளை பதிவு செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

இந்திய அணிக்கு பெரும் பலமாக அதன் தூண்களாக விளங்கும் லக்ஷ்மண், டிராவிட் ஆகியோரை ஒரு நாள் போட்டிகளில் இந்திய அணி களமிறக்குமாயின் இந்த ஆண்டும் இந்திய அணிக்கே உரிய ஆண்டாக அமையும் என்பது மறுப்பதுக்கில்லை. உலகின் எந்தவொரு அணிக்கும் சவாலாக விளங்கும் இவர்கள் டெஸ்ட் போட்டிகளில் அணியின் இக்கட்டான சூழ்நிலைகளில் அதனை வெற்றிக்கு நகர்த்திச் செல்லும் திறமைகொண்டவர்கள். எந்தவொரு பந்து வீச்சினையும் கண்டு அஞ்சாத இவர்கள் டெஸ்ட் போட்டிகளில் தங்களின் நிலையான ஆட்டத்தினைப் பதிவுசெய்திருப்பது தெரிந்ததே. இந்நிலையில் இவர்கள் ஒரு நாள் அணியிலும் இடம்பெற்றால் இந்தியாவின் வெற்றிகளுக்கு மறுபேச்சில்லை என்றே கூற வேண்டம்.

உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் 43 நாட்களே உள்ள நிலையில் இந்திய அணி தன்னை தயார் படுத்தும் வகையில் சவால் நிறைந்த தென்னாபிரிக்க மண்ணில் அவ்வணியுடன் விளையாடி வருவது அதற்கு உலகக்கிண்ண தொடருக்காக வெற்றிப்பாதையை இலகுவாக்கும் என்பது மறுப்பதற்கில்லை. அதுவும் சொந்த மண்ணில் உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறும் போது இந்திய அணி தன் ஆதிக்கத்தினை நிச்சயம் வெளிப்படுத்தும் என்பது உண்மையே.

எனவே கடந்த ஆண்டிலேயே உலகின் முன்னணி கிரிக்கெட் அணியாக தன்னை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ள இந்திய கிரிக்கெட் அணி இந்த ஆண்டில் அதனை இன்னும் பல சாதனைகளுடன் தொடரும் என்பது சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday January 07, 2011